www.tamilarangam.net


# களத்தில்

நாம் ஒன்றுபட்ட மக்களாக - ஒரே தேசிய சக்தியாக - அணிதிரண்டு, எமது எதிரியின் சவாலை எதிர்கொள்ள வேண்டும்.

- தமிழீழத் தேசியத் தலைவர்

(15.07.1998) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (165) அன்பளிப்பு: 60 p


# மனித உரிமை சாசனப் பொன்விழா ஆண்டில் தமிழர்களை மரணக்குழிக்குள் புதைக்கும் சிறிலங்கா

## "300 முதல் 400 அப்பாவித் தமிழர்கள் கொன்று புதைக்கப்பட்ட மரணக்குழிகளை அடையாளம் காட்டவும் தயார்"

### - சிறிலங்கா இராணுவத்தினரே நீதிபதி முன் தகவல் வெளியிட்டனர்

### ★ இவ்விடயத்தில் ஐ.நா வும் சர்வதேச அமைப்புக்களும் உடன் கவனம் செலுத்த வேண்டுமென புலம்பெயர் தமிழர்கள் வற்புறுத்தல் ★

சந்திரிகா அரசாங்கம் சமாதான யுத்தம் என்ற போர்வையில் அப்பாவித் தமிழ் மக்களை கொன்று குவித்து இனஅழிப்பு செய்து வருவது உலகறிந்த உண்மை. இந்த இன அழிப்பின் உச்சக்கட்டமாக தான் ஆக்கிரமித்துள்ள தமிழர் தாயகப் பகுதிகளில் ரூவாண்டா பாணியில் தமிழ்மக்களைக் கொன்று குவிக்கும்

மரணக்குழிகளை இயக்கி வருகிறது. இந்த உண்மையை சிறிலங்கா இராணுவத்தினரே சிறிலங்காவின் நீதிபதி முன்னால் வெளியிட்டனர். சிறிலங்கா இராணுவத்தின் முன்னாள் லான்ஸ் கோப்ரல் சோமரட்ண ராஜபக்ஸ, முன்னாள் பிரைவேட் டி.எம். ஜயதிலக ஆகியோரே சிறிலங்கா இராணுவத்தின் உயர் அதிகாரிகளால் நடத்தப்படும் இக் கொலைப் புதைகுழிகள் குறித்து தகவல் வெளியிட்ட்வர்களாவர். சிறி லங்கா இராணுவ மேலதிகாரிகளால் இரவில் அனுப்பப்படும் உடல்களை இராணுவத்தினர் இப் புதை குழிகளுள் போடுவார்கள் என தெரிவித்த முன்னாள் லான்ஸ் கோப்ரல் சோமரட்ண ராஜபக்ஸ தம்மால் இப் புதைகுழிகளை அடையாளம் காட்ட முடியும் எனவும் அவற்றுள் 300 முதல் 400 உடலங்கள் உள்ளதாகவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவியான கிரிஸாந்தி குமாரசாமி பள்ளிக்குச் செல்லும் வழியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கடத்திச் செல்லப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டதும் அவரைத் தேடி இராணுவ முகாமுக்குச் சென்ற கிரிஸாந்தியின் தாயார் ராஜம்மா அவரின் தம்பி பிரணவன் அயலவர் சிதம்பரம் கிருபாமூர்த்தி ஆகியோரைக் கொலை செய்தது தொடர்பாக நடைபெற்ற வழக்கில் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நிமால் திஸாநாயக்கா , நீர்கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி காமினி அபயரட்ண பலப்பிட்டிய மேல் நீதிமன்ற நீதிபதி அன்ட்ரூ சோமவன்ஸ ஆகியோர் முன்னிலையிலே 1ம் எதிரியான லான்ஸ் கோப்ரல் சோமரட்ண ராஜபக்ஸ 7ம் எதிரியான பிரைவேட் டி.எம். ஜயதிலகா ஆகியோர் தமிழ் மக்கள் மரணப்புதைகுழிகளுள் புதைக்கப்படும் உண்மையை வெளியிட்டனர்.

இவ்வழக்கில் 1ம் எதிரி 7ம் எதிரி உட்பட 5 இராணுவத்தினருக்கும் ஒரு சிறிலங்கா பொலிசாருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

ஆயினும் இம் மரண தண்டனைகளுக்கு திகதி குறிக்கும் உரிமை சிறிலங்கா ஜனாதிபதிக்கு இருப்பதாலும் மரண தண்டனையை ஆயுட் சிறைத் தண்டனையாக மாற்றும் வழக்கம் சிறிலங்காவில் இருப்பதாலும் அரசியல் காரணங்களினால் இவர்களது தண்டனைகள் மாற்றம் பெற்றுவிடும் எனவும் இது இப்படுகொலைகள்

தொடர்ச்சி 2 ம் பக்கம்.....

# டயனா நினைவாக - கண்ணிவெடிக்கு எதிராக எழும் உலகில் சிங்களப் படைகள் இழைக்கும் கொடுமைகள்

❄ 6 ஆண்டுகளில் 1800க்கு மேற்பட்டோர் கால்கள் இழப்பு

❄ மாதாந்தம் 80 முதல் 100 மக்கள் பாதிப்பு

சிறீலங்கா அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராக நடாத்தி வரும் இன அழிப்பு யுத்தத்தினால் தமிழ் மக்கள் அடைந்து வரும் பாதிப்புக்கள் சொல்ல முடியாத அளவுக்கு அதிகரித்து வருகின்றது. உலகில் இளவரசி டயானாவின் நினைவாக கண்ணி வெடிகளுக்கு எதிரான ஒப்பந்தங்களுக்கும் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கான செயற்பாடுகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வரும் இன்றைய கால கட்டத்தில், யாழ்குடா நாட்டில் மட்டும் ஆறு வருடங்களில் 1800க்கும் மேற்பட்ட பொதுமக்கள் சிங்களப் படைகளால் புதைத்து வைக்கப்பட்ட கண்ணி வெடிகளுக்குத் தங்கள் கால்களைப் பறி கொடுத்துள்ளனர் என்னும் புள்ளி விபரம் வெளியாகி உள்ளது. இவர்களில் 1448 பேர் 30 வயதுக்கு குறைவானவர்கள் என்ற செய்தி கேட்பவர் நெஞ்சங்களை வெடிக்க வைக்கின்றது. மேலும், மாதாந்தம் 80 முதல் 100 பொது மக்கள் இவ்வாறு கால்களைப் பறி கொடுத்து வருகின்றனர் எனவும் யாழ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர். சிவராஜா தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஐக்கிய நாடுகள் சபையும் சர்வதேச மனிதநேய அமைப்புக்களும் தகுந்த கவனம் செலுத்த தவறி வருவது புலம் பெயர் தமிழ் மக்களிடையே ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தி உள்ளது. ஒரு சந்ததியையே

தொடர்ச்சி 2 ம் பக்கம்.....



தன்னையும் - உருவையும் முழுவதும் மாற்றி தனிமையில் இருப்பது சரித்திரம் எழுதவோ......

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

சிறீலங்கா அரசு தமிழீழ மக்களை இனக்கொலை செய்து வருகின்றது என்பதற்கு மற்றொரு பகீரங்க சாட்சியத்தை ஆக்கிரமிக்கப்பட்டுள்ள யாழ்.குடாநாட்டில் கடைமை புரிந்த சிங்கள இராணுவத்தினர் சிறிலங்கா நீதிமன்றத்தில் வெளியிட்டுள்ளனர். கிருசாந்தி கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்ட இடத்தில் தங்கள் உயர் அதிகாரிகளால் கொல்லப்பட்டு தம்போன்றவர்களால் புதைக்கப்பட்ட 300 முதல் 400 தமிழர்களின் புதை குழிகளை தாம் அடையாளம் காட்டத் தயார் என்பதே அந்தச் சாட்சியம். ஒருவர் அல்ல இரு படையினர் இந்தத் தகவலை நீதிபதிகள் முன் வெளியிட்டுள்ளனர்.

காலந் தாழ்த்திய தகவலாயினும், அப்பாவித் தமிழீழ மக்களின் உயிருக்கும் உடலுக்கும் தினம் தினம் அழிவுகளை ஏற்படுத்தி வரும் சிறிலங்கா அரசுக்கு, இனஅழிப்பை ஊக்கப்படுத்தக் கூடிய வகையில் நிதி உதவிகளும் ஆயுதவழங்கல்களும் இராணுவப் பயிற்சிகளும் அளித்து வரும் சர்வதேச நாடுகளைக் கண்ணைத் திறக்க வைக்கும் தகவலாக இது அமைகின்றது.

இதே ஆடி மாதத்தில் தான் 1983 ல் தமிழர்கள் மீது சிறிலங்கா அரசின் ஆதரவுடனான இனஅழிப்புக் கலவரம் சிறிலங்காவின் தலைநகரான கொழும்பில் நடாத்தப்பட்டது. இந்த இனக்கொலைகள் தொடர்பாக விசாரணை நடாத்தப்பட வேண்டுமென 53 பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு கோரிக்கை விடுத்தனர். உலகின் பல நாடுகளின் பத்திரிகைகளும் ஏகோபித்த குரலில் தமிழின அழிப்பு பற்றி பந்தி பந்தியாக எழுதித் தள்ளின. ஐக்கியநாடுகள் சபையில் கூட சிறிலங்காவுக்கு எதிரான தீர்மானம் கொண்டு வரப்பட்டு இரண்டு வாக்குகள் வித்தியாசத்தில் தோற்றது. அந்நேரத்தில் ஐக்கிய நாடுகள் சபை உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறினமையே, தமிழர்களைத் தொடர்ந்தும் சிங்களப் படைகள் அழித்து வருவதற்குக் காரணம் என, அந்நேரத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை செயற்பாட்டாளராக கடமையாற்றிய லியோ கூப்பர் தனது 'இனஅழிப்புக்கான முற்பாதுகாப்புகள்' என்னும் நூலில் பகீரங்கமாகக் குற்றம் சாட்டியும் உள்ளார்.

அவரது கூற்றுச் சரியென்பதை உறுதிப் படுத்தும் வகையில், 1995ல் இதே ஆடி மாதத்தில் நவாலி புனித பீற்றர் தேவாலயத்தில் மக்களைத் தஞ்சம் புகுமாறு அறிவித்த அதே சிறிலங்கா அரச படைகளே, அத் தேவாலயத்தின் மீது குண்டுகளை வீசி பச்சிளம் குழந்தைகள் முதல் வயோதிபத் தாய்மார் ஈறாக 200 தமிழ் உயிர்களை படுகொலை செய்தனர். இது குறித்து உலகுக்கு தகவல் வெளியிட்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரும், சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரால் கடுமையாக எச்சரிக்கப்பட்டனர். பிரித்தானியாவைத் தலைமை அலுவலகமாகக் கொண்ட 'கபோட்'



## மரணக்குழிகள்

சர்வதேச அரச சார்பற்ற நிறுவத்தினர், சிறிலங்கா போர் விதிகள் எதனையும் அனுசரிக்காது நடந்து வருகிறது என பிரித்தானிய வெளிவிவகார அமைச்சிற்கு கடிதம் மூலம் அறிவித்தனர். என்ன பலன்? சிறிது காலத்தில் நாகர் கோவில் பாடசாலையில் பாடம் படித்துக் கொண்டிருந்த சிறுவர்கள் மீது குண்டு போட்டு அவர்களை படுகொலை செய்து குவித்தது.

இவ்வாறாகத் தமிழர்களை தொடர்ந்தும் தொடர்ந்தும் பல வழிகளில் இனஅழிப்பு செய்யும் சிறிலங்காவின் தமிழின அழிப்பு செயற்திட்டத்தில் ஒன்றே, அவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள யாழ்.குடாநாட்டில் அவர்கள் ஏற்படுத்தியுள்ள – ஏற்படுத்திவரும் மரணக் குழிகளாகும். மக்களைக் காரணமின்றி கைது செய்து காணாது போகச் செய்வது என்பதே இந்த மரணக் குழிகளுக்கு சிறிலங்கா வழங்கும் விசேட கடவுச்சீட்டு. ஒரு பகுதியிலுள்ள தங்களுக்கு சந்தேகமாக உள்ள அனைவரையுமே கைது செய்து அவர்கள் வாழ்வை முடித்த சம்பவங்களும் உண்டு. இவ்வாறு இனக் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டவர்களுள் சில நூறு பேரின் புதைகுழிகளையே சிறிலங்கா படையினர் இருவர் இப்போது இனங்காட்டுவதாக கூறியுள்ளனர்.

சிறீலங்கா அரசு, தனது படைகள் நடாத்தும் கொலைகளில் இருந்து அவர்கள் தப்புவதற்கு காரணமாக இருந்து, சர்வதேச மனித உரிமைச் செயற்பாட்டாளர்களால் வன்மையாக கண்டிக்கப்பட்டு வந்த விலக்கீட்டு முறையை (Impunity) கைவிட்டு விட்டதாக கண்துடைப்பு நாடகமாடுவதற்கே, கிருசாந்தி கொலை வழக்கில் குற்றவாளிகளுக்கு மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கினர். ஆயினும், இத்தண்டனைகளின் அமுலாக்கத்தில் சர்வதேச மன்னிப்புச் சபையே சந்தேகம் எழுப்பியுள்ளது. அத்துடன் ஒரு வழக்குக்கு தண்டனை வழங்கப்படும் அதே நேரத்தில், காணாமல் போனவர்களென தெரிவிக்கப்பட்டுள்ள 700 பேரில் 25 பேர் தொடர்பாக வழக்குப் பதியும்படி சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் புலனாய்வுப் பகுதி சிபார்சு செய்தும், இதுவரை எதுவும் நடை பெறாததையும் சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்ட மறக்கவில்லை.

இவ்வாறு உலக நிறுவனங்களே சிறிலங்காவின் நீதிபரிபாலனத்தில் சந்தேகங்களைக் கிளப்பிக் கொண்டிருக்கும் நேரத்தில், சிறிலங்காப் படையினரே மரணக்குழிகள் குறித்து உலகுக்குச் சாட்சியம் அளித்துள்ளது. சிறிலங்காவிலும் ருவண்டா மரணக்குழிகள் போன்ற பல குழிகள் உள்ளன என்பதற்கு சிறிய எடுத்துக்காட்டாக உள் ளது.இந்நேரத்திலாவது உலக நாடுகளும், ஐக்கிய நாடுகள் சபையும் சிறிலங்காவை இனஅழிப்பு அரசாக பிரகடனப்படுத்தாது விட்டால், அது சிறிலங்காவின் இன அழிப்புக்களுக்கு அளிக்கப்பட்ட ஊக்கமாக அமைந்து, தமிழீழ மக்களின் மீதான சிறிலங்காவின் இன அழிப்புக்கு அவையும் துணை போனவையாக மாற்றிவிடும். இது சர்வதேச அமைப்புக்கள் மீதான நம்பிக்கையும் எதிர்பார்ப்புக்களையும் அர்த்தமற்றதாக்கி விடும். ●

---

# கிருசாந்தி வரிசையில் கந்தசாமி கலாநிதி - சிறீலங்காவின் மற்றொரு கொடுமை -

கிருசாந்தி கொலை வழக்கில் தீர்ப்பு வழங்கி – சட்டத்தையும் ஒழுங்கையும் பேண முயல்வது போல் சிறீலங்கா அரசாங்கம் நடித்துக் கொண்டிருக்கும் நேரத்தில், அதை விட மோசமான முறையில், மிருசுவில் வடக்கைச் சேர்ந்த கந்தசாமி கலாநிதி என்ற திருமணம் ஆகாத இளம் பெண்ணை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தி கொன்றுள்ளனர்.

இவ் அப்பாவித் தமிழ்ப் பெண்ணை பத்து இராணுவத்தினருக்கு மத்தியில் நிறுத்திய சிறீலங்கா இராணுவ அதிகாரி ஒருவன், அவர்களில் ஒருவனைத் திருமணம் செய்யும்படி வற்புறுத்தியுள்ளான். கலாநிதி மறுக்கவே, ஒரு இராணுவத்தினனை அழைத்து அவளுக்கு குங்குமப் பொட்டு வைக்கும்படி கட்டளை இட்டுள்ளான். இதைக் கண்டு தன்மான உணர்வினால் கதறியழுத கலாநிதியை சந்திரிகாவின் சிங்கள இராணுவக் காடையர்கள் கூட்டாக பாலியல் வன்முறைக்கு உட்படுத்தி மிருக வெறியாட்டம் நடாத்தியுள்ளனர். இவ்விதம் இராணுவச் சித்திரவதை புரிந்த சிங்கள இராணுவத்தினர் இறுதியில் கலாநிதியைக் கொலை செய்துள்ளனர்.

சென்ற மாதம் 25 ம் திகதி நடைபெற்ற இந்த பயங்கரக் கொடுமையை வெளியே தெரியாதவாறு மூடி மறைக்கத் திட்டமிட்ட சிறீலங்கா இராணுவத்தினர் கலாநிதியின் குடும்பத்தவர்களுக்கு கொலைப் பயமுறுத்தல் விடுத்ததும் அல்லாமல் கலாநிதியின் உடலை பிரேத பரிசோதனை செய்வதற்கும் அனுமதி மறுத்துள்ளனர். ★

## மனித உரிமை சாசனம்.......

தொடர்பாக உருவாகியுள்ள உலக அபிப்பிராயத்தை திசைதிருப்புவதற்கான

சிறிலங்காவின் கண்துடைப்பு முயற்சி என கொழும்புப் பத்திரிகைகளே விமர்சித்துள்ளன.

இதற்கிடை பாதுகாப்பு படைகள் கொலைகளை புரிந்து விட்டுத் தப்புவதற்கு காரணமாக இருந்த விலக்கீட்டு உரிமையைத் தான் நீக்குவதாக உலகுக்கு காட்ட கிரிஸாந்தி வழக்கை திசை திருப்ப முயன்ற சந்திரிகா அரசாங்கம் தனது இராணுவத்தினரே மரணக்குழிகள் தகவலை வெளியிட்டதை அடுத்து உலகின் அபிப்பிராயத்தில் மேலும் மோசமான நிலையை அடைந்துள்ளது.

இதற்கிடை தமது சொந்தங்கள் மரணப்படுகுழிகளுள் புதைக்கப்படுவதை கேள்வியுற்ற புலம்பெயர் தமிழர்கள் பெரும் அதிர்ச்சிக்கும் கவலைக்கும் ஆளாகியுள்ளனர். ஒரு முகாமிலேயே இவ்வளவு தொகையினர் மரணப்புதைகுழியில் போடப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டிய அவர்கள் எல்லா இராணுவ முகாங்களையும் கணக்கில் எடுத்தால் மரணப்புதைக்குழிகளுள் போடப்பட்டோர் தொகைகளை பல்லாயிரக்கணக்கில் பெருகக் கூடும் என அச்சம் தெரிவித்துள்ளனர். இது குறித்து ஐ.நா.வும் உலக நாடுகளும் கவனம் செலுத்த வேண்டுமென புலம் பெயர் தமிழர்கள் வற்புறுத்தி வருகின்றனர். ★

## டயனா நினைவாக......

ஊனப்படுத்தும் இந்தக் கொடுமைக்கு உலக நாடுகள் முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென புலம்பெயர் தமிழ் மக்கள் வேண்டி நிற்கின்றனர். மேலும், கால்களை இழப்பவர்களுக்கு செயற்கை கால்கள் பொருத்துவதற்கு மனிதா பிமான அடிப்படையில் இயங்கி வந்த அமைப்புக்களையும்கூட சிறீலங்கா – தான் ஆக்கிரமித்த பகுதிகளில் – திட்டமிட்ட வகையில் செயலிழக்கப் பண்ணி விட்டதால்– இவ்வாறு பாதிப்புறும் பொது மக்கள் இயக்க சக்தியற்றவர்களாக தவிக்கும் துயர சூழ்நிலை வளர்ந்து வருகிறது.

## உங்கள் தொடர்புகட்கு

**AUSTRALIA**
TCC
P O Box 375
Preston
Victoria 3072

**CANADA**
WTM
64 Eaton Avenue
Toronto
Ontario M4J 2Z5

**DENMARK**
LTTE
P.O.Box 47
7400 Herning

**FRANCE**
TCC
341 Rue Des Pyrenees
75020 Paris

**GERMANY**
TCG
Postfach 340251
51624 Gummersbach.

**ITALY**
TCC
Via Mariano Stabile - 49
90139 Palermo

**NETHERLANDS**
TCC
Grt. Hertoginnelaan-106
2517 EL Den Hagg

**NORWAY**
TCC
P.O.BOX 1699 Vika
0110 Oslo

**SWEDEN**
TCC
Glomminge Grand-25
3rd Floor
16362 Spanga

**SWITZERLAND**
WTTC
Joses Str - 110
8005 Zurich

**UNITED KINGDOM**
UTO
Eelam House
202 Long Lane
London SE1 4QB

**U.S.A**
W.T.C.C
170-10 Cedarcroft Road
Suite 1-L
Jamaica
New York 11432.

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இது எத்தனையாவது அதிசயம்?

இந்த ஓராண்டு கால ஜயசிக்குறுய் வரலாற்றினை திரும்பிப் பார்க்கும் எவருக்கும் தாங்கமுடியாத பிரமிப்பே ஏற்படும். நம்ப முடியவில்லையே என வாய்விட்டு கூற நேரிடும். இது எத்தனையாவது அதிசயம் என்கிற கேள்வியே மேலெழும். ஒரு வருடத்திற்குள் இத்தனை சாதனைகளா? இத்தனை மாற்றங்களா? இத்தனை தாக்கமா? எனவேதான் சிங்கள இராணுவம் வெல்ல வேண்டும் என்பதற்காக இலவச ஆலோசனைகள் வழங்கும் இக்பால் அத்தாஸ் கூட எழுதுகிறார். 'எல்லா முட்டைகளும் ஒரே கூடைக்குள்'. வவுனியாவிலிருந்து மாணிக்கவாசகர் எழுதுகிறார், 'புலிக்குகைக்குள் ஜயசிக்குறுய் கூடை கவிழ்ந்தால்? குகை வாயில் மூடப் பட்டால்? இக்கேள்விகளை நாம் எழுப்பவில்லை. சிங்களவர்களே எழுப்பு கிறார்கள். ஏனெனில் இருபதாம் நூற்றாண்டின் வெற்றிகரமான போரு த்திகளான மிகக் கூடிய படையினரையும் நவீன கனரக ஆயுத தளபாடங்களையும் மிகச் செறிவாகப் பயன்படுத்தியும் எதிர்பார்த்த வெற்றி இன்னும் கிடைக்கவில்லையே. 1983 ஆம் ஆண்டு பன்னிரண்டாயிரமாக இருந்த இராணுவத்தினை இன்று ஒரு இலட்சத்து முப்பதினாயிரமாக ஆக்கி னோம். இராணுவத் தளபாடங்கள் வேண்டி மலையாகக் குவித்தோம். ஐம்பது கோடி ரூபாய் செலவழித்த காலம்போய் இன்று 500 கோடி செலவழிக்கின்றோம். என்ன பயன்? இராணுவத்தை விட்டு ஓடுவோர் தொகை 25 ஆயிரமாகிவிட்டது. ஏழு தடவை பொது மன்னிப்புக் கொடுத்தும் இறுதியில் சந்திரிகா அம்மையாரே மனமுருகக் கெஞ்சியும் பலனில்லையே.



மொத்தத் தொகையில் 15 விழுக்காட்டிற்கு மேல் ஓடிய இராணுவம். இது ஒரு உலக சாதனை. மொத்தச் செலவு என்றாலும் சரி மொத்தத் தேசிய உற்பத்தி என்றாலும் சரி போருக்கான செலவு விழுக்காடு எல்லா வரைய றைகளையும் தாண்டி உயர்கின்றது. உலகின் குடித்தொகைக்கு மிக அடர்த்தியான இராணுவம் சிறிலங்கா வில்தான் என்பது மற்றுமொரு சாதனை. இத்தனை சாதனைகள் படைத்தும் போர்க்களத்தில் சாதனை படைக்க முடியவிலலையே? ஏன்? ஏன்? இனி என்ன செய்ய வேண்டும்? சிங்களம் தடுமாறுகின்றது.

இம்முடிச்சை சிங்களத்தால் என்றுமே அவிழ்க்க முடியாது என்கிறார் முன்னாள் விமானப்படை உயர் அதிகாரியான விங் கொமாண்டர் மார்க் செனிவிரத்னா. ஏனென்று அவரே விளக்குகின்றார். 'சூதாட்ட விடுதி ஒன்றில் சூதாடித் தோற்பவன், வெல்ல வேண்டும் என்பதற்காக மாற்றி மாற்றி பல வழிகளையும் முறைகளையும் கையா ண்டு, இம்முறை வெற்றி நிச்சயம் என்று நம்புவான். அதுபோலத்தான் சிங்கள இராணுவமும் இப்போது அதிநவீன போர்க் கருவிகளைக் கொள்வனவு செய்து பயன்படுத்த முயல்கின்றது. இறுதியில் இருவருமே தோல்வியைத் தழுவுவார்கள். சூதாடுபவன் தோற்றால் அவனது குடும்பம் மட்டுமே பாதிப்படையும். ஆனால் சிங்கள இராணுவத்தைப் பொறுத்தவரையில் நாட்டின் பொருண்மியமே நாச மடைந்துவிடும். புலிகளின் போருத்தி களை, வழிமுறைகளை இன்னதென்று வகைப்படுத்த முடியாது. அவர்களின் சமர்க்களத்திற்கு இந்த நவீன கருவிகள் பயனற்றவை. இது செனிவிரத்னாவின் கருத்து. எமது கருத்து என்ன? ஜயசிக்குறுய் சமர்க்களத்தில் என்ன நேரத்தில் என்ன நடக்கும் என இவர்களால் எதிர்வுகூற முயாது. ஏனெனில் விடியப்போகும் தேசமொன்றின் முடியப்போகும் இன்னல்களின் முடிவின் தொடக்கமே இச்சமர்க்களம். எனவே அதிநவீன தொழில் நுட்ப கருவிகளை சிங்களம் வேண்டினாலும் என்ன நடக்கும்? அதிலொரு பகுதி புலிகளுக்குச் சேர்வதோடு, கரந்துறைப் போரியல் அறிஞரான சேர் றொபேர்ட் தொம்சன் குறிப்பிட்டது போலவே 'அதிநவீன போர் முறைமைக் கருவிகளைப் பயன்படுத்த முற்படும் நாடு இறுதியில் வங்குரோத்து நிலையையே அடையும்.

ஜயசிக்குறுயில் புலிகளை ஒருபோதும் வெல்ல முடியாது என்பதற்கும் இப்போது சிங்களவர்களே விளக்கும் தருகின்ற விந்தையும் இப்போது நடக்கின்றது. அம்மையாரின் அந்தரங்க ஆலோசகரில் ஒருவரும் முன்னாள் ஜே.வி.பி. புரட்சிக்காரரும் இன்னாள் அரசியல் ஆய்வாளருமான ஜெயதேவ உயங்கொட இணை ஆசிரியராக இயக்கும் 'பிரவ்தா' சமூக அரசியல் ஏடு கூறுவது இதுதான், 'ஜயசிக்குறுயின் அடிப்படையே தவறான இலக்குகளைக் கொண்டது. ஜயசிக் குறுய், புலிகளுக்கு எதிராக ஒன்றிரண்டு சமர்களை வெல்வதற்காக தொடங்கப் பட்டதல்ல. ஒரு முழுமையான போரில் புலிகளை முற்றிலுமாக வீழ்த்த வேண்டும் என்பதே நோக்கம். இது இப்போது தெற்கில் வெறும் வெற்றி மாயை ஒன்றை உருவாக்கி, முழுப் பொய்களைச் சொல்பவர்களே தாம் சொல்வதை தாமே நம்பும் ஆபத்தான நிலையை உருவாக்கிவிட்டது. எத்தனை வாக்குறுதிகள்? எத்தனை காலக் கெடுகள்? எத்தனை அறிக்கைகள்? ஆனால் பிரபாகரனைப் பார்த்தால், அன்றிலிருந்து இன்றுவரை போரைத் தமிழர் தரப்பில் நடத்துபவர் அவர். வெற்றி தோல்வி பற்றி இதுவரை ஏதும் அவர் பேசியிருக்கிறாரா? உண்மை

> "விடியப்போகும் தேசமொன்றின் முடியப்போகும் இன்னல்களின் முடிவின் தொடக்கமே இச்சமர்க்களம்."

யிலேயே இப்போரின் உண்மை நிலையை அவரே அறிவார். இப்போரை அவரே முழுமையாகப் புரிந்து கொண்டுள்ளார். ஒரு தேசிய விடுதலை இயக்கத்தின் உள் அசைவியக்கத்தை ஒரு அரசினுடைய இராணுவத் தரப்பால் ஒருபோதும் புரிய முடியாது. புரிந்ததும் கிடையாது. எனவேதான் புலிகள் அழிந்துபடப் போகிறார்கள் என சிங்களத் தரப்பு இப்போது நம்பும்போது, நடக்கப்போவது அதற்கு எதிர் மாறாகவே இருக்கப் போகின்றது.' இவ்வாறு நிற்கிறது இவ் ஆய்வு.

ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையின் பலவீனங்கள், பாரிய தவறுகள், எதிர்கால ஆபத்துகள் எல்லாம் எதிரித் தரப்பினைச் சேர்ந்தவர்களாலேயே எவ்வளவு தெளிவாகப் புரியப்பட்டிருக்கின்றன. இதற்கு யார் காரணம்? இந்த அரசியல் ஞானத்தை இவர்களுக்குப் புகட்டியவர் யார்? இன்றல்ல, நேற்றல்ல. 25 வருடங்களுக்கு முன்னரே தலைவர் அவர்கள் எடுத்த முடிவே இதற்குக் காரணம். என்றோ ஒரு நாள் தனது பேரினவாத அழிப்புச் செயற்பாட்டை சிங்களம், மண்பறிப்பு, இனஅழிப்பு, அரசியல் ஏமாற்றுத் தந்திரங்கள் என்பவற்றிலிருந்து பெரும் போராக மாற்றும். அதற்கு முகம் கொடுக்க வேண்டி நேரிடும் என்பதை தலைவர் தெளிவாக அறிந்து வைத்திருந்தார். 'போர் என்பது அரசியலின் தொடர்ச்சியே. இந்த வகையில் போர் என்பதும் அரசியலே. ஒரு அரசியல் நட வடிக்கையே.' இதுவே மாவோவின் கூற்று. போர் என்பது ஒரு நாட்டின் தலைவிதியைத் தீர்மானிப்பது. வாழ்வையும் சாவையும் தீர்மானிக்கும் இடம். அழிவுக்கு அல்லது ஆக்கத்திற்கான பாதை.' இது சன் சூவின் கூற்று. 'இது தமிழருக்கு எதிரான போர். தமிழின அழிப்பை இலக்காகக் கொண்ட போர். இந்த இனப்போர் நீண்ட நெடுங் காலமாகவே நடந்து வருகின்றது. புலிகள் இயக்கத்தின் பிறப்பிற்கு முன்னிருந்தே நடந்து வருகின்றது. . . . . . . எனவே நாம் எமது படைபலத்தைப் பெருக்கி போராட்டத்தைத் தீவிரமாக்க வேண்டும். தமிழ் மக்கள் தமது அரசியற் தலைவிதியை தாமே நிர்ணயிப்பதற்கான படைபலம் பெருக வேண்டும்.' என்கிறார் எம் தலைவர்.

20 ம் நூற்றாண்டின் முடிவிலே விடிவைத் தேடும் மக்களுக்கு விடிவெள்ளியாக புதிய பாதை காண்பிக்கும் தலைவர், இந்த நிலையை அடைய எத்தனை தடைகளைத் தாண்டினார்? எத்தனை போர் உத்திகளை, அரசியல் இராஜதந்திர வித்தைகளைப் பயன்படுத்தினார்? மிகப் பலவீனமாக இருந்த நிலையில் மிகப் பொருத்தமான கரந்துறைப் போரியல் முறையை அவர் கைக்கொண்டார். கரந்துறைப் போர் முறையின் அதிசிறப்பான 'இயங்கு நிலைப் போர் முறையை' (Mobile Warfare) அவர் வரித்துக் கொண்டார். கரந்துறைப் போர்முறையை அதன் உச்சநிலைக்கு விரிவாக்கிய பின், பொருத்தமான தலைமையின் கீழும் தனது படைபலத்தைப் பொறுத்தும் அதனை இன்னொரு கட்டத்திற்கு நகர்த்தி மரபுவழி போரியல் படையணியின் நுட்பங்களைக் கைக்கொள்ளும் படையாக தமிழர்சேனை மாற்றமடைய வேண்டும் என விரும்பினார். இதற்காக அவர் எத்தகைய போரியல் வரலாற்று வழிகளுக்கூடாக பயணம் செய்தார்? காலத்தை இழுத்தடிப்பது தமிழனுக்கே பெரும் ஆபத்தாக முடியும் என்பதால் எப்போதுமே அரசியல், இராணுவ முடிவுகளை 'விரைந்து' எடுத்தார். சமர் உத்தியாக 'சிலரைப் பலராலும்' போர் உத்தியாக 'பலரை சிலராலும்' முறியடித்தார். யுத்த தந்திரமாக 'பின் வாங்கியதன் மூலம்' எதிரியை ஆழமாக உள்நுழைய ஆசைகாட்டி 'தனது சொந்தப் பலத்தைப் பேணி' பொருத்தமான நேரம் ஒன்றிற்கு காத்திருந்தார். அதற்கான கால அவகாசத்தைப் பெற்றுக் கொண்டார். தேவையான நேரத்தில் படைகளை இணைத்தும், எப்போதும் வேக அசைவியக்க போர் முறைமையை கைக்கொண்டும், எதிரியிடமிருந்தே தனக்குத் தேவையான விநியோகத்தைப் பெறுவதற்காக 'எதிரியின் தளத்தை, மனித ஆற்றலை முற்றாக அழிக்கும் யுத்த முறையிலும்' ஈடுபட்டு – இன்று இவற்றின் பயனாக எதனைச் சாதித்தார்? எதையிழந்தாலும் புலிகளின் போரிடும் ஆற்றலை இழக்காது' அதனைத் தக்கவைத்து விரிவாக்கியும், ஜயசிக்குறுய் சர்வதேச புலியழிப்புப் போர் மூலோபாயத்தை முற்றாகச் சிதைத்தும், அடுத்து பிரபாகரன் என்ன செய்வார் என எவருமறியாத அளவிற்கு இரகசியம் பேணியும், இன்று புதுமையும் பழமையும் கலந்த புதிய விடுதலைப் போரியல் முறைமையை, அரசியல் சிந்தனை முறைமையை அல்லவா அவர் தோற்றுவித்திருக்கின்றார்.

மரபுவழி இராணுவத்திற்குரிய அதிகளவு ஆட்பலமோ கனரக ஆயுதங்களோ ஒப்பீட்டளவில் மிகக் குறைவு. வியட்நாம், சீனா போல பாரிய மலைத் தொடர்களோ, நீண்ட ஆறுகளோ, பரவலாக பள்ளத் தாக்குகளோ, ரஸ்யா போல பனிமழைக் காலமோ பனிமலையோ இங்கில்லை. ஏன் என்று கேட்க நட்பு நாடுகள் எதுவும் இல்லை. அப்படியானால் எப்படி? 20 ம் நூற்றாண்டில் உலகம் காணாத புலிகளின் வீரப் பண்பு, மக்களுக்காக உயிரையே உடலையே ஆயுதமாக்கும் கரும்புலிகளின் உன்னத ஈகம். எண்ணற்ற இடர்களைத் தாங்கி இன்னமும் எம்முடன் வாழும் அம் மக்களின் மனஉறுதி. அப்பழுக்கற்ற தலைவனின் ஆன்மவலு. இதில் எது காரணம்? எது காரணமானாலும் என்ன எம் மக்களே! அதை அறிந்தவர்களும் நாமல்லவா? எனவே,

ஜயசிக்குறுய் சமர்க்களத்தை வாழ்த்துவோம். நாமும் வாழ்வோம்.

– பாலகுமாரன் –
( விடுதலைப் புலிகள்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சகாப்தம் படைத்த ஸ்ராலின்கிராட்

## 9



மார்ஷல் சுயிக்கோவ்

எதிரியின் ஆதார தளத்தை அல்லது எதிர்ப்பு மையத்தைத் தாக்கும் ஒவ்வொரு தளபதியும் இந்த இரண்டையும்தான் முக்கியமாகப் பயன்படுத்த வேண்டும். நெருங்கிய சண்டையில், அதுவும் நகரச் சண்டையில் இதற்கு எப்போதும் தீர்மானகரமான முக்கியத்துவம் உண்டு.

திடீர்த் தாக்குதலுக்காகச் செல்லும் போர் வீரர்களின் மாற்ற இயலா ஆயுதம் எறிகுண்டாகும். இது பல நேரங்களில் இத்தாக்குதலின் தூரத்தை முன் நிர்ணயித்தது. தாக்குதலுக்கான ஆரம்ப நிலை எவ்வளவுகெவ்வளவு எதிரிக்கு அருகில் உள்ளதோ அவ்வளவுக் கவ்வளவு நல்லது. இந்நோக்கிலிருந்து பார்க்கும் போது 62வது படையின் தாக்குதல் குழுக்களின் வெற்றி எதிரியை மறைவாக நெருங்கி வந்ததைக் கணிசமான அளவு அடிப்படையாகக் கொண்டிருந்தது.

அனுபவம் பின்வருமாறு சோவியத் போர் வீரர்களுக்குச் சொல்லியது: மறைகுழிகள் வழியே எதிரியை நெருங்கி வா: குழிகள், இடிபாடுகளைப் பயன்படுத்தி ஊர்ந்து செல்; இரவில் மறைகுழிகளைத் தோண்டு, பகலில் அவற்றை மூடிமறை; தாக்குதலுக்காக ஓசையின்றி, மறைவாக ஒன்று சேர்; தானியங்கி துப்பாக்கியைக் கழுத்தில் மாட்டிக் கொள்; 10–12 எறிகுண்டுகளை எடுத்துக் கொள், அப்போது நேரமும் திடீர்த் தாக்குதலும் உன் தரப்பிலிருக்கும்.



தாக்குதல் குழுவின் செயல்தந்திரம் ஒவ்வொரு போர் வீரனின் வேகம், தாக்குதல் திறன், முன் முயற்சி, துணிவு ஆகியவற்றின் அடிப்படையிலானது. இதை நான் பின்வருமாறு குறிப்பிட்டேன்: எறிகுண்டும் நீயுமாக வீட்டிற்குள் நுழை; நீ பொருட்கள் அடங்கிய பையின்றி இலகுவாகவும், எறிகுண்டு மேலுறையின்றி எளிமையாகவும் இருக்க வேண்டும்; எறிகுண்டை எறிந்துவிட்டு அதன் பின் நீ செல்; அதேபோல் வீடு பூராவும் எறிகுண்டை முன்னால் எறிந்தபடி நீ பின்னால் செல்.

எதிரியின் வசமுள்ள கட்டிடத்தில் நடைபெறும் சண்டையில் எதிர்பாரா சம்பவங்கள் நிறைந்திருக்கும். மயிரிழையில் தப்பிப்பது என்னும் விதி இங்கு செயல்படும். ஒவ்வொரு அடியெடுத்து வைக்கும் போதும் போர்வீரனை அபாயம் எதிர் நோக்கியுள்ளது. கலங்காதே – அறையின் ஒவ்வொரு மூலையிலும் எறிகுண்டை வீசிவிட்டு முன்னோக்கி செல்! மேலே முகடை நோக்கி தானியங்கித் துப்பாக்கியால் சுடு; போதவில்லையா – எறிகுண்டை வீசிவிட்டுத் தொடர்ந்து முன்னேறு! இன்னொரு அறையா – இன்னொரு எறிகுண்டு! திருப்பம் – இன்னுமொரு எறிகுண்டு! உடனே தானியங்கித் துப்பாக்கியால் சுடு, சற்றும் தாமதிக்காதே!

கட்டிடத்தின் உள்ளே எதிரி எதிர்த் தாக்குதலில் இறங்கக் கூடும். அஞ்சாதே! நீ நிலவரத்தை ஏற்கெனவே உன் கரங்களில் எடுத்துக் கொண்டுள்ளாய். வெஞ்சினத்தோடு எறிகுண்டை, தானியங்கித் துப்பாக்கியை, கத்தியை, மண்வெட்டியைப் பயன் படுத்து! வீட்டின் வெறித்தனமான சண்டை. எனவே, எதிர்பாராதவற்றிற்கு எப்போதும் தயாராயிரு. அயர்ந்து விடாதே!

ஆதாரத் தளமாக மாற்றப்பட்ட கட்டிடத்தில் மட்டும் எதிரியின் எல்லா சுடும் சாதனங்களும் திரட்டப் பட்டிருந்தால், பூர்வாங்கமாகப் பீரங்கிகளால் சுடாமலேயே திடீரெனத் தாக்குவது என்பது படையின் பிரிவுகளில் ஒரு விதியாக இருந்தது.

அதே நேரத்தில் நேரடியாகச் சுடவல்ல தனிப்பட்ட பீரங்கிகளும் டாங்கிகளும் தாக்குதல் குழுவிற்குத் திறமையாக ஆதரவளித்த போது திடீர்த் தாக்குதலின் வேகமும் வல்லமையும் அதிகரித்தன.

பூமியடி கண்ணிவெடித் தாக்குதலும் பெரும் பயனளித்தது. இலக்கை வேறு வழிகளில் நெருங்கினால் பேரிழப்புகள் ஏற்படும் என்ற நிலையிலிருந்த போது இம்முறை பயன்படுத்தப்பட்டது.

தாக்குதல் குழுக்களையும் மற்ற புதிய சண்டை வடிவங்களையும் முறைகளையும் பயன்படுத்தியதானது பாசிஸ்டுகளை எதிர்த்து நின்று, வெற்றி பெற எங்களுக்கு உதவியது.

62வது படை சண்டையிட்டபடியே வோல்காவிலிருந்து பெர்லின் வரை சென்றது. இது பல நகரங்கள், நிலைகள், வலுப்படுத்தப்பட்ட பிரதேசங்கள், பெர்லின் நகரம் ஆகியவற்றைப் பிடித்தது. எல்லாச் சண்டைகளும், சமர்களும் பெயரில்தான் ஒரே மாதிரியாக இருந்தனவே தவிர, சாரத்தில், திட்டத்தில், தயாரிப்பில், நடப்பில் இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாதிரியாக இருந்தன. தாக்குதல் குழுக்களின் விசயத்திலும் இதே மாதிரிதான். ஸ்டாலின்கிராட் தாக்குதல் குழுக்கள் ஸப்பரோஷ்யே, ஒதேஸ்ஸா, பெர்லின், மற்ற நகரங்கள், போஸ்னன் கோட்டை, வலுப்படுத்தப்பட்ட மேஸெரிட் மண்டலம் ஆகியவற்றைத் தாக்கிய தாக்குதல் குழுக்களில் இருந்து மாறுபட்டன.

ஆனால், 62வது படை – பின் 8வது கார்டு படை – ஒரு குறிப்பிட்ட நகரம் அல்லது வலுப்படுத்தப்பட்ட மண்டலத்தைத் தாக்கும் போது, தாக்குதல் குழுக்கள் பிறந்த ஸ்டாலின்கிராட்டை எப்போதும் பின்னோக்கிப் பார்த்தது.

ஸ்டாலின்கிராட்டின் தற்காப்பில் பெண்களின் பங்கேற்பைப் பற்றிக் கூற விருப்புகிறேன்.

பெரும்பாலான போர்க் குழுக்களில் பெண்கள் மட்டுமே இருந்த முழு விமான எதிர்ப்பு அணிகளும், இரவு நேர வை–2 ரக குண்டுவீச்சு விமான பிரிவுகளும் சோவியத் இராணுவத்தில் இருந்தன. ஆண்கள் அதிகமாக இருந்த அணிகளுக்கு எவ்விதத்திலும் குறையாமல் இவை தம் கடமையை நிறைவேற்றின என்று கூற வேண்டும்.

ஸ்டாலின்கிராட் வான் எதிர்ப்பு பாதுகாப்பு கோர்பசில் விமான எதிர்ப்பு பீரங்கி குழுக்களிலும் தேடு விளக்குகளின் அருகிலும் பெரும்பாலோர் பெண்களாக இருந்தனர். தம் தலைமீது அளவு கணக்கில்லாமல் குண்டுகள் விழுந்த போதும், குறிபார்த்து சுட முடியாத நிலை வந்த போதும், அவர்கள் பீரங்கிகளை விட்டுவிடாமல் அவற்றின் அருகே இருந்தபடியே சண்டையிட்டனர்.

5 இளம் பெண்கள் – அவர்கள் சண்டைகளில் புடம்போட்டு எடுக்கப்பட்ட வீராங்கனைகளாக இருந்தனர் – இருந்த ஒரு பீரங்கிக் குழுவை அக்டோபரில் சந்தித்தேன். குறி பார்க்கும் ஒரு இளநங்கை, ஒன்பது பாசிச குண்டு வீச்சு விமானங்களை நோக்கிச் சுட்டு ஒரேயொரு விமானத்தை வீழ்த்தியதால் சோகமான முகபாவத்துடன் காட்சியளித்தாள்; ஏனென்று கேட்டதற்கு, 2–3 விமானங்களை வீழ்த்தலாம் என்று சகதோழி சொன்னாளாம். இதை என்னால் மறக்கவே முடியாது.

62வது படையின் தகவல் தொடர்பு பிரிவுகளிலும் பெரும்பாலும் பெண்கள்தான் இருந்தனர். இடைநிலைத் தொடர்பு மையத்திற்கு அவர்களை அனுப்பினார்கள் என்றால், தகவல் தொடர்பு ஏற்படுத்தப்படும் என்று உறுதியாக இருக்கலாம். இந்த மையத்தை நோக்கி சாதாரண, மார்டர் பீரங்கிகள் சுட்டாலும், விமானங்கள் இதன் மீது குண்டுமழை பொழிந்தாலும், எதிரிகள் இதைச் சுற்றி வளைத்தாலும் இப்பெண்கள் இருந்த இடத்திலேயே இறப்பார்களே தவிர உத்தரவின்றி நகர மாட்டார்கள்.

பசார்கினோ இருப்புப் பாதைச் சந்திப்பின் அருகில் இடைநிலைத் தொடர்பு மையத்தில் நடந்த ஒரு சம்பவம் எனக்குத் தெரிய வந்தது. அங்கே ஒரேயொரு தகவல் தொடர்பு வீராங்கனை நாதியா கிளிமேன்கோ மட்டுமே உயிரோடு எஞ்சினாள். அவளுடைய சகதோழிகள் கொல்லப்பட்டனர் அல்லது காயமடைந்தனர். கிளிமேன்கோ தன் இடத்தைவிட்டு அகலாமல் போர்க் களத்தில் நடப்பதைப் பற்றி கடைசி நிமிடம் வரை தகவல் அனுப்பினாள். இதோ படையின் தகவல் தொடர்பு மையத்திற்கு அவள் அனுப்பிய கடைசிச் செய்திகள்: "தகவல் மையத்தின் அருகே நம்மவர்கள் யாருமில்லை, நான் மட்டும் எஞ்சியுள்ளேன், சுற்றிலும் குண்டுகள் வெடிக்கின்றன..... எனக்கு வலது புறம் எதிரி டாங்கிகள் நகருகின்றன, அவற்றின்பின் காலாட்படையினர் வருகின்றனர்..... நான் இங்கிருந்து போகக் கூடாது, எப்படியிருந்தாலும் சுடப் போகின்றனர், தகவல் அனுப்புவேன். கேளுங்கள்.... நான் இருக்கும் மையத்திற்கு டாங்கி ஒன்று வருகிறது, அதிலிருந்து இருவர் கீழிறங்குகின்றனர்.... அவர்கள் இராணுவ அதிகாரிகளைப் போலிருக்கின்றனர். அவர்கள் என்னை நோக்கி வருகின்றனர்...." இந்த இடத்தில் தொடர்பு அறுபட்டது.

62வது படையில் இருந்த ஒரு தகவல் தொடர்பு பெண்மணியை நான் 1950 ஆம் ஆண்டுகளில் சந்தித்தேன். அவர் பெயர் ரஸுமேயெவா. அவர் அப்போது ஸ்மெலியான்ஸ்கி வட்ட கம்யூனிஸ்டு கட்சி கமிட்டியின் செயலாளராய் இருந்தார். முதன் முதலில் அப்பெண்ணை 1942 செப்டம்பர் 13இல் மமாயெவ் குன்றில் சந்தித்தேன். அப்போது தகவல் தொடர்பு மையம் பாசிச குண்டுகளால் தகர்க்கப் பட்டிருந்தது. அவளோ தொலைபேசி அருகே அமர்ந்தபடி தொடர்ந்து படை பிரிவுகளின் தளபதிகளுடன் பேசிக் கொண்டிருந்தாள்.

ரஸுமேயெவா படைக்கு தானே விருப்பப்பட்டு, உணர்வு பூர்வமாக வந்தாள். தாயகத்தைப் பாதுகாக்க தன் சக்திகளையும் திறமையையும் முழுக்க முழுக்க அர்ப்பணித்தாள்.

**தொடரும்......**

www.tamilarangam.net



# போர் வெற்றியை நோக்கி செல்வதாக சிறிலங்கா அரசால் எவ்வாறு கூறமுடியும்

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் அண்மைக்கால இழப்புக்கள் போன்று சிறீலங்கா இராணுவம் தொடர்ச்சியான பெரும் இழப்புக்களைச் சந்தித்ததில்லை.

**போர் ஒரு தீர்க்கமான கட்டத்தை அடைந்துவிட்டது. விரைவில் போர் முடிவிற்குக் கொண்டுவரப்படும்.**

*– சிறிலங்கா அரசு அறிவிப்பு.*

கடந்த மூன்றாண்டு காலத்தில் – மூன்றாம் கட்ட ஈழப்போரில் எண்ணாயிரத்திற்கு மேற்பட்ட இராணுவத்தினர் பலியாகியுள்ளதாக சிறீலங்கா அரசே ஒப்புக்கொள்கின்றது. இவ் அளவானது, சிறீலங்கா இராணுவம் முதலாம், இரண்டாம் கட்ட ஈழப்போர்கள் இடம்பெற்ற பன்னிரெண்டு வருடங்களில் சந்தித்துள்ள இழப்பைவிட அதிக மானதாகும்.

அதிலும் குறிப்பாக, 'ஜயசிக்குறு' படை நடவடிக்கையில் இராணுவம் சந்தித்துவரும் இழப்பானது, மிகவும் அதிகரித்தவண்ணம் உள்ளது. கடந்த மே – 28 ஆம் திகதிக்கும் யூன் – 09 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் – ஜயசிக்குறுத் துருப்புக்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலே இவ் இழப்பு வீதாசாரம் உச்சக்கட்டத்திற்குச் சென்று கொண்டிருப்பதை வெளிக்காட்டு வதாக உள்ளது.

மேற்குறிப்பிட்ட கால மோதல்களில் சிறீலங்கா இராணுவம் சந்தித்த பெரும் இழப்புக்களினால் செய்தித் தணிக்கை

**அண்மையில் இடம்பெற்ற மோதல்களில் 500க்கு மேற்பட்ட படையினரை இராணுவம் இழந்துள்ளது. ஆனால், இதை வெளியிடவோ அன்றி பிரசுரிக்கவோ முடியாது செய்தி ஊடகங்களுக்குத் தணிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

*–பி.பி.ஸி. சிங்களச் சேவை*

யைப் பிரகடனப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளானது. அவ்வாறு இருந்தும் பாராளுமன்றத்தில் அவசர காலச் சட்டப் பிரேரணையின் போது பேசிய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவிற்கு இழப்புக்களின் குறைந்த மட்ட அளவினையாவது கூற வேண்டிய நிர்ப்பந்தம் எழுந்திருந்தது.

இந்த வகையில், பத்து அதிகாரிகள் உட்பட 208 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், இரு அதிகாரிகள் உட்பட 65 படையினரைக் காணவில்லை எனவும், 61 அதிகாரிகள் உட்பட 1536 பேர் காயமடைந்ததாகவும் இதில் 206 பேர் மோசமான காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் எனப் பாராளு மன்றத்தில் அவர் ஓர் புள்ளி விபரத்தைக் கொடுக்க வேண்டியிருந்தது.

ஆனால், இவ்வாறு புள்ளி விபரங்களை வெளியிட்ட பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த, இவை உறுதியானவையும், முழுமையானவையும் இல்லை என்பதையும் பிரதிபலித்தே விட்டார் என்றே கூறலாம். அவர் தனது உரையில், "நாடு போரில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் சகல தகவல்களையும் வெளியிட முடியாது.

இவ்விடயம் தொடர்பாக, எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்குத் தனிப்பட்ட முறையில் தகவல்கள் வழங்கத் தயார்" எனக் குறிப்பிட்டமை

அவர் போர் குறித்து மேலதிக தகவல்களைக் கொண்டிருப்பதையே காட்டுவதாயுள்ளது.

இந்த நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளது போன்று, 400 இராணுவத்தினர் கொல்லப்பட்டோ அன்றி 2000க்கு மேற்பட்டோர் காயத்திற்கு உள்ளாகியுமுள்ளனர் என்ற தகவல்கள் முற்றிலும் சரியானதும், அதேசமயம் ஓர் குறைந்த மட்ட அளவினதாவது என்றுமே கொள்ளலாம். ஏனெனில், பி.பி.சி.யின் சிங்கள சேவையான சந்தேசியவின், 800 இராணுவத்தினர் பலியாகியிருக்கலாம் என்ற கூற்று நிராகரிக்கப்படக் கூடியதொன்றல்ல. ஏனெனில், தாண்டிக்குளத்திலும், மன்னகுளத்திலும் பேரிழப்பைச் சந்தித்தபோதும் செய்தித் தணிக்கையை அமுல் செய்யாத அரசு, தற்பொழுது செய்தித் தணிக்கையை அமுல் செய்துள்ளது என்பது, இழப்பின் தொகை அதிகம் என்பதையே வெளிக்காட்டும் குறிகாட்டியாகவுள்ளது.

இவ்வாறான உயர்ந்தபட்ச இராணுவ இழப்பானது – தரைவழிப்பாதை திறப்பதென்பதை பெரும் கடினமாக்கியுள்ளதோடு, அதற்காக இராணுவம் கொடுக்கும் விலை அதிகரித்ததொன்றாக மாறியுள்ளது. அதாவது, கடந்த 13 மாத ஜயசிக்குறு களச்சண்டைகளில் இராணுவம் குறைந்தது 3500 பேர்வரையில் இழந்துள்ளது. 9000 படையினர் வரையில் காயத்திற்கு உள்ளாகியுள்ளனர். இது சிறீலங்கா இராணுவத்தைப் பொறுத்து ஒரு மோசமான புள்ளி விபரமாகும்.

| இராணுவ நடவடிக்கை | சண்டை நாட்கள் | இராணுவ இழப்பு | புலிகளின் இழப்பு | புலிகள் – இராணுவம் இழப்பு விகிதத்தில் |
|---|---|---|---|---|
| பலவேகய – 1991 | 21 | 400 | 602 | 1:0.66 |
| மின்னல் – 1991 | 28 | 300 | 238 | 1:1.26 |
| யாழ்தேவி – 1993 | 07 | 150 | 88 | 1:1.70 |
| சூரியக்கதிர் 1 – 1995 | 49 | 750 | 431 | 1:1.74 |
| சத்ஜெய – 1996 | 70 | 700 | 204 | 1:3.43 |
| ஜயசிக்குறு 1997 மே 13 1998 ஜூன் 15 வரையில் | 400 | 3500 மேல் | 1400 | 1:2.5 |

இந்தவகையில் பார்க்கையில், இராணுவம் ஒரு கிலோ மீற்றரைக் கைப்பற்ற 110 பேர் வரையில் பறிகொடுத்துள்ளதோடு, கிலோ மீற்றருக்கு 250 பேருக்கு மேல் காயமடையவும் நேர்ந்துள்ளது. இவ் விகிதமானது, இராணுவ இழப்பு புளியங்குளம் வரையில் ஒரு கிலோ மீற்றருக்கு 30 பேர் எனவும், புளியங்குளத்தில் இருந்து கனக ராயன்குளம் வரையும் ஒரு கிலோ மீற்றருக்கு 60 பேர் எனவும் இருந்த நிலை, தற்பொழுது முன்னேற்றம் எதுவும் இல்லாமலேயே கிலோ மீற்றருக்கு 110 பேர் நிலையை அடைந்துள்ளது.

இராணுவத்தின் இவ்இழப்பு, 'ஜயசி க்குறு' நடவடிக்கையானது பெரும் ஆள்,ஆயுத இழப்புக்களுடன் பின்னிப் பிணைந்துவிட்ட தொன்றாக மாறி விட்டது. இதற்கு மரபுப் போர்

**அண்மைய மோதல்களில் 400க்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 2000க்கு மேல் காயமடைந்துள்ளனர். இச்சண்டை பற்றிய தகவல் வெளிவருவது செய்தித் தணிக்கையால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.**

*–பாராளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்க.*

வழிமுறையில் விடுதலைப் புலிகள் கண்டுகொண்டுள்ள கணிசமான வளர்ச்சி முக்கிய காரணிகளில் ஒன்றாகும். அதாவது, படிப்படியாக மரபுப்போர் வழிமுறையில் வளர்ச்சி கண்டு வந்த புலிகள், இன்று சிறீலங்கா இராணுவத்தைவிட மரபுப்போர் வழி முறையில் மிகவும் திறமையாக செயற்படுபவர்களாக உள்ளனர்.

இவற்றினை ஒப்பரேசன் பலவேகயவுடன், தற்பொழுது தொடர்ந்து கொண்டி ருக்கும் 'ஜயசிக்குறு' நடவடிக்கையை ஒப்பிடுவதன் மூலம் காணக்கூடியதாக உள்ளது. அதாவது, புலிகள் ஒருபெரும் படையெடுப்பினை நீண்டகாலத்திற்கு எதிர்கொண்டு போரிடும் ஆற்றலையும், அதேசமயம் ஒப்பீட்டு ரீதியில் எதிர்த்தரப்பிற்கு தம்மைவிட அதிகரித்த இழப்பினை ஏற்படுத்தும் ஆற்றலையும் பெற்றுக்கொண்டு விட்டனர் என்பதை அண்மைய சமர்கள் உணர்த்துகின்றன. இதனை இங்கு கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை தெளிவுபடுத்துகிறது.

விடுதலைப் புலிகள் மரபுவழிப் போர் முறையில் எதிர்கொண்ட நடவடிக்கை யில், ஆரம்பத்தில் புலிகளுடன் ஒப்பிடுகையில் இராணுவத்தின் இழப்பீடு குறைவாக இருப்பதையும் பின்னர் அது படிப்படியாக உயர்வடைந்து செல்வதை யும் தெளிவாகவே அவதானிக்க முடிகின்றது. எடுத்துக் காட்டாக, பலவேகய 1 இன் போது புலிகள் – இராணுவம் இழப்பு 1:0.80 என்பதாக இருந்தது. 'ஜயசிக்குறு'வில் 1:2.5 என்ற ரீதியில் மாற்றம் கண்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில், விடுதலைப் புலிகள் மரபுவழிப் போர் முறையில் சிறீலங்கா இராணுவத்தை முதல் முதலில் 1991இல், ஒப்பரேசன் பலவேகய 1இன் போது எதிர்கொண்டனர். இச்சமரானது, விடுதலைப் புலிகளைப் பொறுத்து ஓரளவு பின்னடைவுடன் முடிவடைந்த சமர் என்றே கொள்ளுதல் வேண்டும். இச்சமரில் 602 விடுதலைப் புலிகள் வீரச்சாவடைந்தனர். இராணுவத்தரப்பில் 400 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இந்த வகையில் இராணுவம் – புலிகள் இறப்பு வீதமானது 2:3 என்ற ரீதியிலானதாக அமைந்தது. ஒப்பீட்டு ரீதியில் புலிகளுக்கு அதிகரித்த தொகையாகவும் இருந்தது. இது புலிகளின் முதலாவது மரபு வழிச் சமர் என்ற ரீதியில் அவர்களின் அனுபவமின்மை என்பதையும், புலிகள் மரபுவழிச் சமருக்கு ஏற்ற ஆயுத தளபாடங்களைக் கொண்டிருக்கவில்லை என்பதையும் வெளிப்படுத்துவதாக இருந்தது.

ஆனால், பல்வேகய 1இன் பின்னர், விடுதலைப் புலிகள், மின்னல் – 1991, யாழ்தேவி – 1993, சூரியக்கதிர் – 1995, சத்ஜெய – 1995, ஜயசிக்குறு – 1997 / 98 ஆகிய நடவடிக்கைகளை ஓரளவு மரபுவழிப் போர்முறை சார்ந்து எதிர்கொண்டனர். ஒப்பீட்டு ரீதியில், இந்நடவடிக்கைகளின் முடிவுகளானது, பலவேகயவிற்கு மாறானதாக புலிகள் மரபுவழிப் போர் முறையில் மிக வேகமாக வளர்ச்சி பெற்று வந்துள்ளதை வெளிக்காட்டுவதாக இருந்தது. இதனை இராணுவத்தின் இழப்பு வீதத்துடன் புலிகளின் இழப்பு வீதத்தை ஒப்பிடுகையில், அது விரைவாக வீழ்ச்சிகண்டு வந்துள்ளதைக் கொண்டே அவதானிக்க முடியும்.

அதாவது, ஒப்பரேசன் பலவேகய 1இல், 1:1.3 என இருந்த இராணுவம் – புலிகள் இழப்பு விகிதாசாரம், மின்னலில் 1:0.79 எனவும், யாழ்தேவியில் 1:0.58 எனவும் சூரியக்கதிரில் 1:0.57 எனவும், சத்ஜெயவில் 1:0.29 எனவும், ஜயசிக்குறுவில் 1:0.40 எனவும் விரைவான ரீதியில் வீழ்ச்சிகண்டது. அதாவது, புலிகள் விரை வான வேகத்தில் மரபுவழிப் படையணியாகச் செயற்படும் ஆற்றலும், திறனும், அதற்கு ஏற்ற வகையிலான ஆயுத தளபாடங்களை ஓரளவேனும் பெற்றுக் கொண்டுள்ள மையும் வெளிப் படுத்தப் படுபவையாக அமைந்தன.

அதிலும் குறிப்பாக, ஜயசிக்குறு நடவடிக்கைகளில் 1:0.4 என்ற விகிதாசாரத்தைப் புலிகளால் வைத்துக்

தொடர்ச்சி 06ம் பக்கம்.....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழரை ஒடுக்க சந்திரிகா ஏற்படுத்திய நிவாரண வெட்டு

தமிழ் மக்கள் மீதான ஒடுக்கு முறைக்கு எந்த வழிமுறைகளையும் கையாண்டு வருவதற்கு சந்திரிகா அரசு தயாராக உள்ளது என்பதையே அதன் நடவடிக்கைகள் மீண்டும் மீண்டும் உணர்த்துகின்றது. ஒருபுறம் தமிழ் மக்கள் மீது கொடிய போர் ஒன்றை நடத்திக் கொண்டிருக்கும் சந்திரிகா அரசு, மறுபுறம் உணவு - மருந்துப் பொருட்கள் என்பவற்றுக்கு விடுத்துள்ள தடைகள், கட்டுப்பாடுகள், விநியோக வெட்டு என்பன ஒடுக்குமுறையைத் தீவிரமாக்கியது. தமிழ் பிரதேசங்களில் சிறீலங்கா அரசு நடத்திய பாரிய படையெடுப்புகளும் 'பாதுகாப்பு' என்ற ரீதியில் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளும் இலட்சக்கணக்கான தமிழ் மக்களின் பொருளாதார வாழ்க்கையை முற்றாக சிதைத்துவிட்டுள்ளது. ஒருபுறம் இராணுவத் தாக்குதல்களினால் பல ஆயிரம் குடும்பத் தலைவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதன் காரணமாக இக்குடும்பங்கள் உழைப்பாளிகளை இழந்த குடும்பங்களாக வருமானமும் பாதுகாப்பும் அற்ற குடும்பங்களாக மாறியுள்ளன. இதேவேளை, இராணுவம் மேற்கொண்டுள்ள பாரிய இராணுவ நடவடிக்கைகள் இலட்சக்கணக்கான தமிழ் மக்களை அகதிகளாக்கியுள்ளது. இதனால், தமிழர்களது விளைநிலங்கள், தொழில் அகங்கள், கால்நடைகள், சொத்துடமைகள், வீடுகள் என்பன வற்றை விட்டு மக்கள் ஆங்காங்கு சிறு குடிசைகளிலும் மரநிழல்களிலும் தமது வாழ்க்கையைக் கழித்து வருகின்றனர். அதாவது, தொழில் இழந்து, வீடு இழந்து, சொத்து உடமைகளை இழந்து மக்கள் பெரும் அவலவாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கின்றனர். இதேசமயம், இராணுவம் ஆக்கிரமித்துக் கொண்டுள்ள பகுதிகளில் சில பகுதிகளைத் தவிர மற்றைய இடங்களில் மக்கள் வாழ்வதற்கு அனுமதிக்கப்படவில்லை.

> தற்போதைய நிவாரண வெட்டுக்கள் துன்புற்றுள்ள மக்களை மேலும் துன்புறுத்தவும் வாழ்வைச் சாவின் விளிம்பிற்குக் கொண்டு செல்லச் செய்யவுமே திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனையே, நிவாரணத்தில் வெட்டுச் செய்வது போன்று மறுபுறம் சுகாதாரத் தேவைகளையும் மறுக்கும் அரசின் முயற்சி தெளிவாக்குகிறது.

இந்த நிலையில் இராணுவக் கட்டுப்பாடு உள்ள பகுதிகளில் வாழும் மக்கள் கூட, தமது சொந்த இடங்களில் வாழ்வதற்கு அனுமதிக்கப்படாது அகதிகள் என்ற நிலையிலேயே காலம் தள்ளிவருகின்றனர். இந்த நிலையில் தமிழ் மக்களுக்கு வழங்கிவந்த நிவாரணத்தில் பெரும் வெட்டு ஒன்றைச் செய்வதற்கு சந்திரிகா அரசு தீர்மானித்துள்ளது. கடந்த காலத்திலும் சிறீலங்கா அரசு தமிழ் மக்களுக்கு வழங்கி வந்த நிவாரணத்தை வெட்டுச் செய்ததும், காலதாமதம் செய்ததும் வழமையான ஒன்றுதான். ஆனால் தற்போதைய நிவாரண வெட்டுக்கள் துன்புற்றுள்ள மக்களை மேலும் துன்புறுத்தவும் வாழ்வைச் சாவின் விளிம்பிற்குக் கொண்டு செல்லக் கூடியதாகும். இவ்வாறு, ஒருபுறத்தில் நிவாரணத்தில் வெட்டுச் செய்வது போன்று மறுபுறம் சுகாதாரத் தேவைகளையும் மறுக்கும் முயற்சியில் அரசு முனைப்புடன் ஈடுபட்டுள்ளது. இதன் ஒரு அங்கமாகவே மருந்துப் பொருள்கள் மீதான பெரு வெட்டையும், தாமத்தையும் அரச மேற்கொண்டுள்ளது. இது பட்டினியுடன் போராடும் மக்களைச் சாவை நோக்கி விரைந்து தள்ளுவதற்கு அரசு மேற்கொண்டுள்ள மற்றொரு நடவடிக்கையாகும். வன்னிப் பகுதி ஏற்கனவே சுகாதார சேவைகளில் மிகவும் குறைந்த பகுதியாகும். இதே சமயம் மறுவளமாக மலேரியா போன்ற கொடிய நோய்களினால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகும் ஆபத்து நிறைந்த பிரதேசம் ஆகும். இந்த நிலையில் அத்தியாவசியத் தேவைப் பொருள்களில் அதுவும் குறிப்பாக, முக்கியமான மருந்துப் பொருள்களில் பெரும் வெட்டுச் செய்வதும் தாமதப் படுத்துவதும் தமிழின அழிப்பை அரசு தீவிரப்படுத்தும் முயற்சியே ஆகும். அவ்வாறு இல்லாதுவிடில் மருந்துப் பொருள் விநியோகத்தில் பெரும் வெட்டும் தாமதமும் செய்யும் அரசு, மருந்துப் பொருள்கள் மீது விதிக்கும் கட்டுப்பாட்டையாவது தளர்த்தியிருக்க முடியும். ஆனால் அரசோ கட்டுப் பாடுகளைத் தீவிரமாக்கியுள்ளதோடு, விநியோகத்தையும் இல்லாது ஒழிக்கவே முனைகின்றது. இதன் மூலம் இராணுவத்தின் இன அழிப்பிற்கு ஆதரவாக உணவு - மருந்து என்பனவற்றையும் அரசு பயன் படுத்துகிறது எனலாம்.

அவ்வாறு இல்லாதுவிடின் போரிற்கு நிதித்தேவை எனப்படும் போது குறைநிரப்பு பிரேரணைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் அரசு போரினால் பாதிக்கப்பட்டு அல்லலுறும் மக்களின் நிவாரண நிதியை வெட்டுவது குறித்து முடிவெடுத்திருக்க மாட்டாது. இந்த வகையில் சந்திரிகா அரசு நிவாரண வெட்டுக்கள் என்ற ரீதியில் இன அழிப்பு ஒன்றை மேற்கொள்வதில் காட்டும் ஆர்வத்தை வெளிக்காட்டுவதேயாகும்.

---

# போர் வெற்றியை நோக்கி .....

சாதனையே ஆகும். ஏனெனில், 'ஜயசிக்குறு' நடவடிக்கையானது இறுதிப் பெரும்படையெடுப்பு என்ற அறிவிப்புடன் சிறீலங்கா அரசினால் ஆரம்பிக்கப்பட்டதொன்றாகும். இதற்கென ஏற்கனவே பெரும் எடுப்பில் இராணுவம் பெரும் தயாரிப்பு நடவடிக்கைகளிலும் இறங்கியும் இருந்தது.

அதாவது, சிறீலங்கா இராணுவம் இதுவரையில் மேற்கொண்ட பாரிய படை நடவடிக்கைகள் யாவற்றையும் விட நவீன ஆயுத தளபாடங்களை மட்டுமல்ல, அவற்றை அதிகரித்த தொகையிலும் பயன்படுத்தியுள்ளது. ஆட்டிலறிகள், மோட்டார்கள், டாங்கிகள் என்பன முன்பு எப்பொழுதும் இல்லாத அளவில் உயர்ந்த அளவில் பயன்படுத்தப்பட்டன. இதேபோன்று இராணுவத்தின் சுடுதிறனும் அதிகரிக் கப்பட்டதொன்றாகவே இருந்தது.

> உயர்ந்தபட்ச இராணுவ இழப்பானது – தரைவழிப்பாதை திறப்பதென்பதை பெரும் கடினமாக்கியுள்ளதோடு, அதற்காக இராணுவம் கொடுக்கும் விலை அதிகரித்ததொன்றாக மாறியுள்ளது.

இதைத் தவிர இந்நடவடிக்கையானது, தற்பொழுது 13 மாதங்களைக் (400 நாட்களை) கடந்துவிட்டது. இந்த நிலையில் இராணுவத்தின் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்திப் போரிட்டு வருவதோடு, தமது இழப்புக்களைக் குறைந்த மட்டத்தில் பேணுவதென்பதில் மரபுவழிப் போர் முறையில் மிகவும் முன்னேற்றகரமானதாகும்.

அதிலும், 'ஜயசிக்குறு' படை நடவடிக்கையின்போது, இராணுவ நகர்வு முயற்சிகளின்போது புலிகள் மேற் கொள்ளும் பதிலடி நடவடிக்கையில் மிகவும் முக்கியம் வாய்ந்தவையாக மாறியுள்ளன. அதாவது, உலக ரீதியில் கெரில்லாப் போர் முறையில் பிரசித்தி பெற்றிருந்த விடுதலைப் புலிகள், மரபுவழிப் போர் முறையில் சிங்கள இராணுவத்திற்குப் பாரிய சேதத்தை விளைவிக்கும் பதிலடி நடவடிக்கை களிலும் இன்று முன்னுதாரணங்களை ஏற்படுத்துபவர்களாக மாறியுள்ளனர். இதற்குச் சிறப்பான எடுத்துக் காட்டாக, கடந்த ஆண்டு டிசம்பரில் நான்காம் திகதி மன்னகுளத்திலும், இவ்வருடத்தில் கடந்த நான்காம் திகதி கிளிநொச்சியிலும் புலிகள் 'ஜயசிக்குறு' துருப்புக்கள் மீது நடத்திய தாக்குதல்கள் சிறப்பான முன்னுதாரணங்களாகும்.

இவ்விரு தாக்குதல்களிலும் புலிகள் - இராணுவம் இழப்பு விகிதாசாரம் 1:10க்கும் மேலாக இருந்தது. இவ்விகிதாசாரமானது, நேரடிச் சண்டை என்ற ரீதியில், ஓர் மட்டுப்படுத்தப்பட்ட ஆளணி, ஆயுத தளபாட வசதிகளைக் கொண்ட அமைப்பினால் ஏற்படுத்தப் படுவதென்பது மிகவும் முக்கிய மானதாகும்.

> போர் முனைகளில் நடக்கும் சம்பவங்களை அவ்வப்போது அவதானித்துச் சேகரித்து வருகின்றோம். செய்தித் தணிக்கை அடுத்த வாரமோ அன்றி அடுத்த மாதமோ அல்லது அடுத்த வருடமோ நீக்கப்படும்போது வாசகர்களுக்கு நிச்சயம் அறியத்தருவோம். அதுவரை வாசகர்கள் அம்புலன்ஸ் வண்டிகளின் அவசர ஒலிச் சத்தங்களையும், இரத்ததானம் செய்யுமாறு தேசிய வைத்தியசாலை வைத்தியர்கள் விடுக்கும் கோரிக்கைகளையும் பார்த்தால், அங்கு என்ன நடக்கின்றது என்று ஊகித்துக் கொள்ளலாம்.
>
> *–'ஐலண்ட்' பத்திரிகையின் பாதுகாப்புத்துறை செய்தியாளர்*

இவ்வாறாக, ஒருபுறம் 'ஜயசிக்குறு' நடவடிக்கை முற்றுப் பெறாமல் நீடித்துக் கொண்டும் மறுபுறம் இராணுவத்திற்குப் பேரிழப்பை உண்டுபண்ணும் நடவடிக்கையாகவும் இருக்கையில், அரச தரப்பு எதனைக் கொண்டு போர் ஓர் தீர்க்கமான முடிவை நெருங்கிக் கொண்டிருக்கின்றது எனக் கூறுகிறது என்பதை, எவருமே விளங்கிக் கொள்வது கடின மானதொன்றாகவே இருக்கும்.

அத்தோடு, 'ஜயசிக்குறு' நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் முன்னரும் சரி, ஆரம்பிக்கப்பட்ட பின்னரும் சரி, தரைவழிப்பாதை திறப்பதைவிட அதனைப் பாதுகாப்பதும் தக்க வைப்பதுமே கடினம் என இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்திருந்தனர். ஆனால் இன்று 'ஜயசிக்குறு' நடவடிக்கையே கேள்விக்குரியதாக மாறியிருக்கையில், பாதையைக் கைப்பற்றினும் அதனைப் பாதுகாப்பது பற்றி எவ்வாறு எதிர்வுகூற முடியும்?

அதாவது, இன்றைய நிலையில் தரைவழிப்பாதை திறப்பானது போரை எவ்வாறு தீர்க்கமான முடிவிற்குக் கொண்டுவர உதவும் என்பது அரச தரப்பினருக்கே வெளிச்சம். ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கிணறுவெட்டப் பூதம் கிளம்பியது!

# நான்கு படுகொலை விசாரணையில்.... நானூறு புதைகுழி மர்மங்கள்!!

**1996**ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஏழாம் திகதி; மாலை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி உயர்வகுப்பு மாணவி கிறிஸ்சாந்தி, இராணுவவாகனத்தால் அடித்துக்கொல்லப்பட்ட தன்சகபள்ளித் தோழியின் சாவீட்டுக்குச் சென்றுவிட்டு, கனத்த மனதுடன் தன்வீடுநோக்கி சைக்கிளில் சென்றுகொண்டிருக்கின்றார். செம்மணியில் இராணுவச் சோதனைச் சாவடியில் குந்தியிருந்த இராணுவப் பிசாசுகள் அந்த இளம் மாணவியை வழிமறிக்கின்றனர். மாலை நேரம்.. வானம் மெல்ல மெல்ல இருள ஆரம்பிக்கும் பொழுது. அந்த மயான வெளியில் இராணுவப்பிசாசுகளால் தனித்துச் சுற்றிவளைக்கப்பட்ட அந்த பிஞ்சு உள்ளம், நிலமையின் தீவிரத்தை உணர்ந்து தவித்தது. தப்பிக்கும் வழியின்றித் துடித்தது. முகம் இருள மனம் கதற செய்வதறியாது திகைத்தது.

அந்த இராணுவ மிருகங்கள், அந்த இளம் மாணவச் செல்வத்தை குதறிக்குதறி தமது பாலியல் வெறியைத் தீர்த்தனர். இராணுவக் குண்டர்களின் கைப்பிடியில் சிக்கிய இளம்தளிர் துவண்டது. மயங்கிக்கீழே சரிந்தது. எந்தவித தயக்கமும் இன்றி, இக்காட்டுமிராண்டிகள், அந்த மலரைக் கொன்று புதைத்தனர்.

எங்கே மகள்? என பதட்டத்துடன் விரைந்து தேடிய தாயார், தம்பியார், துணைக்கு வந்த அயலவர் ஆகிய மூவரும், கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டனர். பின் தடையங்கள் தெரியாதவகையில் புதைக்கப்பட்டனர்.

ஆனால் இந்தக்கொடுமையில், அந்த அப்பாவி உயிர்கள் ஒலிப்பிய அவலக்குரல் உலகெலாம் எதிரொலித்தது. சந்திரிகா அரசின்மீதான கண்டனக் கணைகளாக அவைதிரும்பின. நல்லபிள்ளை வேடம் கலைந்த நிலையில், இதற்கொரு விசாரணை நடத்த சந்திரிகாஅரசு சம்மதித்தது. பின் விசாரணையும் நடத்தியது. இவை நடந்த சம்பவங்கள்.

தற்போது, விசாரணை நிறைவுபெற்று, தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதாவது கடுமையான தீர்ப்பு!

நடந்த கொடுமையை மறைக்கமுடியாத நிலையில், குற்றவாளிகள் குற்றவாளிகளாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டு வழங்கப்பட்டுள்ளது தீர்ப்பு! இக் குற்றத்தைப் புரிந்த அறுவருக்கு மரணதண்டனைத்தீர்ப்பு!

சிங்களப்படையால், வடக்கு கிழக்கில், இது போன்ற பாலியல் பலாத்காரங்கள், படுகொலை நிகழ்வுகள் கடந்த காலங்களில் கணக்கின்றி நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. ஆனால் அவைகள் மறைக்கப்பட்டதுபோன்று, இதனையும் மறைத்துவிட சிங்கள அரசு ஆரம்பத்தில் முனைந்தபோதும், எதற்கு மில்லாதவகையில் இப்படுகொலை நடவடிக்கை உலகஅரங்கின் கவன த்தை ஈர்ந்ததும், அதனால் ஏற்பட்ட எதிர்ப்பலையின் தாக்கம் பெரிதாக இருந்ததை உணர்ந்ததாலேயே சந்திரிகாஅரசு, மற்றைய பயங்கரவாதச் செயற்பாடுகளிலும் இதற்கு முக்கியத்துவம் கொடுத்தது.

சிங்கள அரசாங்கங்களால் நடத்தப்பட்ட முன்னைய விசாரணைகளில், குற்றவாளிகள் சரியானமுறையில் இனங் காணப்பட்டு, இனஅழிப்புப்போரில் உரிய பணியை செவ்வனே செய்திருக் கின்றார்கள் எனப் பாராட்டப்பட்டு பதவிஉயர்வு கொடுக்கப்பட்டதே கடந்தகாலத்து அனுபவங்கள்.

ஆனால் தற்போதைய இந்தத் தீர்ப்பு, வித்தியாசமானதாகவும் விசித்திரமானதாகவும் பார்க்கப்படுகின்றது.

தீர்ப்பு அறிவிக்கப்பட்டிருக்கின்றது! ஆனால் தீர்ப்பு அளிக்கப்படுமா? அல்லது அழிக்கப்படுமா? என்பதே பொதுவாக பொதுசனம் மத்தியில் எழுந்துள்ள சந்தேகம்.

இதில் சந்தேகப்படஎதுவுமே இருப்பதாகத் தெரியவில்லை. ஏனெனில் வழக்குவிசாரணைகளை நடத்த உத்தரவிட்ட சிறீலங்கா அரசு மறுபுறத்தில், இந்தச்சம்பவத்தின் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட இராணுவத்தினரை நல்லவர்களாகக் காட்டும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றது.

ரூபவாகினியில் ஒளிபரப்பப்பட்டுவரும் சிறீலங்காஅரசின் பிரச்சார நாடகம் அந்த வேலையைச் செய்கின்றது. கிறிஸ்சாந்தியை பாலியல் பலாத்காரம் புரிந்து படுகொலை செய்தவர்கள் நல்ல பிள்ளைகளாகக் காட்டும் விதமாய் நாடகம் அமைகின்றது.

ஆக.. உலகத்திற்கு ஒரு முகமும் உள்ளூருக்கு ஒருமுகமும் காட்ட சிறீலங்காஅரசு முயற்சிக்கின்றது என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது.

நாளை, மேல்முறைமீட்டில் இவர்கள் குற்றமற்றவர்களாக நிரூபிக்கவும் சாத்தியங்கள் உண்டு. உலகஅழுத்தம் சற்றுத்தணிய, அந்த விந்தைகளும் நடப்பது சாத்தியமே.

இத்தாலிய விமானக்கடத்தல் வீரன்(?) சோமபால கொழும்பில், வெற்றி வீரனுக்குரிய ஆர்ப்பாட்டங்களுடன் வரவேற்கப்பட்டதும், சில ஆண்டுகள் சிறைவைக்கப்பட்டு, மன்னிப்பளித்து விடுதலை செய்யப்பட்டதும், பின், அவர் தேசபுத்திர இயக்கம் ஆரம்பித்து, தேர்தலில் நிற்பதும் நல்ல முன்னுதாரணங்கள்.



எத்தனை உடலங்கள் எதிரிதன் வேட்டைப் பற்களுக்கு இரையாகிப் போயின!

இதுபோன்று, மரண தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்ட இக்குற்றவாளிகள், நாளை சிறைக்கம்பிகளைத் தாண்டி நாட்டுப்பற்றாளர்களாகப் புறப்படக்கூடும். தேர்தலில் நின்று, ஜெயித்து, பாராளுமன்ற உறுப்பினர்களாகவோ அமைச்சர்களாகவோ பிரதமமந்திரியாகவோ ஆகுதல் கூடும். இவ்வளவும் ஏன் சிறீலங்காவின் சனாதிபதியாகக்கூட இவர்கள் எதிர்காலத்தில் கதிரை தேய்க்கின்ற சாத்தியமும் உண்டு. சிறீலங்காவின் சனநாயகமும் இனவாதமும் இதற்கு முழுமையாக ஆதரவு தெரிவித்துநிற்கும்.

இந்த பாலியல் பலாத்காரம் படுகொலை வழக்கு விசாரணையில் இன்னொரு அவலமும் வெளிப்பட்டிருக்கின்றது. அதாவது, செம்மணி ஒரு பாரிய புதைகுளியாக விசாரணையின்போது வெளிப்பட்டுள்ளது. கிணறுவெட்டப் பூதம் கிளம்பியதுபோன்ற இக்கட்டான நிலை சிங்களத்திற்கு. முதல் குற்றவாளி தெரிவித்த தகவல், சிங்களத்தை திகைப்பில் ஆழ்த்தியிருப்பது உண்மை. நானூறு சடலங்கள் அங்கே புதைக்கப்பட்டிருப்பதாக முதல் குற்றவாளி தெரிவித்த மரண வாக்குமூலத்தின்பேரில் விசாரணைகள் நடக்குமா என்பது ஒருபுறம் இருக்க, இதன்பேரில் விசாரணை நடத்தப்பட்டே ஆக வேண்டும், புதைந்துகிடக்கும் மர்மங்கள் வெளிக் கொணரப் படவேண்டும் என்ற எதிர்ப்புக்குரல்கள், அழுத்தங்கள் பரவலாக எழும் என்பது சர்வ நிச்சயமானது.

ஐக்கியதேசியக்கட்சி காலத்தில் கொன்று புதைக்கப்பட்ட மர்மங்களை, சூரியக்கந்தையில் தோண்டி எடுத்து அரசியல் பிரச்சாரம் செய்த சந்திரிகா, தனது ஆட்சிக்காலத்தில், சமாதானத்துக்கான யுத்தம் என்றபேரிலான ஆக்கிரமிப்புப்போரில், நடந்த படுகொலைகள், ஆக்கிரமித்ததன்பின்னான கடத்தல் படுகொலை, மர்மப் புதைகுளிகள் பற்றிய விசாரணையை நடத்துவாரா என்பதே இன்று, சந்திரிகாவுக்கு எதிராக எழுந்துள்ள கேள்வி.

தமது அதிகாரிகள் தினமும் மாலையில் ஒப்படைக்கும் சடலங்களைப் புதைப்பதே தமது நாளாந்தப்பணியென அந்த முதல் குற்றவாளி தெரிவித்துள்ளான். இராணுவ அதிகாரிகளே கொலைகளைச் செய்வதாகவும், அவன் தெரிவித்திருந்தான். எங்கெங்கே சடலங்கள் புதைக்கப்பட்டிருக்கின்றன என்பதை நேரில் காட்ட தன்னால் முடியும் எனவும் அவன் அந்நீதிமன்றத்தில், அனைவரின் முன்னிலையிலும் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளான்.

நான்கு படுகொலைகளுக்கு விசாரணை நடத்த உத்தரவிட்ட சந்திரிகா, நானூறு புதைகுழி மர்மங்களைத் தோண்டியெடுப்பாரா என்பதை உலகம் எதிர்பார்த்து நிற்கின்றது. ஆனால் இதில் ஒரு முக்கியபிரச்சினையை உலகம் கவனத்தில் கொள்ளத் தவறிவிடுகின்றது. உலகம் மனிதஉரிமை விடயத்தில் சரியான அணுகுமுறையை எதிர்பார்த்து நிற்கலாம், ஆனால், சந்திரிகா எதிர்பார்த்திருப்பது அடுத்துவரும் தேர்தலை! ★

**- சுப்பு -**

> சிங்கள அரசாங்கங்களால் நடத்தப்பட்ட முன்னைய விசாரணைகளில், குற்றவாளிகள் சரியானமுறையில் இனங்காணப்பட்டு, இனஅழிப்புப்போரில் உரிய பணியை செவ்வனே செய்திருக்கின்றார்கள் எனப் பாராட்டப்பட்டு பதவிஉயர்வு கொடுக்கப்பட்டதே கடந்தகாலத்து அனுபவங்கள்.

> மரணதண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்ட இக்குற்றவாளிகள், நாளை சிறைக்கம்பிகளைத் தாண்டி நாட்டுப்பற்றாளர்களாகப் புறப்படக்கூடும். தேர்தலில் நின்று, ஜெயித்து, பாராளுமன்ற உறுப்பினர்களாகவோ அமைச்சர்களாகவோ பிரதமமந்திரியாகவோ ஆகுதல் கூடும். இவ்வளவும் ஏன் சிறீலங்காவின் சனாதிபதியாகக்கூட இவர்கள் எதிர்காலத்தில் கதிரை தேய்க்கின்ற சாத்தியமும் உண்டு.

www.tamilarangam.net



# ஜயசிக்குறுய் நடவடிக்கையும்

**1997** மே 13ஆம் நாள் ஜயசிக்குறுய் சமர்க்களம் இரு முனைகள் வழியே திறக்கப்பட்டது.

நொச்சிமோட்டையூடாக ஓமந்தைவரை நகர்ந்து–அங்கிருந்து முன்னேறி 65 கி. மீற்றர் நீளமான வவுனியா– கிளிநொச்சி தரைப்பாதையைத் திறப்பதை ஒரு களமுனையாகவும்,

டொலர்–கென்ற் (Dollar-Kent) பண்ணைப் பகுதியூடாக முன்னேறி நெடுங்கேணியைக் கைப்பற்றி அங்கிருந்து படைநகர்த்தி வன்னி நிலத்தின் ஒரு பகுதியை விழுங்கிச் செல்வதை நோக்கமாகக் கொண்டு அடுத்த களமுனையையும் பகைவன் திறந்தான்.

இந்த இரண்டு களமுனைகளையும் ஒன்றிணைத்து – நகர்த்தி, புலிகளை முழுமையாக சண்டைக்குள் அமிழ்த்தி – அவர்களின் ஆட்பலத்தைக் கரைத்து – விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் பேராசைத் திட்டத்தையும் ஜயசிக்குறுய் வைத்திருந்தது.

ஒரு வருடத்தை பூர்த்தி செய்துவிட்ட ஜயசிக்குறுய் நடவடிக்கைப் படையினரால், இன்றுவரை, 35 கி. மீற்றர் நீளப் பாதையை மட்டுமே கையகப்படுத்த முடிந்துள்ளது. இன்றைய நிலையில் மாங்குளத்தைக் கைப்பற்றுவதையே நடவடிக்கைத் தலைமையகம் தனது உடனடி இலட்சியமாகக் கொண்டுள்ளது.

ஜயசிக்குறுய் சமரின் ஆரம்ப நாளான மே 13ஆம் நாள் பெருந்தொகையான எறிகணைகளை இரு களமுனைகளிலும் ஏவி – மரபுப் போர் முறையில் – பகைவன் சமர் முரசு கொட்டினான்.

வன்னியின் நில அமைப்பும் – நடவடிக்கைத் திட்டத்தின் பிரமாண்டமும் ராங்க்குகளின் தேவையை படைத்தரப்பிற்கு இடித்துக் காட்டின. இதனால் சிங்களத்தின் கவசப்படை, ஜயசிக்குறுய்ப் படை நகர்வின் முதுகெலும்பாகியது.

எனினும் சமர் தொடங்கிய மூன்றாம் நாள் பகைவனின் கவசப்படையணிக்கு புலிகள் பலத்த அடி கொடுத்தனர். ஓமந்தை சண்டைமுனையில் இரண்டு ராங்க்குகளை அழித்தனர்.

அன்றிலிருந்து எட்டாம் நாள் – மே 24ஆம் திகதியன்று ஓமந்தை முனையைத் திறந்து 3 கி. மீ. தூரத்திலிருந்த இறம்பைக்குளச் சந்தியைக் கைப்பற்ற படையினர் முயற்சித்தனர்.

வயல் வெளிகளையும் சிறு பற்றைக் காடுகளையும் கொண்ட அந்த திறந்தவெளிச் சண்டை அரங்கை புலிகளின் கவச எதிர்ப்பு படையணியாகிய விக்டர் படையணி நன்கு கையாண்டது.

அதிகாலையிலிருந்து மாலைவரை நடந்த அன்றைய பகல் சண்டையில் மேலும் இரண்டு ராங்க்குகளை புலிகள் அழித்தனர். அதேவேளை இறம்பைக்குளத்தை படையினர் கைப்பற்றினர்.

எனினும் நடவடிக்கை தொடங்கி நான்கு நாட்களில் ஓமந்தை, இறம்பைக்களம் பகுதியைக் கைப்பற்றி – அங்கிருந்து இரண்டாங்கட்ட நகர்வைச் செயற்படுத்தலாம் என்றிருந்த படைத்தலைமையின் திட்டம் ஈடேற இரண்டு வாரங்கள் சென்றதுடன், நான்கு ராங்க்குகளையும் இழந்தது. சுமார் 125 படையினரையும் பலிகொடுக்க வேண்டி வந்துவிட்டது.



இந்த இரண்டுவாரச் சண்டையில் காயப்பட்ட படையினரின் எண்ணிக்கை படைத்தரப்பிற்கு அதிர்ச்சியூட்டியது. இந்தக் காலப் பகுதியில் சுமார் 500 இராணுவத்தினர் காயமடைந்திருந்தனர். படைத்தரப்பைப் பொறுத்தவரை இது ஒரு புதிய – அதேவேளை, எதிர்பார்க்காத இராணுவ அம்சமாக இருந்தது. கேணல் கிட்டு பீரங்கிப் படைப் பிரிவின் சரமாரியானதும் – துல்லியமானதுமான எறிகணைப் பிரயோகமே இந்தப் புதிய சண்டைப் பரிமாணத்தை உருவாக்கியது.

ராங்க்குகளின் இழப்பு – படையாட்களுக்கு ஏற்படும் சேதம் – இவை இரண்டும் சிங்களத் தளபதிகளை சிந்திக்க வைத்தன. அதுவும் இரண்டேயிரண்டு வாரச் சண்டையில் 04 ராங்க்குகளையும் – சுமார் 600 படையினரையும் ஜயசிக்குறுய்க் களம் இழந்தது சாதாரண விடயமல்ல.

ராங்க்குகளின் இழப்பைத் தவிர்த்தபடியும் – ஆள் சேதத்தைக் குறைத்தபடியும் முன்னேற சிங்களத் தளபதிகள் திட்டமிட்டனர்.

மோட்டார் – ஆட்டிலறி பலத்தை அதிகரித்து – ராங்க்குப்படை நகர்வுடன் அதை ஒன்றிணைத்துப் பயன்படுத்தி – நகரமுயன்றனர்.

அதன் பிரகாரம் ஆனி 3ஆம் நாள், பலத்த எறிகணைப் பிரயோகத்துடன் எதிரிப்படை களத்தைத் திறந்து – விளக்குவைத்த குளம் சந்தியை நோக்கி நகர்ந்தபோது பகைவனுக்கு எதிர்ப்பு குறைவாகவே இருந்தது. படையினரின் நகர்வு இலகுவாகியது. விளக்குவைத்தகுளம் சந்தியை படையினர் கைப்பற்றினர்.

கைப்பற்றிய வேகத்தில் அடுத்து இருந்த பன்றிக்கெய்த குளத்தைக் கையகப்படுத்தி – அதற்கடுத்திருந்த பனிக்க நீராவியடியையும் ஆனி 06ஆம் நாள் படையினர் பிடித்தனர். மூன்று நாளில் 05 கி. மீ. தூரத்தைக் கடந்த திருப்தியில் படையினர் இரக்க – புலிகள் வேறொரு திட்டத்துடன் இருந்தனர்.

முன்னேறி நகர்ந்து – நிலம் பிடிக்கும் சண்டைகளில் படையினர் கவனத்தைச் செலுத்த,

முன்னேறி நிலைகொண்ட படையினர் மீது ஒரு வலிந்த தாக்குதலைத் தொடுக்க புலிகள் தங்களைத் தயார்படுத்தினர். தாக்க வலயத்திலுள்ள படை நிலைகளில் பலத்தைச் சற்றுக் குறைத்து – தாக்குதல்களைச் சுலபமாக்குவதற்காக படை நகர்வை – புலிகள் மறைமுகமாக அனுமதித்தனர். வெற்றி மிதப்பில் படைநகர்வு நடந்தது.

ஆனி 10ஆம் நாள் நள்ளிரவு சிங்களப்படைத் தலைமைக்கு புலிகள் ஒரு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தனர். புலிகள் இயக்கத்தின் இராணுவ வழமைகளை நன்கு அறிந்திருந்ததால் ஜயசிக்குறுய் நிலைகள் மீது ஒரு வலிந்த தாக்குத்லை படையினர் எதிர்பார்த்திருந்தனர்.

ஆனால்,

பெருமெடுப்பிலான வலிந்த தாக்குதலை எவரும் எதிர்பார்க்கவில்லை. வவுனியாவின் வாசலிலேயே அது நிகழும் என்று எவரும் ஊகிக்கவில்லை. அந்த தாக்குதல் ஜயசிக்குறுய் கட்டளைத் தலைமையகம் மீதே விழும் என்று எவரும் எண்ணவில்லை. அடி விழுந்தது. ஜயசிக்குறுய் பூதத்திற்கான வழங்கல் மையம் மீது இடி இறங்கியது. வெடிப்பொருள் களஞ்சியம் வெடித்துச் சிதறியது. தாக்குதலைத் தடுக்க வந்த இரண்டு ராங்க்குகள் தாக்குதலில் அழிந்தன. மூன்று மோட்டார்கள் அழிக்கப்பட்டன. இராணுவ வாகனங்கள் தீயில் எரிந்தன. சில, புலிகளின் கைகளிற்கு வந்தன. 400 படையினர் கொல்லப்பட்டனர். 570 பேர் காயமடைந்திருந்தனர். நொச்சிமோட்டைப்பாலம் புலிவீரர்களால் தகர்த்தழிக்கப்பட்டது.

தாண்டிக்குளம் நடவடிக்கைத் தலைமையகத்திலிருந்தபடி ஜயசிக்குறுய் நடவடிக்கையை வழி நடத்திய பிரிகேடியர் வவுனியாவுக்கு தப்பியோடி உயிர்பிழைத்தார். தாக்க வலயத்திற்குள் சிக்கி அகதிகளாகிய பல டசின் படையினர் துவக்குகளைத் துறந்து – வேட்டி கட்டி – தமிழ் மகன்களாய் உருமாறி – உயிர்பிழைத்தனர். முற்றுகைக்குள் அகப்பட்ட படையினர்க்குத் துணை செய்ய உதவிப்படையாக உலங்குவானூர்திகளில் வந்திறங்கி – சிறப்புக் கொமாண்டோக்கள் சண்டையிட்டனர். இதற்குள் அகப்பட்ட எம். ஐ. 24 வானூர்தி குண்டடிபட்டு – களம் அகன்றது.

தாண்டிக்குளம் மீதான வலிந்த தாக்குதல் முடிவுடன் ஜயசிக்குறுய் நடவடிக்கை ஒரு மாதத்தைப் பூர்த்தி செய்தது. இந்த ஒரு மாதச் சண்டையில் புலிகளின் தரப்பில் 185 போராளிகள் வீரச்சாவடைந்தனர். ஆனால், படைத்தரப்பில் 500 பேர் வரை பலியாகியிருந்தனர். அண்ணளவாக 1000 படையினர் காயமடைந்திருந்தனர்.

இந்த வகையில் 1500 படையினரை ஜயசிக்குறுய் களம் ஒரு மாதத்தில் இழந்தது. இந்த இழப்பை ஈடு செய்து – அடுத்த சண்டைக்காக படைத் தரப்பை தயார் படுத்த அவர்களுக்கு இரண்டு வாரம் தேவைப்பட்டது. தாண்டிக்குளத் தாக்குதலால் ஜயசிக்குறுய்ப் படையினர் சோர்வடைந்திருந்தனர். தூரப் பயணம் புறப்படும்போது வாசலிலேயே சறுக்கி விழுவதுபோல ஜயசிக்குறுய் நடை பயணத்தின் ஆரம்பமே அடிவாங்கி அபசகுனமாகியது. இந்த நிலையில் ஒரு இராணுவ வெற்றியை ஈட்டி இந்தச் சோர்வையகற்றி – துருப்புக்களுக்கு உற்சாகமூட்ட படைத்தலைமை விரும்பியது. புளியங்குளத்தைக் கைப்பற்றி அந்த இராணுவ வெற்றியைப் பெற இராணுவத் தலைமை

www.tamilarangam.net



# ஒப்பரேசன் தீர்வுத்திட்டம்

## முன்னுரை

தீர்வுத்திட்டம் ஓர் இராணுவ நடவடிக்கையே, ஐ. தே. கட்சிக் காலத்தில் தடம்புரண்டு முடமாகிவிட்ட இராணுவ நடவடிக்கையைத் தூக்கி நிறுத்திக் காவிச்செல்லும் ஒரு வாகனமே தீர்வுத்திட்டம். இராணுவ நடவடிக்கைக்கு உயிரூட்டவும், அந்த இராணுவ ஒடுக்குமுறையை மேலும் பெரியளவிலும், முழுமையாகவும் மேற்கொள்ள உதவும் தத்துவமும், வழிகாட்டியும், செயல்வடிவத்திட்டமும்தான் தீர்வுத்திட்டம் என்ற வகையில் இது இனவாதத்தின் உச்சக்கட்டமாகவும் உள்ளது.

சிங்கள அரசியற் பொறிமுறையில் தீர்வுத்திட்டத்தின் பங்கும், பணியும் (தொழிற்பாடு) என்ன? இதன் இலக்கும், உள்நோக்கமும். ஆதலால் ஏற்படக்கூடிய தாக்கமும் என்ன? என்பதைக் கண்டறிவதுதான் இக்கட்டுரையின் ஆய்வுப் பொருளாகும்.

பொறிமுறை என்பது ஒன்றில் இன்னொன்று தங்கி அவை அனைத்தும் ஒரு குறித்த இலக்கின் மீது சீராகச் செயற்படுபவையாகும். ஆதலால் அவை ஒவ்வொன்றிற்கும் இடையிலும், கூட்டாகவும் ஒரு பொதுவான தாக்கம் இருக்கும். எனவே, ஒரு குறித்த விடயத்தை ஆராயுமிடத்து அதனை முற்றிலும் தர்க்கமயப்படுத்திவிட்டால் அதன் குணமும், குறியும், நோக்கும், இலக்கும், திறனும் பட்டெனத் தெரியும்.

சமூக விஞ்ஞான விடயம் ஒன்றைக் கணித்தைப் போல அப்படியே தர்க்கமயப்படுத்துவது கடினம். அவ்வாறு அச்சொட்டாக தர்க்கமயப் படுத்த இயலாது விட்டாலும் அதன் பொது ஓட்டத்தை அடையாளம் காணக்கூடிய அளவிற்குத் தர்க்கமயப்படுத்தலாம். இது தீர்வுத்திட்டத்தின் மறைபொருளை அதிற் சொல்லப்படாதிருக்கும் அந்தரங்கத்தை வெளியே இழுத்து தோலுரித்துக் காட்ட உதவும்.

நபர்களின் பிரகடனங்களை, வாக்குறுதிகளை அண்ணாந்து பார்த்து இலவு காத்த கிளியாகாமல் தர்க்கத்தின் சுவடுகளை மட்டும் பின் தொடர்வதே இக்கட்டுரையின் போக்கும் இது கூறும் செய்தியுமாகும். அப்படியாயின் சந்திரிகாவிடமோ அல்லது வேறெந்த சிங்களத் தலைவர்களிடமோ "நல்மனம்" என்று பேதலித்து ஏமாற நேராது.

வரலாறானது பிரகடனங்களிலும், நல்மனங்களிலும் தங்கியிருப்பதில்லை. மாறாக அது யதார்த்தத்திலும் அதன் தர்க்கபூர்வப் போக்கிலுமே தங்கியுள்ளது.

— ஆசிரியர்

★ தீர்வுத்திட்டம் ஒரு பெரும் யுத்தம்

★ யுத்தம் ஓர் இன அழிப்புத் தீர்வு

இதுவே தமிழினம் மீதான சந்திரிகா அரசாங்கத்தின் அரசியல் இலக்கு

★ DEVOLUTION IS A BIG WAR

★ THE WAR IS A GENOCIDAL SOLUTION

This is Chandrika government's political goal regarding the Tamils.

**மு. திருநாவுக்கரசு**

இலங்கை இனவாத வரலாற்றில் சந்திரிகாவின் தீர்வுத்திட்டம் ஒரு தலையாய அத்தியாயம். சிங்கள இனவாத வரலாற்றில் இராணுவ ரீதியிலான ஒடுக்குமுறையைத் தொடர்ந்தும் அப்படியே கடைப்பிடிப்பது தர்க்கபூர்வ வளர்ச்சியின்படி 1989ம் ஆண்டைத் தொடர்ந்து பெரிதும் மங்கத்தொடங்கிற்று. இதன் பின்னர் இராணுவ ஒடுக்குமுறையைத் தொடர்ந்தும் மேற்கொள்வதற்கு புதிய உபாயங்களும், புதிய வழிமுறைகளும் தேவைப்பட்டன. இந்த வகையில் தனது ஒடுக்குமுறைக்கான இராணுவ நடவடிக்கைகளை காவிச்செல்வதற்கான புதிய நியாயப்பாடும், புதிய கோட்பாடும் சிங்கள அரசிற்குத் தேவைப்பட்டன. அந்தவகையில் இராணுவ நடவடிக்கையைக் காவிச் செல்வதற்குரிய வாகனமாகத் 'தீர்வுத்திட்டம்' உருவாக்கப்பட்டது.

தீர்வுத்திட்டம் இன்றேல் இராணுவ நடவடிக்கை இல்லை. இங்கு தீர்வுத்திட்டம் என்பது இராணுவ நடவடிக்கைக்கான முன்னேற்பாடும், அதன் முக்கிய பகுதியுமாகும். ஆதலால், தீர்வுத்திட்டம் என்பது இராணுவ நடவடிக்கையேயாகும். அதிலும் இத் தீர்வுத்திட்டம் என்பது இராணுவ நடவடிக்கையை முன்னெடுப்பதிலும், உந்திச் செல்வதற்குமுரிய முக்கிய கருவியென்ற வகையிலும், இராணுவ நடவடிக்கைக்கான உயிரூட்டி என்ற வகையிலும் இது இனவாதத்தின் உச்சக்கட்டம் என்ற பெருநிலையை அடைந்து விடுகின்றது. இதனை விபரமாக நோக்குவோம்.

தமிழ் மக்களுக்கெதிரான சிங்கள ஒடுக்குமுறையானது முதலில் திட்டங்களினாலும், சட்டங்களினாலும், நிர்வாக ஏற்பாடுகளினாலும் மேற்கொள்ளப் படலாயிற்று. இவற்றை எதிர்கொள்வதற்கு தமிழர் தரப்பிலிருந்து விண்ணப்பங்களும், விவாதங்களும், வழிகாட்டல்களும், கோரிக்கைகளும் முன்வைக்கப் பட்டன. ஆனால், அவை அனைத்தும் அரசதரப்பிற் பொருட்டற்றவையாகின. இதனால், ஏதோ ஒரு வழியில் நேரடிப் போராட்டம் தவிர்க்கமுடியாதவாறு பிறக்கவேண்டியேற்பட்டது. இந்நிலையில் நேரடிப் போராட்டம் என்ற வகையில் முதலிற் சாத்வீக வழியிலான கறுப்புக்கொடி, கடையடைப்பு, கால்நடை யாத்திரை, சாப்பாணி எதிர்ப்பு எனப் பல உதயமாகின. இவற்றைக் குண்டர்கள் மூலமும், இனப்படுகொலைக் கலகங்கள் மூலமும், பொலிஸ் கொடுங்கோன்மை மூலமும் அரசு ஒடுக்கியது. ஆனால், இவற்றைக் கடந்தும் தமிழ் மக்கள் தமது ஜீவாதார உரிமையில் உறுதியடைந்து தமது ஒருமைப்பாட்டையும் ஐக்கியத்தையும் வலுவாகக் காட்டவும் வளர்க்கவும் தொடங்கினர். இந்நிலையில் தனது ஒடுக்குமுறையின் அடுத்த பெரும் சக்தியாகிய இராணுவத்தை அரசு மெல்லக் களத்தில் இறக்கத் தொடங்கியது.

ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்தில் இராணுவ ஒடுக்குமுறை முழுவடிவம் பெற்றது. இலங்கையில் நிலவும் பிரச்சனை 'பயங்கரவாதப் பிரச்சனையே தவிர தமிழர் பிரச்சனையல்ல' என ஜே. ஆர். கூறி முழு அளவில் இராணுவ ஒடுக்குமுறையை மேற்கொண்டார். அவரின் பின் ஆட்சிக்கு வந்த ஆர். பிரேமதாசா, டி. பி. விஜயதுங்கா போன்றோரும் அதே பாதையிற் சென்றனர். இதில் பின்னவர் மேலும் ஒருபடி மேலே சென்று "தமிழர் மரத்தில் படரும் செடி" அவர்களுக்கு இலங்கையில் சம உரிமை கிடையாது என்றார். இங்கு இனப் பிரச்சனை கிடையாது; பயங்கரவாதப் பிரச்சனை தான் இங்குண்டு என அவர் மேலும் அடித்துக் கூறினார். அதற்கு இராணுவத் தீர்வுதான் ஒரேயொரு தீர்வு என மிகவும் வற்புறுத்திச் செயற்பட்டார்.

இத்தகைய நிலைப்பாடனது சிங்கள அரசை உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் நீதிநியாயமற்ற ஒரு அரசாக எடுத்துக்காட்டியதுடன், சிங்கள அரசையும் சிங்கள மக்களையும் காட்டுமிராண்டிகள் என்றும் மிலேச்சர் என்றும் உலகம் கருதும் நிலையேற்பட்டது. இதனால், இராணுவம் தனது அரசியல் பலத்தையும், அங்கீகாரத்தையும் முற்றிலும் இழந்ததுடன் இந்த இராணுவம் உக்கி உழுத்துப்போனது.

முழுநீள இராணுவவாத இராணுவ ஒடுக்குமுறையின் மூலம் இராணுவம் உயிரற்றுப் போனதால் அதற்குப் புத்துயிர் ஊட்டவேண்டிய அவசியம் சிங்கள அரசிற்கு ஏற்பட்டது. இதனால், உணர்ச்சி வசமான அரசியலில் இருந்து புத்தி வசமான அரசியலுக்கு சிங்கள அரசு மாறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. உணர்ச்சிவசம் மிக்க முற்றிலும் இராணுவவாத இராணுவ நடவடிக்கையானது இராணுவத்தை உக்கி உழுக்கவைத்ததால் தந்திரோபாயம் மிக்க அரசியல்வாத இராணுவ நடவடிக்கைக்கு புத்திபூர்வமாக மாறவேண்டிய அவசியம் சிங்கள அரசிற்கு ஏற்பட்டது. அத்தகைய அவசியத்திற்கும், தேவைக்கும், மாற்றத்திற்கும் சந்திரிகா பண்டார நாயக்கா விஜயகுமாரதுங்கா தலைமை தாங்கலானார்.

"சமாதானத்திற்கான யுத்தம்" என்ற ஒரு புதிய யுத்தக் கோட்பாட்டை சந்திரிகா முன்வைத்தார். அதாவது. இங்கு யுத்தம் யுத்தம்தான். ஆனால், யுத்தத்திற்கான காரணமும், பெயரும் வேறு.

* "தமிழ் மக்களுக்குப் பிரச்சனை உண்டு!"
* "தமிழ் மக்கள் பாவம்"
* "தமிழ் மக்கள் யுத்தத்தாற் பெரிதும் துன்பப் படுகின்றார்கள்"
* "கடந்தகால சிங்கள ஆட்சியாளர் தமிழர்களின் உரிமைகளை வழங்கத்தவறியமையே இன்றைய பிரச்சனைகளுக்கெல்லாம் காரணம் ஆகும்"

என்று கூறித் தமிழர்களின் மனங்களில் தன்னை ஒரு ரட்சகராயும் உலகின் கண்களில் தன்னையொரு நீதிமானாகவும் தோற்றுவித்தார்.

சந்திரிகா பதவிக்கு வந்தபின்னர் சமாதானத்திற்கென காத்திரமானதும் செயல் ஊக்கமானதுமான நடவடிக்கைகளில் ஈடுபடாமல் "சமாதானம்" பற்றிப் பாசாங்கு காட்டிக்கொண்டு இராணுவ அமைப்பைப் புனர்நிர்மாணம் செய்வதில் முழுக் கவனம் செலுத்தினார். இதன் மூலம் சமாதானத்தை அதன் உள்ளடக்கத்திற் சாகடித்துவிட்டு "சமாதானத்திற்கான யுத்தம்" என்ற புதிய கோட்பாட்டை முன்வைத்து பழைய இராணுவ ஒடுக்குமுறையை புதிய விதத்தில் மேற்கொள்ளலானார்.

புதிய கரம், புரட்சிக்கரம், நல்லமனம், தாய்மையுள்ளம் எனப் பல தலைகளுடன் சூரவர்மன் தோன்றினார். மென்மையாகப் பேசும் பேராசிரியர் கடுமையாகச் சுடும் தளபதி மாமா ஆகிய இருவரும் சந்திரிகாவின் இரு இறக்கைகள் ஆயினர்.

மென்மையாகவும், மெருகாகவும் பேசும் "பசுமையான" பேராசிரியரின் தீர்வும், பேச்சும் கற்றோரையும், மற்றோரையும் கவர்ந்தன. இதன் மூலம் தமிழரையும் உலகையும் தீர்வுத்திட்டத்தின்பால் அண்ணாந்து பார்க்க வைத்துவிட்டு மாமாவின் சுடுகலங்களை தமிழ் மக்கள் மேல் இயங்கவைத்தார்.

சிங்கள அரசு முழு அளவிலான யுத்தத்தை தமிழ் மக்கள் மேல் மேற்கொண்டது. மக்களின் அடிப்படை ஜீவாதாரத் தேவைகளை பெரிதும் பாதிக்கக் கூடிய பொருளாதாரத் தடைகள் உட்பட அனைத்து மட்டங்களிற்கும் யுத்தம் விரிந்தது. அரசு யுத்தத்தை வழங்கியது, யுத்தத்திற்கான பிரச்சாரத்தை வழங்கியது., யுத்தத்திற்கான அரசியல் இராஜதந்திரத்தை வழங்கியது, மொத்தத்தில் யுத்ததிற்கான அனைத்தையும், யுத்தம் கோரிய அனைத்துத் தேவைகளையும் வழங்கியது. யுத்தத்தை அதனுடன் தொடர்புடைய அனைத்து முனைகளுக்கும் திரித்தும், விஸ்தரித்தும் புதுப்பொலிவுடனான ஒரு முழு நீள யுத்த அரசியலை அரசு மேற்கொண்டது.

சிங்கள அரசின் முன்னைய அரசாங்கங்கள் மேற்கொண்ட யுத்தங்களைவிடவும் இந்த அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட யுத்தம் அளவாலும், பொருளாலும், வளத்தாலும், அழிப்பாலும் மிகப் பெரிதாகியது. இதுவரை முன்னைய யுத்தத்தை எதிர்த்துவந்தோர் மத்தியில்கூட இது "சமாதானத்திற்கான யுத்தம்" என்ற வகையில் ஆதரவைப் பெறலாயிற்று. இதற்கு முன் அரசியல் தளமின்றி தள்ளாடி தரைதட்டிய யுத்தம் இப்போது "தீர்வுத்திட்டம்" என்ற தளத்தில் முழு அளவிற் ஸ்தாபிதம் பெற்றது.

சிங்கள் அரசியலில் இனவாதம் முழு நீளமானது, இராணுவவாதம் அந்த இனவாதத்தின் தலையாய கருவியாகும். இனவாதம் இராணுவத்தை அப்பட்டமான பாதையில் இட்டுச் சென்றபோது அந்தப் பாதையில் இனவாதமானது அதன் உச்சநிலையில் தனக்குத்தானே புதைகுழியைத் தோண்ட வேண்டிய நிலையேற்பட்டது. அப்போது இனவாதம் ஒரு புதிய கட்டத்திற்கு முன்னேறுவதன் மூலமே தனது கருவியான இராணுவவாதத்தை உந்தித்தள்ளமுடியும். அதை முன்னேற்ற முடியும். இந்நிலையில் இனவாதமானது தீர்வுத்திட்டம் எனும் அடுத்த கட்டமான ஒரு புதிய தளத்தில் இராணுவவாதத்தை ஸ்தாபித்து நிலைநிறுத்தலாயிற்று. ஆதலால் தீர்வுத்திட்டம் இன்றேல் இராணுவ நடவடிக்கைக்கு இடமில்லை. எனவே, இந்தவகையில் தீர்வுத்திட்டம் என்பது இராணுவ நடவடிக்கைக்கான ஒரு தத்துவமாகும். ஆதலால் தீர்வுத்திட்டம் என்பது இராணுவவாதத்தை முன்னெடுத்துக் காவிச் செல்வதற்கான தத்துவம் என்ற வகையில் அந்தத் தீர்வுத்திட்டமானது உள்ளடக்கத்தில் இராணுவவாதமேயாகும்.

முழுநீளமான இனவாதத்தில் இத்தீர்வுத்திட்டத்

www.tamilarangam.net



திற்கு எத்தகைய தரமும், இடமும் என்ப தனை இனி எடைபோடுதல் இலகுவாகும். அதாவது இனவாதம் முழு நீளமானது. அதன் தலையாய கருவி இராணுவவாதம், இனவாதத்தின் இன்றைய நிலையில் இராணுவவாதம் இல்லையேல் இன வாதம் இல்லை. இராணுவவாதம் தனது அப்பட்ட மான பாதையில் முடிந்து வீழ்ந்தபோது அதனைத் தூக்கி நிலைநிறுத்தி, நடைபோட வைத்தது இத் தீர்வுத்திட்டந்தான். ஆதலால், இந்நிலையில் தீர்வுத் திட்டம் இல்லையேல் இராணுவவாதம் இல்லை. எனவே, இனவாதத்தின் முக்கிய கருவியாகிய இராணுவவாதத்தினை நிலைநிறுத்த தீர்வுத்திட்டமே அவசியப்பட்டது என்ற வகையிற் தற்போது இனவாதத்தின் உச்சக்கட்டம் தீர்வுத் திட்டமாகும்.

(சந்திரிகாவின் கூற்றுப்படி)

சமாதானம் = தீர்வுத்திட்டம் + இராணுவ நடவடிக்கை

(தீர்வுத்திட்டம் உள்ளடக்கத்தில் இராணுவ நட வடிக்கை என்பதால்)

தீர்வுத்திட்டம் = இராணுவ நடவடிக்கை

ஆகவே,

இராணுவ நடவடிக்கை + இராணுவ நடவடிக்கை = இரட்டிப்பான இனஅழிப்பு அல்லது பெரும ளவிலான இன அழிப்பு.

எனவே, சந்திரிகாவின் சமாதானம் = பெருமள விலான இனஅழிப்பு

சிலவேளை எழுந்த மாத்திரத்தில் பார்க்கும் போது சந்திரிகா உண்மையிலே சமாதானத்தில் பற்றும், உறுதியும் கொண்டவர் போல் தோன்றலாம். இதனைத் துருவி ஆராய்ந்தால் உண்மை உள்ளங்கை நெல்லிக்கனி போல் ஆகும்.

முதலில் தமிழ் மக்களுக்குப் பிரச்சனையுண்டு என்று சந்திரிகா கூறினார். அதுமட்டுமன்றி தமிழ் மக்களின் நியாய பூர்வமான பிரச்சனைகளைக் கடந்த கால அரசாங்கங்கள் தீர்த்துவைக்கத் தவறிய மையால்தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி போராடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்றும் கூறினார். அதாவது, தமிழ்மக்களுக்கு பிரச்சனை யுண்டு. ஆதலால்தான் தமிழ்மக்கள் ஆயுதமேந்திப் போராட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது என் பதுதான் சந்திரிகாவின் விளக்கமாகும். சரி அப்படி யாயின் பிரச்சனையைத் தீர்த்தால் ஆயுதப் போராட் டம் தேவையற்றதாகிவிடும் அல்லது போராட்டம் நின்றுவிடும். எனவே, இதன் பிரகாரம் சந்திரிகா முதலில் செய்ய வேண்டியது என்ன? அதாவது முதலில் பிரச்சனையைத் தீர்க்க வேண்டியதாகும்.

ஆனால், சந்திரிகா உண்மையில் செய்து கொண் டிருப்பது என்ன? சமாதானத்திற்கான இராணுவ நடவடிக்கை என்று கூறி இராணுவ நடவடிக்கை யைத்தான் செய்துகொண்டிருக்கிறார். ஆதலால், இங்கு செயல்பூர்வ அர்த்தத்தில் முன்னின்று செயற் படுவது இராணுவ நடவடிக்கையேதான். இது ஒரு தூய தர்க்கம்.

ஆனால், விவாதத்தின் பொருட்டு விட்டுக் கொடுப்பான இரண்டாம் கட்டத்தில் வைத்தும் பிரச்சனையை நோக்குவோம்.

முதலில் சந்திரிகாவினால் வெளியிடப்பட்ட தீர்வுத்திட்ட யோசனைகூட போதுமானதல்ல. ஆனால், விவாதத்தின் பொருட்டு அதனைப் போது மானது என்று எடுத்துக்கொள்வோம். அப்படியான தீர்வுத்திட்ட யோசனையில் அவர் விசுவாசமுள்ள வரானால் அதை அவர் முதலில் அரசியல் யாப்புச் சட்டமாக்கியிருக்க வேண்டும். எனவே இதன்படி முதலில் அத்தகைய தீர்வுத்திட்ட யோசனையை அரசியல் யாப்பு ரீதியிலான வரைவிற்கு உட்படுத்திய பின்னர்தான் இராணுவ நடவடிக்கையை மேற் கொள்ளலாம். அவ்வாறு நடந்துகொள்ளாமல் ஏன் இதனை இப்படியொரு தலைகீழ் முறையில் சந்திரிகா மேற்கொண்டார்? உண்மை இதுதான் அதாவது போராட்டத்தை ஒடுக்குவதற்கான இராணுவ நட வடிக்கைகளை மேம்படுத்துவதற்கு ஏதுவாக தீர்வுத் திட்டத்தை வெறும் அறிவிப்பாகவும், நாடகமாகவும் மேற்கொண்டார். இராணுவ நடவடிக்கை மூலம் போராட்டம் ஒடுக்கப்பட்டுவிட்டால் பின்னர் தீர்வுத்திட்டத்தை வெறும் பம்மாத்தாக்கி விடலாம். அதாவது போராட்டம் ஒடுக்கப்பட்ட பின்னர் தீர்வுத்திட்டம் அவசியமற்றதாகிவிடும் என்பதே அதற்குரிய விளக்கமாகும். இராணுவ நடவடிக்கை யின் போக்கில் தீர்வுத்திட்ட யோசனையின் கதி எப்படி உருக்குலைந்தது, சிதைந்தது என்பதனை இனிப்படிமுறையாகப் பார்ப்போம்.

முதலில் சந்திரிகா தீர்வுத்திட்ட யோசனையைப் பிரகடனப்படுத்திவிட்டு அதன் நிழலில் பாரிய இராணுவ நடவடிக்கையை முடுக்கி விட்டார்.

இராணுவ நடவடிக்கையில் தாம் முன்னேறுவ தாக அவர்கள் நம்பினார்கள். அதன் பின்னணியில் இரண்டாவது கட்டமான அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தீர்வுத்திட்ட யோசனையை வெளியிட்டார். சந்திரி காவின் தீர்வுத்திட்ட யோசனையைவிடவும் பீரிசின் தீர்வுத்திட்ட வரைவு சிறிதாகியது. அடுத்து, இவ் வாறு மூன்றாவது தடவையாக சிறிதாகிவிட்ட வரைவை சட்ட வரைவாக்கி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் போவதாக அரசு கூறியது. ஆனால், தற்போது தீர்வுத்திட்ட சட்ட வரைவிற்குப் பதிலாக தீர்வுத்திட்டப் பிரேரணையைத்தான் அரசு நாடா ளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது. உண்மையில் இது ஒரு வெள்ளை அறிக்கையே (அதாவது, இதனை வெள்ளை அறிக்கை என்றே அழைப்போம்). சட்ட வரைவாகாமல் வெள்ளை அறிக்கையானபோது நான்காவது கட்டத்தில் அதன் முடிவானது முடமா னது. அதேவேளை, இந்த வெள்ளை அறிக்கை முன்பிருந்ததை விடவும், மேலும் சிறுத்துவிட்டது.

வெள்ளை அறிக்கையின் பிரகாரம் கிழக்கு மாகா ணத்தை நான்கு துண்டுகளாகத் துண்டாடிவிட்டு அதிலும் இரண்டு துண்டுகள் வடமாகாணத்துடன் இணைவதா இல்லையா என்பதனை பொதுசன வாக்கெடுப்பின் மூலம்தான் தீர்மானிக்க வேண்டும் எனக்கூறி மேலும் அதனைக் குறுக்கிவிட்டுள்ளது டன் பொதுசன வாக்கெடுப்பு எனும் புதுப் பிரச்ச னையையும் அரசு இப்போது கிளறிவிட்டுள்ளது.

இராணுவம் முன்னேறிவருவதாகக் கருதிய பின் னணியில் இவ்வாறாக ஐந்து கட்டங்களிலும் படிப் படியாகத் தீர்வுத்திட்டம் குறுகிவந்துள்ளதுடன் அது சட்டவரைவாக சமர்ப்பிக்கப்படாது வெள்ளை அறிக்கையாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விந்தையை கூர்ந்து நோக்குவது அவசியம்.

*1965*–ம் ஆண்டு டட்லி — செல்வா ஒப்பந்தத்தின் பிரகாரம் மாவட்ட சபை மசோதாவை ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அதனை சட்டமாக்கியிருக்க வேண்டும். ஆனால், இறுதியில் அதற்குப் பதிலாக *1967*–ம் ஆண்டு மாவட்ட சபை வெள்ளை அறிக்கை சமர்ப்பிக் கப்பட்டு பின்னர் அது கைவிடப்பட்டதை இந்த இடத்தில் நினைவுகூரல் பொருந்தும். அதாவது, ஒரு சட்ட வரைவை (மசோதா) நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த பின்னர் அரசாங்கம் இலகுவில் அதற்குப் பின்வாங்கமுடியாது. ஆனால், பிரேரணை அல்லது வெள்ளை அறிக்கையை சமர்ப்பித்தால் அதனை எப்படியும் பின்வாங்கலாம்.

விவாதத்தின் பொருட்டு "சமாதானத்திற்கான" யுத்தம் என்ற கருத்தை அவர்களின் கருத்துப்படியே நோக்குவோமானால் இதற்குரிய முடிவை இன் னொரு வகையிலும் அணுகலாம்.

அதாவது, தமிழீழ விடுதலைப் புலிகள் தீர்வுத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, அவர் கள் அதனை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்காகவே யுத்தம் நிகழ்கின்றது என்கிறது அரசு.

அப்படியாயின் தீர்வுத்திட்டத்தை ஏற்றுக்கொள் ளாத ஐக்கியதேசியக் கட்சியினர் மீதும், தே. ஐ. முன்னணியினர் மீதும் சிங்கள ஆணைக்குழுவினர் மீதும் சுதந்திரக் கட்சியின் ஒருபகுதியினர் மீதும் அரசு இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு அரசு தான் ஆரம்பத்தில் முன்வைத்த தீர்வுத்திட்ட யோசனையை ஏற்றுக்கொள்ளச் செய்யுமா?

இவ்விவாதத்தினை இன்னொரு உயர்ந்த நிலைக் குக் கொண்டு செல்வதாயின் சந்திரிகாவின் முதலா வது தீர்வுத்திட்ட யோசனையில் இருந்து படிப்படி யாக ஐந்து தடவைகள் தீர்வுத்திட்டம் குறுக்கப் பட்டுவிட்டது. அதாவது, தனது முதலாவது தீர்ப்பு யோசனைக்கு எதிராக சந்திரிகா ஐந்து தடவைகள் அதனை எதிர்த்து பின்வாங்கியுள்ளார். அப்படியா யின் சந்திரிகா தனக்கு எதிராக இராணுவ நடவ டிக்கையை மேற்கொள்வாரா? அப்படியொன்றும் நடக்கவுமில்லை, நடக்கப்போவதுமில்லை. எனவே இது "சமாதானத்திற்கான" யுத்தம் இல்லை. தமிழி னத்தை சிங்கள இனம் ஒடுக்கி அழித்து ஒழிப்பதற் கான யுத்தம் என்பது தெளிவானது.

நிலைமை நெருக்கடி மிக்கதாய் உள்ளது. அப்படி யாயிருந்தும் சந்திரிகா சமாதானத்தில் பற்றுறுதி மிக்கவராய் உள்ளார் என்று சிலர் கூறுகின்றனர். தீர்வுத்திட்டத்தை நிறைவேற்றுதல், ஜனாதிபதி முறை மையை ஒழித்தல் என்பன உள்ளிட்ட அரசியல் யாப்பு மாற்றத்திற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குத் தேவை. ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி இதற்கு ஆதரவு அளிக்க மறுக்கிறது. அவ்வாறு இதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவளிக்காது விட்டால் பொதுசன வாக்கெடுப்பு ஒன்றை நடாத்துவதன் மூலம் இதனைத் தான் நிறைவேற்றுவேன் எனச் சந்திரிகா கூறியதை மேற்படி தரப்பினர் நம்புகின்றனர். அப்படி அவர் அதனைச் செய்வாராயின் இது ஒரு யாப்பு முறை மீறலேயாகும். இப்போதைய சூழலில் இப்படி யொரு யாப்புமுறை மீறலை சந்திரிகாவினால் நிச்சயம் செய்ய முடியாது.

அப்படியொரு யாப்புமுறை மீறலைச் செய்வதா யினும் மேற்படி திட்டத்தை நிறைவேற்ற சந்திரிகா வும், அவரது அரசாங்கமும் தயாராய் இருந்திருக்கு மாயின் அவர்கள் அதனை முன்கூட்டியே பின்வரு மாறு செய்திருக்கலாம். அதாவது, இனப்பிரச்ச னைக்கு அரசியல் தீர்வுத்திட்டத்தைக் கொண்டுவரு தல், ஜனாதிபதிமுறை ஒழிப்பு போன்ற கோசங்களை முன்வைத்து சந்திரிகா தேர்தலில் போட்டியிட்டிருந் தார். இதுவரை இலங்கையின் தேர்தல் வரலாற்றில் யாரும் பெற்றிருக்காத 62% வாக்குகளைப் பெற்று அவர் ஜனாதிபதியானது இத்தகைய கொள்கையை முன்வைத்த பின்னணியில் தான் இத்தகைய பெருவெற்றியின் மத்தியில் அதுவும் ஐக்கிய தேசியக் கட்சி முதுகெலும்பை நிமிர்த்த முடியாத அளவுக்கு முறிந்திருந்த காலகட்டத்தில் மேற்படி யாப்பு மாற்றங்களைச் செய்திருக்கலாம். அல்லது யாப்பை மீறியிருக்கலாம். இதனை கொழும்பிலிருந்து வெளி யாகும் ஆங்கிலப் பத்திரிகைகள் சுட்டிக்காட்டியுள் ளன. இங்கு சந்திரிகா சமாதானத் தீர்வில் சிறிதும் விசுவாசமற்றவர் என்பதே உண்மை. ஆனால், இதற்கும் அப்பால் இவர் சமாதானத்தில் அக்கறை யுள்ளவர் என்று வைத்துக்கொண்டாலும்கூட நடை முறையில் அவர் யுத்தத்திற்கும், இன அழிப்பிற்கும் தான் தலைமை தாங்கியுள்ளார் என்பதே இங்கு கவனிக்கவேண்டிய விடயமாகும். எனவே, அவர் உண்மையில் நல்லெண்ணம் கொண்டவர் என வைத்துக்கொண்டாலும் நாம் பிரச்சனையை ஒரு சிலரின் நல்லெண்ணங்களிலிருந்து நோக்கமுடியாது. அவர் அல்லது அவர்கள் சார்ந்திருக்கும் அமைப்பின் போக்கிலிருந்தும் அந்தப் போக்கிற்கான யதார்த்த பூர்வமான தர்க்கபூர்வ செயற்பாட்டிலிருந்துமே எந்தவொரு பிரச்சனையையும் நோக்கவும், அளவீடு செய்யவும் வேண்டும்.

மேற்படி போக்கினிற்கூடாகவும் பார்த்தால் தீர்வுத்திட்டம் இன ஒடுக்குமுறையை உச்ச அளவில் அரங்கேற்றும் ஒரு கருவியென்பது தெளிவு.

சமாதானம், ஜனநாயகம், தீர்வுத்திட்டம் என்பன வற்றின் பெயரால்தான் அரசாங்கம் தன்னைப் பற்றி ஓர் பெரிய பிம்பத்தை சர்வதேச அரங்கில் கட்டி யெழுப்பியுள்ளது. இத்தீர்வுத்திட்டம் பொய்யாகும் போது அரசியல் அரங்கில் இந்த அரசாங்கம் அம்பலமாவது தவிர்க்கமுடியாததுதான். இவ்வாறு நிர்வாணமாக நேரும் என்பது அரசாங்கத்திற்குத் திட்டவட்டமாகத் தெரியுமேயானாலும் அது சூழலின் நெருக்கடியைச் சாட்டாகக் காட்டி நிலவை ஆடையாக அணிந்துகொண்டு நடமாடும் தைரியம் அதற்கு உண்டென்பதுதான்.

தமிழ் மக்களுக்கு உரிமை வழங்குவதற்கான எந்தவொரு சமாதானத் தீர்வு முயற்சியும் இயற்கை மரணத்தை அல்லது அகால மரணத்தையெட்டும் என்பது அரசாங்கத்திற்குத் தெரியும்.

சிங்கள ஆணைக்குழு போன்று ஏதாவது கும்பலோ அல்லது மகாசங்கத்தாலோ அன்றி எதிர்க் கட்சியாலோ அன்றி அரசாங்கத்தின் பொறியினாலோ அல்லது இவை அனைத்தின் கூட்டினாலோ தீர்வென்பது புதைகுழிக்குள் தள்ளப்படும் என்பது தெரியும். இதில் ஆளும் கட்சியானது தனது தேவைக்கு ஏற்ப மேற்படி சக்திகளுள் ஏதாவது ஒன்றையோ அல்லது பலவற்றையோ தூண்டிவிட முடியும் என்பதைக் கருத்திலெடுக்கத் தவறக்கூடாது.

சிங்கள இனவாதம் தவிர்க்க முடியாத ஏதாவது நெருக்கடியின் மத்தியில்தான் தமிழர்களுடன் ஏதாவது விட்டுக்கொடுப்பிற்குத் தயாராவது உண்மை. ஆனால், தான் பலமாக உள்ள கட்டத்தில் தமிழருக்கு எந்தவொரு உரிமையையும் வழங்கத் தயாராக இருக்கவில்லை. அது நீதியின் பெயரால் உரிமைகளை அணுகுவதில்லை.

"புலிகளைத் தமிழ் மக்களிடமிருந்து அந்நியப் படுத்தாமல் புலிகளை அழிக்கமுடியாது. அவர்க ளைத் தமிழ் மக்களிடமிருந்து அந்நியப்படுத்த வேண்டுமானால் தீர்வுத்திட்டத்தை முன்வைக்க வேண்டும்" என்றவாறான கருத்துகளை முன்வைத் தது. இதன்படி இத்தீர்வுத்திட்டத்தின் அடிப்படை யில் இராணுவ நடவடிக்கையை அரசு மேற்கொண் டது.

இராணுவ நடவடிக்கைகள் தொடர்ச்சியாக வெற்றிபெற்று வருவதாக அரசு கூறியது. 80% யுத்தம் முடிவடைந்துவிட்டது. புலிகளை முற்றாகத் தோற் கடிக்க இன்னும் 20% யுத்தம்தான் உண்டு என்று ஜெயசிக்குறுவைத் தொடங்க முன்னர் அரசாங்கம் பிரச்சாரம் செய்தது. இறுதியான இராணுவ நட வடிக்கை என்று கூறி அதற்கு வெற்றிநிச்சயம் என்ற பெயரும் இட்டு அரசு இராணுவ நடவடிக்கையை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேற்கொண்டது. இவ்வாறு தமிழருக்கெதிரான இறுதி யுத்தத்தில் வெற்றிநிச்சயம் என்ற நம்பிக்கை சிங்கள மக்கள் மத்தியில் அனைத்து தொடர்பு சாதனங்கள் ஊடாகவும் ஊட்டப்பட்டது. இதன் மூலம் இனவாதிகள் வெற்றியைக் கையில் ஏந்தினார்கள். சரி அப்படி வெற்றி பெற்றுவிட்டால் பின்னர் தமிழர்களுக்கு ஏன் தீர்வுத்திட்டத்தை வழங்கவேண்டும். இவ்வளவு இரத்தம் சிந்தி தமிழரை வெற்றிபெற்ற பின்னர் பிறகேன் தமிழருக்கு எதை யாவது வழங்கவேண்டும். அப்படி அவர்களுக்கு உரிமை வழங்கவேண்டியதில்லை என்ற இலகுவான முடிவுக்கு இனவாதத்தால் வருவது இலகு. ஆதலால் வெற்றி என்ற உணர்வுடன் இனவாதிகள் தீர்வுத் திட்டத்தைக் குழப்ப முற்படுவது எதிர்பார்க்கக் கூடிய ஒன்று. இது இனவாத மரபின் இயல்பாகும்.

ஆனால், நடப்பிலிருக்கும் யாப்பின்படி பதவிக்கு வருவதற்குச் சிங்கள இனத்துடன் ஏனைய இனத்தவரின் வாக்குகளும் அவசியம் என்பதால் ஏனைய இனத்தவரைப் பகைக்கக் கூடியவாறான நடவடிக்கைகளை வெளிப்படையாக விரும்பாமல் அதனை ஏமாற்றுக்கரமாகச் செயற்படுத்த இருபெரும் சிங்களக் கட்சிகளும் (சு. க, ஐ. தே. க.) முற்படுவதுண்டு. ஒருபக்கம் சுதந்திரக்கட்சியின் நீண்ட திட்டமிட்ட ஏமாற்றும், மறுபக்கம் ஐக்கிய தேசியக் கட்சியின் நிதானமான உச்சுதலும் கடந்த மூன்றாண்டுகளும் காணக்கூடிய ஒரு விளையாட்டாக இருந்தது. இதனால், ஐக்கிய தேசியக் கட்சி சட்ட வரைவு வரமுன் வெளிப்படையாக நேரடியாக எதனையும் குழப்பாமல் சட்டவரைவு வந்தபின் ஏதாவதொரு இடத்தில் காலைவாரிவிடுமிடத்து அரசாங்கம் கவிழும் நிலை உருவாகும் என்பதால் சுதந்திரக் கட்சி அதற்கேற்ப தீர்வுத்திட்டத்தில் தனது காய்களை நகர்த்துகின்றது. சட்டவரைவு நாடாளுமன்றத்திற்கு வருமுன் குழப்புவது பதவியிலிருக்கும் அரசாங்கத்திற்குப் பாதுகாப்பானதாகும். ஆனால், சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் குழம்புமாயின் தேசிய முக்கியத்துவமுடைய ஒரு சட்டவரைவு நாடாளுமன்றத்தில் குழப்புமிடத்து அரசாங்கம் தார்மீக ரீதியில் பதவி விலகவேண்டும் என்பது நாடாளுமன்ற மரபாகும்.

இந்நிலையில் விடயத்தை முன்கூட்டிய குழப்புவதற்கு ஏதுவாக சிங்கள ஆணைக்குழுவின் உருவாக்கத்திற்கு சுதந்திரக்கட்சியின் கை மறைமுகமாக இருந்திருக்குமோ என்ற ஐயத்தை எழுப்ப முடியும். சிங்கள ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை கையளிப்பு விழாவில் ம. ஐ. முன்னணியின் பொதுச் செயலாளரும் கபினெற் அமைச்சருமான டீ. எம். தயாரத்தினா அவர்கள் சமூகமளித்திருந்தமை இங்கு கவனிக்கத்தக்கது. அத்துடன் சிங்கள ஆணைக்குழுவைச் சீண்டி அவர்களை மேலும் மூர்க்கமாகச் செயற்படவைக்கும் நோக்கில் அமைச்சர் மங்கள சமரவீரா ஆணைக்குழுவிற்கு எதிரான கடும் வார்த்தைகளைத் தெரிவித்திருக்கலாமெனவும் எண்ணத் தோன்றுகின்றது. அதாவது, ஆணைக்குழுவின் செயல் சிங்கள இனத்திற்கு எதிரான மிகப்பெரிய சதி எனவும், அதன் அறிக்கை வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள் போடப்படக்கூடியது எனவும் சமரவீரா கூறினார். உணர்ச்சிக் கொதிப்பான ஒரு விவகாரத்தில் பொறுப்புள்ள ஒரு அமைச்சர் இப்படிப் பொறுப்பற்ற முறையில் சீண்டியிருக்கக் கூடாது என்று கொழும்பு ஆங்கிலப் பத்திரிகைகள் ஆசிரியர் தலையங்கம் உட்பட கேலிச்சித்திரங்களையும், கட்டுரைகளையும் பிரசுரித்திருந்தன. இப்படி இவர் சீண்டியதற்கு ஏதாவது உள்நோக்கங்கள் உண்டா என்று சந்தேகிப்பது நியாயமே.

இந்த மங்கள சமரவீரா 1987 இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் கீழான மாகாணசபை முறையை சிங்கள மக்களுக்கு இழைக்கப்படும் பெரும் துரோகம் என்று கண்டித்தார். இப்போது எப்படி எங்கு திடீரென ஞானப்பால் பருகினார் என்ற கேள்வி எழும்புவது நியாயமானது. (இந்தியாவுடன் ஒரு ஒப்பந்தத்தைச் செய்துகொண்டமை நாட்டுக்கு இழைக்கப்பட்ட ஒரு துரோகம் என்று அவர் கருதவில்லை. தமிழ் மக்களுக்கான மாகாண சபையையே சிங்கள மக்களுக்குத் துரோகமானது என்று அவர் கருதினார்)

மேலும் அரசாங்கம் வெண்தாமரை இயக்கத்தின் மூலம் சமாதானத்திற்கான பிரச்சாரத்தை மேற்கொள்ளாமல் இராணுவத்தைப் பாராட்டியும், அவர்களுக்குக் கிராம மட்டத்தில் பரிசில்கள் வழங்கியும் அவர்களுக்கென இரத்தம் சேகரித்ததையும் அவதானிக்கலாம். சாராம்சத்தில் வெண்தாமரை இயக்கம் யுத்தப் பிரச்சாரத்தையே செய்தது. இவற்றையெல்லாம் அவதானிக்கும்போது இவர்களின் செயல்கள் உள்நோக்கம் கொண்டவை என்பதும், சதிகாரத்தன்மை வாய்ந்தவையென்பதும் ஊகித்து உணரக்கூடியதாகவுள்ளது. சிங்கள ஆணைக்குழுவின் உருவாக்கத்தில் சுதந்திரக் கட்சியின் கை உண்டா? சிங்கள ஆணைக்குழுவைச் சீண்டி குழப்பத்தைத் தூண்டுவதற்காகத்தான் மங்கள சமரவீரா கருத்துக்களை வெளியிட்டாரா? என்பதில் ஆம் என்பதற்கான நேரடி ஆதாரங்கள் இல்லை. ஆனால், சூழலின் பிரகாரமும் மேற்படி சந்தேகிக்கக் கூடிய சாத்தியக் கூறுகளின் பிரகாரமும் இவ்வாறானதொரு பலமான சந்தேகத்தை எழுப்ப இடமும், நியாயமும் உண்டு. இதை ஒரு முடிவாகக் கொள்ளாவிட்டாலும் இவ்வாறான ஒரு சந்தேகம் தமிழரிடம் எழுவதில் தவறில்லை. ஏனெனில், எதிரி கூட கடந்த காலங்களில் அவ்வாறுதான் பலதடவை செய்திருக்கின்றான் என்பதாலும் ஒரு முன்னெச்சரிக்கையின் பிரகாரமும் இவ்வாறு சந்தேகிக்கலாம்.

தீர்வுத்திட்டம் ஆரம்ப வடிவத்தில் போதாமல் இருந்தது மட்டுமன்றி பின்பு ஐந்துகட்டத் தேய்வுடன் அது பெரிதும் உருக்குலைந்துவிட்டது. அரசாங்கத்தாலோ அல்லது அரசாங்கத்திற்குப் புறம்பான சிங்களச் சக்திகளாலோ எவ்வாறாயினும் இப்போது அதன் மரணப்பத்திரம் தயாராகிவிட்டது.

அந்த மரணபத்திரத்தில் கையெழுத்திட வேண்டியது மட்டும்தான் தற்சமயம் மிச்சமுள்ளது.

வடக்குடன் கிழக்கின் சில பகுதிகள் இணைவதா இல்லையா என்று முடிவெடுப்பதற்காக கிழக்கில் பொதுசன வாக்கெடுப்பொன்றை நடாத்தப் போவதாக அரசாங்கம் அறிவிப்பதன் மூலம், தனது தீர்வுத்திட்டத்தை தானே மறுதலிக்கின்ற ஒரு எதிர் நிலைப்பாட்டை அரசாங்கம் எடுத்திருக்கின்றது என்பது மிகவும் தெளிவாகிவிட்டது. கட்டம் கட்டமாகப் பல தடவைகள் கருச்சிதைவிற்கு உள்ளாகி வந்த தீர்வுத்திட்டம் இத்துடன் முழுமையாகக் கருச்சிதைவடைந்துவிட்டது. இனி இத்தீர்வுத்திட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினும்கூட அதில் பலனில்லை.

இத்தீர்வுத்திட்டம் உள்ளார்ந்த அரசியல் அர்த்தத்தில் இப்போது முற்றிலும் இறந்துவிட்டது. எனவே, இத்தீர்வுத்திட்டம் குறித்து விவாதிக்க வேண்டிய அவசியம் இனியில்லை. ஆனால், இதனையொட்டி அரசியல் எவ்வாறு நகரப்போகின்றது என்பதனை அளவீடு செய்வதற்காக இது தொடர்பாக ஆராய வேண்டியுள்ளது.

தீர்வுத்திட்டத்தை உயிரற்ற முண்டமாகவேனும் நிறைவேற்றத் தவறுமிடத்து இனவாதம் தமிழரை ஒடுக்குவதற்கான அரசியல் சாட்டினை முற்றிலும் இழந்துவிடும். எனவே இனவாதம் தொடர்ந்தும் உயிர்வாழவேண்டிய குறைந்தபட்சத் தேவையின் பொருட்டாவது முண்டமான தீர்வுத்திட்டத்தை நிறைவேற்ற விரும்பலாம், ஆயினும், இவர்களால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள நெல்லி மூடைகளின் யதார்த்தத்திற்குப் புறம்பாக இனி எதையும் செய்ய முடியாத ஒரு அவலம் உண்டு. ஆதலால், கட்டவிழ்த்துவிடப்பட்டு உருளும் நெல்லிக் கனிகளுக்குப் பின்னால்தான் இனி இவர்கள் செல்லவேண்டும். இதுவே இனவாதத்தின் இன்றைய அரசியல் அவலம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு இல்லாதவிடத்து தீர்வுத்திட்டத்தின் சட்டவரைபு நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாது. அல்லது ஒரு சட்டவரைபு தோல்வியடைவதை ஒரு அரசாங்கம் விரும்பமாட்டாது. ஏனெனில், அத்தோல்வி அரசாங்கத்தின் பதவியிறக்கமாகவும் அமைந்திவிடும் என்பதால்.

அதனால்தான் சட்ட வரைவைச் சமர்ப்பிக்கமுன் ஒரு பொதுசன வாக்கெடுப்பை நடாத்தப்போவதாக அரசாங்கம் கூறுகின்றது. அப்படியாக ஒரு சட்ட வரைவைச் சமர்ப்பிக்கமுன் ஒரு பொதுசன வாக்கெடுப்பை நடாத்துவதென்பது அரசியல் யாப்பிற்கு விரோதமானது. எனவே, அப்படி நடாத்துவதாயின் அரசியல் யாப்பை மீறத் தயாராக இருத்தல் வேண்டும். அரசாங்கம் அப்படிச் செய்யும் என்று எதிர்பார்ப்பது கடினம். அப்படியாயின் முன்பு கூறியது போல சந்திரிகா 62% வாக்குகளைப் பெற்றுப் பதவிக்கு வந்தவுடன் அடுத்து அவர் அதைச் செய்திருக்கலாம். அத்துடன் இன்னுமொரு பிரச்சனை என்னவெனில் அப்படியொரு பொதுசன வாக்கெடுப்பிற்கு அரசாங்கம் போவதே இனிக் கடினம் என்பதாகும். ஏனெனில், இப்போது நிலைமை நன்றாகக் குழம்பிவிட்டது. இந்நிலையில் பொதுசன வாக்கெடுப்பில் வெல்வது கடினம். அவ்வாறான ஒரு பொதுசன வாக்கெடுப்பில் வெற்றிபெறுவது கடினம் என்று கருதும் ஒரு வாக்கெடுப்பை அரசாங்கம் நடாத்தமாட்டாது. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விவகாரத்தில் நாடுதழுவிய ஒரு பொதுசன வாக்கெடுப்பில் அரசாங்கம் தோல்வியுற்றால் அது நிச்சயம் இராஜினாமாச் செய்தேயாகவேண்டும். ஆதலால், அப்படியான ஒரு பொதுசன வாக்கெடுப்பை அரசாங்கம் நடாத்துவதற்கான வாய்ப்பு இனியில்லை. ஆனபடியால் கிழக்கில் ஒரு பொதுசன வாக்கெடுப்பை இரு மாவட்டங்களில் முதலில் நடாத்துவதன் மூலம் பிரச்சனைகள் அனைத்தையும் குழப்பியும் திசைதிருப்பியும் விடலாம் என்று அரசாங்கம் நம்புகின்றது.

அடுத்து இருக்கவேண்டிய இறுதி வழி ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து சட்டவரைவை நிறைவேற்றுதல்.

சட்டவரைவுக்குத் தான் திருத்தப் பிரேரணை கொண்டுவர இருப்பதாகவும், அதற்கேற்ப தான் முடிவெடுக்கவிருப்பதாகவும், எனவே சட்டவரைவைச் சமர்ப்பித்த பின்னரே தனது நிலைப்பாட்டை ஐக்கிய தேசியக் கட்சி வெளியிடலாம் என்றும் கூறுகின்றது. இந்த அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒத்துப்போவதில் அரசாங்கத்திற்குப் பிரச்சனையில்லை. ஏனெனில், தீர்வுத்திட்டம் இன்னும் கண்டதுண்டமாக வெட்டப்படுவது அரசாங்கத்திற்குக் கவலையில்லை. ஆனால், இங்கு பிரச்சனை என்னவெனில் சட்டவரையறை நாடாளுமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்ட பின்பே ஐக்கிய தேசியக் கட்சி திருத்தப் பிரேரணையைக் கொண்டுவரப்போவதாகவும் அதற்காக சட்ட வரைவை நாடாளுமன்றில் சமர்ப்பிக்குமாறும் ஐக்கிய தேசியக் கட்சி கேட்கிறது.

இவ்வாறு சட்டவரைவை சமர்ப்பித்த பின்னர் அரசைக் கவிழ்க்கும் நோக்கில் அது எந்த இடத்தில் எப்படிக் காலை வாரிவிடும் என்று அரசாங்கத்தால் எதிர்பார்க்க முடியாமல் இருக்கின்றது. ஆனால், அது நம்பிக்கை வைக்கத் தயங்குகிறது. ஐக்கிய தேசியக் கட்சி எதிர்த்து வாக்களிக்காமல் விட்டாலும் ஏதாவது ஒரு நொண்டிச் சாட்டைச் சொல்லி வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் நாடாளுமன்றில் இருந்து வெளியேறிவிட்டாலே மசோதா தோற்றுவிடும். அதனால் சு.கட்சி ஐக்கிய தேசியக் கட்சி மீது நம்பிக்கை வைக்கத் தயங்குகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியுடன் மேலும் ஒரு வெட்டுக் கொத்தைச் செய்த தீர்வுத் திட்டம் பயனற்றதேயாயினும் அதை நிறைவேற்ற உலக ஒப்புவசாரத்திற்காகவேனும் அரசாங்கம் விரும்பலாமாயினும் இதில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான கட்சி நோக்கில் முதன்மை பெறுவதால் இத்தகைய அணுகுமுறையிலும் சிக்கல் ஏற்பட்டுவிடுகின்றது.

இந்நிலையில் பிரச்சனையின் மையத்தை இன்னொரு இடத்திற்குத் திருப்பவும், பாதிக்கப்பட்டுள்ள தமிழ்மக்கள் மத்தியில் இன்னொரு பிரச்சனையைக் கிழப்பவும், வடக்குடன் கிழக்கின் இரு மாவட்டங்கள் இணைவதா இல்லையா என்பதற்கு அம்மாவட்டங்களில் ஒரு பொதுசன வாக்கெடுப்பை நடாத்தப் போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. கிழக்கின் சில பகுதிகளுக்கான இப்பொதுசன வாக்கெடுப்பு தீர்வைத் தராதது மட்டுமல்ல, தனது தீர்வுத் திட்டத்தை அரசாங்கம் தானே குழப்புவது மட்டுமல்ல. இனப்பிரச்சனைக்கான தீர்வுபற்றி இதுவரை காலமும் (அரை நூற்றாண்டு காலம்) திரட்டப்பட்டு வந்த குறைந்தபட்ச முன்னேற்றகரமான அம்சங்களைக்கூட குழப்பியடிக்கும் நடவடிக்கையாகவும் இது அமைந்துள்ளதுடன், தமிழரைத் தமிழருக்கெதிராகப் பிரித்து அணியமைத்து பிரச்சனையை தமிழருக்குள் மையங்கொள்ள வைப்பதாகவும் அமைந்துள்ளது.

இதனால், தீவு தழுவிய ரீதியில் குவிந்திருந்த பிரச்சனையின் மையம் இங்கு நகர்த்தப்பட்டும், திசைதிருப்பப்பட்டும் விடுவதுடன் மொத்தத்தில் தமிழரின் நலன்கள் இங்கு சிதைக்கப்படுவதற்கான ஓர் இடமாகவும் இது அமைகின்றது. இவ்வாறான ஒரு குழப்பம் வெற்றியடைந்துவிட்டால் பின்னர் சட்டவரைவுக்கான தேவை தணிந்துவிடும் என்று அரசாங்கம் கருதுவது போன்று தெரிகின்றது. அல்லது இத்தகைய குழப்பங்களுக்குள் அரசாங்கம் சாட்டுப்போக்கினைக் காட்டி அதற்குள் பதுங்கிவிட நினைக்கின்றது.

பிரச்சனையை எல்லா வகையிலும் குழப்ப அரசாங்கம் விரும்புவதற்கு ஒரு சிறந்த உதாரணமாக பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் ஒரு பகுதியான முஸ்லிம் காங்கிரசை அது ஏமாற்றும் விதத்திலும், அதனால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையை இங்கு நோக்குவது அவசியம். அதாவது, கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்கென தனித்து தென்கிழக்கு மாகாண அலகு ஒன்று வழங்கப்படும் என அரசாங்கம் உறுதியளித்துள்ளது. ஆனால், மேற்படி பொதுஜன வாக்கெடுப்பு விடயத்தில் அது பின்வருமாறு தனது திட்டத்தை வெளியிட்டுள்ளது. அதன்படி திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் முதலில் பொதுசன வாக்கெடுப்பு நடாத்தப்படும். அவ்விரு மாவட்டங்களும் வடக்குடன் இணைவதாகத் தீர்மானிக்கப்பட்டால் மட்டுமே முஸ்லிம்கள் தங்களுக்கென தென்கிழக்கு நிர்

www.tamilarangam.net



வாக அலகொன்றை அமைப்பதா இல்லையா என்பதற்குரிய வாக்கெடுப்பு நிகழும். திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் நிகழும் முதலாவது வாக்கெடுப்பில் அரசாங்கம் இணைப்பிற்கு எதிராகவே பிரச்சாரம் செய்யும். அப்படியாயின் அரசாங்கத்தின் ஒரு அங்கமான முஸ்லிம் காங்கிரஸ் இம் மாவட்டங்களில் நிகழும் வாக்கெடுப்பில் இணைப்பிற்கு எதிராகவா அல்லது சாதகமாகவா வாக்களிக்கின்றது என்பது நெருக்கடிக்குள்ளாகும். இந்த இரு மாவட்டங்களிலுமுள்ள மொத்தத் தமிழரின் சனத்தொகை 52% முஸ்லிம்கள் 27% சிங்களவர் 21% இதன் படி முஸ்லிம் வாக்குகள் இந்தப் பொதுசன வாக்கெடுப்பின் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் வாக்குகளாகும். எனவே, முஸ்லிம் காங்கிரஸ் ஒருபுறம் இணைப்புக்கு எதிராக வாக்களித்தால் அது கிழக்கில் தனக்கென ஒரு முஸ்லிம் மாகாணம் வேண்டாமென்று வாக்களித்ததற்குச் சமம். இணைப்புக்குச் சாதகமாக வாக்களித்தால் அது அரசாங்கத்துடன் முரண்படுவதுடன் தான் இதுவரை காலமும் எடுத்துவந்த தமிழ் – முஸ்லிம் உறவு பற்றிய நிலைபாட்டிலிருந்தும் விலக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். அத்துடன் 27% முஸ்லிம்களைத் தமிழருடன் சேர்ந்துவாழுமாறு ஒப்புதல் கூறியும் நாடு தழுவிய ரீதியில் 12% முஸ்லிம்களுக்கு தென்கிழக்கு அலகு என்ற நிலை இருப்பதாலும் முஸ்லிம் காங்கிரஸ் கண்டனத்திற்குள்ளாகியிருக்கின்றது.

இதன் மூலம், சந்திரிகா ஒருபுறம் முஸ்லிம் காங்கிரசை ஏமாற்றியிருப்பது மட்டுமல்ல முஸ்லிம்களுக்கிடையில் பிரச்சனைகளையும் உருவாக்கிவிட்டுள்ளார். இந்த நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் விழுங்கவும் முடியாமல் கக்கவும் முடியாமல் நிற்கின்றது. ஆதலால், இப்பொழுது முஸ்லிம் காங்கிரசும் பொதுசன வாக்கெடுப்பை ஒத்திவைக்கும்படி கோரியுள்ளது. இது சந்திரிகாவுக்கு ஒன்றும் முன்கூட்டியே விளங்காத விடயங்கள் அல்ல. தன்னுடன் அரசாங்கத்தில் ஒரு அங்கமாக உள்ள முஸ்லிம் காங்கிரசை சிப்பிலி ஆட்டுகின்றது. இதுவே, இப்படியாயின் அது தீர்வுத் திட்டத்தின் ஏனைய விடயங்களில் எப்படிக் கபடமாக நடக்கும் என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

இதில் முக்கியமாக கவனிக்க வேண்டிய விடயம் என்னவெனில், அரசின் நெருக்கடிகள் முட்டிமோதி இறுகிப்போன நிலையில் இந்த இறுக்கத்தை தமிழரின் தலையிலும் முஸ்லிம்களின் தலையிலும் பாறாங்கல்லாய் சுமத்துவதன் மூலம் அரசு தனது சுமையை இளக்கிக்கொள்கின்றது. நெருக்கடி தர்க்கபூர்வ வளர்ச்சியின் மூலம் அதன் உச்சக்கட்டத்தை அடையும் இடத்து அதன் நிமிர்த்தம் அரசோ அல்லது அரசாங்கமோ வெடித்துச் சிதறவேண்டியதற்குப் பதிலாக அந்த நெருக்கடியையே தமிழரின் தலைக்கும் (முஸ்லிம்களின் தலைக்கும்) திருப்பி விடுவதன் மூலம் அரசும் அரசாங்கமும் ஒரு புதிய சுற்றோட்டத்தையும் பெற்றுவிடுகின்றன. அதாவது, நெருக்கடியின் உச்சக்கட்டம் அரசையோ அல்லது அரசாங்கத்தையோ விழுங்க வேண்டியதும் விழுங்கக் கூடியதுமான நிலையில் இருக்கும் போது ஆட்சியாளர் அந்த சுமையையே ஒடுக்குமுறைக்கான ஒரு புதிய அடிப்படையாகவோ ஒரு ஒடுக்குமுறை வடிவமாகவோ மாற்றி விடுகின்றார்கள்.

இன நெருக்கடியின் ஓர் உச்சக்கட்டமாய் 1987 இலங்கை – இந்திய ஒப்பந்தம் உருவானது. இந்த நெருக்கடியில் அரசோ அன்றி அரசாங்கமோ தம்மைப் பலியிட வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால், இதில் இலங்கை அரசிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான பிரச்சனையின் மையத்தை இந்திய அரசிற்கும் ஈழத்தமிழர்களுக்கும் இடையிலான மையமாக திசைதிருப்பி இருப்பதன் மூலம் சிங்கள அரசை ஜே. ஆர். ஜெயவர்த்தனா முற்றிலும் பாதுகாத்தார். இதில் அந்த நெருக்கடியே தமிழருக்கு எதிரான ஒரு ஒடுக்குமுறையாகவும் மாறியமையையும் காணலாம். நெருக்கடியின் தர்க்கபூர்வ வெடிப்பிலிருந்து ஜே. ஆர். புதிய ஒரு சுழற்சி வட்டத்தைப் பகுதியாகவேனும் தோற்றுவித்தார். இதில் சிங்கள அரசை முற்றிலும் பாதுகாத்தார். ஆயினும், தனது அரசாங்கத்தையே கணிசமான அளவு பலியிட வேண்டியது தவிர்க்கமுடியாததாய் இருந்தது. ஜே.ஆர். ஒரு உப வட்டத்தைத் தோற்றுவித்து தலை போவதற்குப் பதிலாக தலைப்பாகையைப் பலியிட்டேனும் இனவாதத்தின் ஒரு முழுநீள வாழ்விற்கான தலையைத் தப்ப வைத்தார்.

எனவே, தர்க்க பூர்வ வளர்ச்சிகளின்படி நெருக்கடிகளின் உச்ச கட்டத்தில் அது வெடித்துச் சிதறிவிடும் என்று அப்படியே எதிர்பார்த்திருக்கத் தேவையில்லை. இத்தர்க்க விதியில் மனிதனுக்குப் பங்குண்டு என்ற வகையில் மனிதன் சில உபவளைவுகளையோ அல்லது சுற்றுப் பாதைகளையோ உருவாக்கிப் பிரச்சனையில் இன்னொரு நீட்சியை உருவாக்க முடியும்.

இதிலுள்ள அடுத்த பிரச்சனையும் அறிவின் பங்கும் என்னவெனில் நெருக்கடிகள் முற்றிப்போன நிலையில் எதிரி அதற்கான நீட்சியை எங்கு எப்படிக் காணமுடியும் என்பதனைக் கண்டறிவதுதான். அவ்வாறு கண்டறிந்து விட்டால் நீட்சிக்குரிய பருவம் ஏற்படும் முன்பே நெருக்கடியை வெடிக்க வைத்து விடலாம். அல்லது நீட்சிக்குரிய வழியை அடைத்து விடலாம்.

எதிரி ஒரு நடவடிக்கையை மேற்கொள்ளுமிடத்து அதற்குரிய பெறுபேறுகளை அவன் விளங்கிச் செய்கிறானா அல்லது இல்லையா என்பதற்கு அப்பால் அவனது நடவடிக்கைகள் எத்தகைய தர்க்கத்தில் உருப்பெற்றுள்ளது என்பதைக் கண்டறிவதுடன் அது எத்தகைய தர்க்கபூர்வ வளர்ச்சியை அடைய முடியும் என்பதை எடைபோடுவதுந்தான் முக்கியம்.

1. இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு
2. சமாதானத்திற்கான இராணுவ நடவடிக்கை
3. ஜனாதிபதி முறை ஒழிப்பும் மற்றும் அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்களும்.
4. 21–ம் நூற்றாண்டுக்கான புதிய அபிவிருத்தி

என இவற்றைத் தமது முக்கிய திட்டங்களாக சந்திரிகா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் அறிவித்தது. அரசாங்கத்தின் ஓரங்கமான திருமதி சிறீமானி அத்துலத்முதலி தலைமையிலான தே. ஐ. முன்னணி தீர்வுத்திட்டத்தை எதிர்த்து வந்தது. தீர்வுத்திட்டம் ஐந்து தடவைகள் கத்திவைக்கப்பட்டதுடன் அது முற்றிலும் முடமாக்கப்பட்டுள்ளது. இது நிறைவேற்றப்பட்டாலும்கூட அர்த்தமற்றது. எனவே, தீர்வுத்திட்டம் என்பது அர்த்தமற்றதாகிவிட்டது. இங்கு, தனது முதலாவது பிரகடனத்தில் சந்திரிகா தோல்வி அடைந்துள்ளார் ஆயினும் தீர்வுத் திட்டத்தை அவர் உள்நோக்கத்துடன் நாடகமாகவே கையாண்டுள்ளார் என்ற வகையில் தனது இனவாத இலட்சியத்தில் இவர் தன்னை தொடர்ந்து நிலைநாட்டியுள்ளார் என்பதைக் கவனிக்கவேண்டியுள்ளது.

இதில், இவரது பிரகடனத்திற்கும் இலட்சியத்துக்கும் இடையில் முரண்பாடுள்ளது என்ற வகையில் அது அரசாங்கத்திற்கும் சிங்கள இனத்திற்கும் அபகீர்த்தியைக் கொடுக்கும். அரசியல் அரங்கில் இந்த அபகீர்த்தியை உருமறைப்புச் செய்ய அரசாங்கம் முயல்கின்றதேயாயினும் வரலாற்றின் மடியில் இந்த அபகீர்த்தி படியும். இதன் விளைவாக மறுபுறம் போராட்டத்தைத் தவிர தமிழ் மக்களுக்கு வேறுவழியில்லை என்ற நியாயத்தை இது மேலும் வலுப்படுத்தும்.

இது போராட்டத்தை முன்னெடுக்கவும், போராட்டத்திற்கு அனுகூலமாகவும் அமையும்.

அரசு தீர்வுத்திட்டத்தின் பேரில் இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்து தனது ஒடுக்குமுறைத் தேவையை நிறைவேற்றிய தருவாயில்தான் அது தீர்வுத்திட்ட விடயத்தில் ஏமாற்றிவிட்டது என்பது தெரிய வருகின்றது. அதாவது அரசு ஏமாற்றிவிட்டது என்பது உணரப்படும்போது விடயம் கைகடந்ததாயும், காலம் கடந்ததாயும் ஆகிவிடுகின்றது. அந்நிலையில் உண்மை உணரப்படும் பயன் பெரிதில்லை.

இதில் நியாயம் தமிழர் பக்கம் பலமடையுமேயாயின் போராட்டத்தை வலுவிழக்கச் செய்துவிட்டால் பின்னர் அது மீண்டும் தலையெடுக்கக் காலமாகும். அல்லது போராட்டம் சலிப்படையும், சோர்வடையும். பின்னர் பையவே மடியலாம் என அரசு நினைக்கின்றது. அதாவது, போராட்டம் வலுவிழக்கச் செய்யப்பட்டுவிட்டால் நியாயம் இருப்பினும் அதை உதாசினம் செய்துவிடலம் என அரசு நம்புகிறது.

தனது இராணுவ நடவடிக்கைக்கு அங்கீகாரம் பெறவும், அந்த இராணுவ ஒடுக்குமுறையை முழு அளவில் மேற்கொள்ளவும் தீர்வுத்திட்டத்தை ஒரு கருவியாகவோ அல்லது ஒரு வாகனமாகவோ பயன்படுத்துவதில் சந்திரிகா மிகக் கணிசமான அளவு வெற்றியடைந்துள்ளார் என்பதில் சந்தேகமில்லை. எனவே இதில் தீர்வுத்திட்டம் என்பது ஓர் தந்திரோபாய வெற்றியாகும்.

இதில் தந்திரோபாய ரீதியில் அரசாங்கம் வெற்றியடைந்துள்ளதேயாயினும் அரசியல் உள்ளடக்கத்தில் அரசும் அரசாங்கமும் தோல்வியடைந்துள்ளன.

தந்திரோபாய வெற்றி + உள்ளடக்க வெற்றி = முழுவெற்றி

தந்திரோபாய வெற்றி + உள்ளடக்க வெற்றியின்மை = தற்காலிக வெற்றி

தந்திரோபாய வெற்றி + உள்ளடக்கத் தோல்வி = இறுகிப்போன நிலை

தந்திரோபாயத் தோல்வி + உள்ளடக்கத் தோல்வி = முழுத்தோல்வி

இதன்படி சந்திரிகா அரசாங்கம் தற்போது இறுகிப்போயுள்ளது. இந்த இறுகிப்போன நிலையை இளக்குவதும் தொடர்ந்து முன்னேறுவதுமே அரசின் நோக்கம் (இறுகிப்போன நிலையை இளக்குவதற்கான அரசியல் தந்திரமுயற்சிகளில் ஒன்றுதான் கிழக்குப் பொதுசன வாக்கெடுப்பு என்பது) மேலும் வெளிநாடுகளுக்குச் சில விட்டுக்கொடுப்புகளைச் செய்து சர்வதேச அரங்கில் அதன் மூலம் இளக்கிவிட முயலலாம்.

தீர்வுத்திட்டம் என்பது தனித்து முன்வைக்கப்படவில்லை. இது இராணுவ நடவடிக்கையுடன் இணைத்தே முன்வைக்கப்பட்டுள்ளது. எனவே, இதன் இறுதி வெற்றி தோல்வி என்பது இராணுவ நடவடிக்கைகளுடன் இணைத்து பார்ப்பதன் மூலமாகத்தான் பெறமுடியும். தீர்வுத்திட்டம் என்பது ஒரு இராணுவ நடவடிக்கை என்பதையும் இங்கு கருத்தில் கொள்ளவேண்டும்.

இராணுவ நடவடிக்கை மூலம் போராட்டத்தை வலுவிழக்கச் செய்துவிட்டால் பின்னர் தீர்வுத்திட்டம் அவசியப்படாது. தீர்வுத்திட்டம் அவசியப்படாதுவிட்டால் இறுகிப்போன நிலையிலிருந்து அரசாங்கம் தன்னை விடுவித்துவிடலாம். ஆனால், இறுதியில் இனவாதம் தனது இலக்கில் முன்னேறிவிடும். இதன்மூலம் ஓரிரு தசாப்தங்களுக்காவது போராட்டத்தைப் பின்தள்ளுவதன் மூலம் பின்பு காலகதியில் அதை அழித்துவிடலாம் என்று அரசு நம்புகின்றது.

தீர்வுத்திட்டத்தின் பெயரில் இராணுவ ஒடுக்குமுறையை இதுவரை மேற்கொள்ள முடிந்தமை என்பது அரசுக்கும் அரசாங்கத்திற்கும் ஏற்பட்ட ஒருகட்ட வெற்றியே என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அந்த வெற்றியைத் தொடர்ந்து நிலைநாட்டவும், முழுமைப்படுத்தவும் இன்றைய நிலையில் இராணுவ அர்த்தத்தில் அது பெருவெற்றி பெற வேண்டும்.

அரசாங்கம் இராணுவ நடவடிக்கையில் அதிக சிரத்தை எடுத்தது. குறிப்பாக "ரிவிரச" இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து அரசாங்கம் இராணுவ நடவடிக்கையில் நம்பிக்கையும், தைரியமும் கொண்டது. இதனால், தனக்கு வெற்றி நிச்சயம் என்ற மமதையில் "ஜெயசிக்குறு" இராணுவ நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொண்டது. இந்த இராணுவ நடவடிக்கையில் அரசாங்கம் நினைத்த வேகத்தில் வெற்றிபெற முடியவில்லை என்பதுடன் பெரும் இழப்பிற்குள்ளாகியும் விடுதலைப் புலிகளிடம் பெருமளவு ஆயுதங்களையும் தளபாடங்களையும் பறிகொடுத்து வருகின்றது. புலிகளைப் பொறுத்தவரையில் இது அவர்களின் ஜீவமரணப் போராட்டம் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இது அவர்களின் உயிர்நிலையம். எனவே, இந்தப் போர் தணியமுடியாது மேலும் உக்கிரமடையும். இந்த இராணுவ நடவடிக்கையில் அரசாங்கம் நெருக்கடிக்குள்ளாகியிருக்கின்றது. ஆனாலும், அது பின்வாங்க முடியாது. இதில் அரசாங்கம் தோல்வியடையுமானால் அது தீர்வுத்திட்டத்தின் இறுகிப்போன நிலையில் இத்தோல்வி அரசாங்கத்தின் கழுத்தில் விழும் சுருக்குக் கயிறாக அமையலாம். இதில் அரசாங்கம் வெற்றிபெறுமானால் தீர்வுத்திட்ட விடயத்தில் ஏற்பட்ட இறுக்கம் தற்காலிகமாக விடுபட்டு அரசாங்கம் உற்சாகமாய் நடைபோடும்.

இந்த இராணுவ நடவடிக்கையில் ஏற்படக்கூடிய வெற்றி தோல்வியில்தான் அரசாங்கத்தின் மூன்றாவது அம்சமாகிய ஜனாதிபதி ஒழிப்பு, யாப்பு சீர்திருத்தம் போன்ற விடயங்கள் தங்கியுள்ளன. சந்திரிகா ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதில் விசுவாசமாக இல்லை என்பதும் அதுபற்றி அவர் நயத்த குரலில்தான் கதைத்துவருகின்றார் என்பதும் பொதுவாகப் பேசப்பட்டும் வருகின்றன. கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை (த ஐலண்ட்) ஒன்றில் வெளியான கட்டுரை ஒன்றில் சந்திரிகாவை ஒலிவர் குரோம் வெல்லுடன் ஒப்பிட்டுள்ளார். அதாவது பிரிட்டனில் மன்னராட்சியை ஒழிக்கும் போராட்டத்திற்குத் தலைமைதாங்கிய குரோம்வெல் அதில் வெற்றிபெற்றதும் அவர் தன்னை மன்னனைவிட மோசமான கொடுங்கோலானாக்கிக் கொண்டது. எப்படியோ அப்படித்தான் சந்திரிகாவின் போக்கும் அமைந்துள்ளதை அவர் அக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி முறையை ஒழிக்க சந்திரிகாவிற்கு உண்மையில் விருப்பம் இல்லை. ஆனால், இது அவரது தலையாய தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்று என்ற வகையில் இது அவரைத் துரத்திக் கொண்டு வருகின்றது. இதற்கு அவர் முதலில் கொடுத்த காலக்கெடு முடிவடைந்துவிட்டது. யுத்தத்தைக் காட்டி இந்தக் காலக்கெடுவை அவர் மேலும் நீடித்தார். இதற்கு அவர் கொடுத்த இறுதிக் காலக்கெடு 1997 டிசம்பருடன் முடிவடைகின்றது. இக்காலக்

(தொடர்ச்சி 14ம் பக்கம்)

www.tamilarangam.net



# புலிகளின் எதிர்ச்சமரும்


திட்டமிட்டது. புளியங்குளத்திற்கு மிக அண்மையில் 04 கி. மீ. தூரத்திலேயே படையினர் நிலைகொண்டிருந்ததால் வெற்றிபற்றி அவர்கள் நம்பிக்கையுடன் இருந்தனர்.

தாண்டிக்குளம் மீதான பெருந்தாக்குதல் நடந்து சரியாக 12ஆம் நாள் (22.06.97) படையினர் நகர்வுச் சண்டையை ஆரம்பித்தனர். மாலதி படையணி நிலைகொண்டிருந்த பகுதியை உடைத்து – உட்புகுந்து புளியங்குளச் சந்தியைக் கைப்பற்றப் படையினர் எடுத்த முயற்சியை – ராங்க் ஒன்றை அழித்து, 15 படையினரைக் கொன்று பெண்புலிகள் தடுத்து நிறுத்தினர். எனினும் சண்டை நடந்த இடத்திற்கு எதிர்ப்புறமாக – புளியங்குளம் நோக்கி நகர்ந்த படையினர் புளியங்குள சந்திக்கருகிலுள்ள பழைய வாடியடியை அடைந்துவிட்டனர்.

ஆனி 24ஆம் நாள்– தாண்டிக்குளம் மீதான பெருந்தாக்குதல் நிகழ்ந்து 14ஆம் நாள் – ஜயசிக்குறுயின் முன்னரங்கப் பகுதியாக விளங்கிய பெரியமடு மீது பெருந்தாக்குதல் நிகழ்ந்தது.

வலிந்த தாக்குதல்களை நிகழ்த்தும்போது கேந்திர நிலைகளைத் தேர்ந்தெடுத்துத் தாக்கி – அழித்து, விளைவுகளை பல்பரிமாணம் கொண்ட தந்திரோபாய வெற்றியாக்க முயல்வது புலிகளின் வழமை.

தாண்டிக்குளம் – நொச்சிமோட்டை பெருந்தாக்குதல் நிகழ்ந்தபோது ஜயசிக்குறுய் படையினர் இளைப்பாறிக்கொண்டிருந்தனர். இதனால், முன்னரங்கம் சாராரண சிப்பாய்களால் நிரப்பப்பட்டு சண்டைப் படையணிகள் பின்சென்று – கட்டளை மையப் பகுதியில் ஓய்வெடுத்தனர்.




ஆனால், மையப்பகுதியே புலிப்பாச்சலுக்கு உள்ளானதால் பலியானவர்களில் பலர் சண்டைமுனைப் படையினராக இருந்தனர். வழங்கல் மையம் சிதைக்கப்பட்டது. கட்டளைப்பீடம் சின்னாபின்னமாகியது.

பெரியமடுத் தாக்குதல் நிகழ்ந்தபோது படையினர் புளியங்குளத்தைக் கைப்பற்ற முயன்றுகொண்டிருந்தனர். இதனால் முன்னரங்கம் முதல்தர சிப்பாய்களால் நிரம்பியிருந்தது. இந்தத் தடவை புலிகள் முன்னரங்கத்தையே குறிவைத்துப் பாய்ந்தனர்.

ஜயசிக்குறுயின் சண்டைப்படையணியை தாக்கியபடி எதிரிப்படையின் மோட்டார் ஏவு தளத்தைக் கைப்பற்றிவிட புலிகளின் ஒரு அணி முயன்றது. ஏவு தளத்தைக் காவல்காத்த படையினர் எரிர்ப்பை மூர்க்கமாய்க் காட்ட, லெப். கேணல் தனம் களம் புகுந்து எதிர்ப்பை உடைக்கும் சண்டைக்குத் தலைமை தாங்கினான். ஏவுதளம் வீழும் தறுவாயில் பகைவன், தனது மோட்டார்களைத் தானே அழித்துவிட்டு பின்வாங்கினான். நெருக்கமாக நடந்த அந்த தீவிர சண்டையில் தளபதி தனம் களப்பலியானான். சாதனைகள் பல செய்த அந்தச் சண்டைத் தளபதியுடன் இந்தத் தாக்குதலில் 94 போராளிகளும் வீரச்சாவடைந்தனர். படைத்தரப்பில் 185 பேர் கொல்லப்பட்டனர். 200 பேர் வரையில் காயப்பட்டனர். கொல்லப்பட்ட படையினருள் பெரியமடு படைத்தள கட்டளைப்பீட அதிகாரியான கேணல் டீனும் ஒருவர். இந்தத் தாக்குதலின் விளைவா்க புளியங்குளம் பழையவாடியில் தரித்து நின்ற இராணுவம், தானாகவே பெரியமடுவுக்கு பின்வாங்கியது.

புளியங்குளத்தில் வைத்து – பெருமெடுப்பில் – ஒரு மறிப்புச் சண்டை புரிய தலைவர் பிரபாகரன் முடிவெடுத்தார். அதற்காக புளியங்குளச் சந்தியை உள்ளடக்கிய பகுதியை ஒரு படைத்தளமாக்கி – அரண்களமைத்து – ஒரு நீண்டகால நேரடிச் சண்டைக்குத் தயாராகும்படி புலிவீரர்களைப் பணித்தார்.

எதிரியின் குண்டுத் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்கக் கூடிய வகையில் நிலைகளை அமைத்த புலிகள் துணிகரமான முறையில் – புதுவிதமான சண்டைக்குத் தயாரானார்கள். ஒரு சில கிலோ மீற்றர்களை விட்டமாகக் கொண்ட அந்த படைத்தளத்தை பகைவனும் கண்டுகொண்டான். புலிகளின் புளியங்குள தள அமைப்பு தற்கொலை முயற்சி என்றே படைத்தரப்பு கருதியது. தாங்கள் விரும்பியது போல – ஒரு சிறு பகுதியில் – புலிகள் கூடி நின்று தமக்கு வாய்ப்பளிக்கின்றனர் என்று அது எண்ணியது.

புளியங்குளம் மறிப்புச் சண்டை ஆரம்பமானது. பகைவனது பீரங்கிப் படைப்பிரிவின் பிரதான குறியிலக்காக – பரப்பளவில் மிகவும் சிறிய புளியங்குளத் தளம் அமைந்தது. கிபிர் குண்டுவீச்சு விமானங்களினதும் – தாக்குதல் உலங்கு வானூர்திகளினதும் தாக்கு வலயமாக அந்தப் படைத்தளம் மாறியது. குண்டுவீச்சுக்களாலும் – எறிகணை வெடிப்புக்களாலும் களம் அதிர்ந்தது. இதேவேளை, புளியங்குளத்தைச் சூழ படையினர் அரைவட்ட வடிவில் அரணமைத்தனர். குஞ்சுகளைத் தாக்க அலையும் பருந்துகள் போல புலிகளின் அரண்களை உடைத்து

===>

www.tamilarangam.net



# ஜயசுக்குறுய் நடவடிக்கையும்......

உட்புகுந்து நாசம் செய்ய பகைவனின் ராங்க்குப் படையும் முயன்றது.

புளியங்குளத் தளத்திற்குப் பாதுகாப்பாக ஒரு கிலோ மீற்றர் முன்னே - வேகத்தடையைப் போன்று - மாலதி படையணி ஒரு வியூகத்தை அமைத்து - படைத்தளத்திற்கு பாதுகாப்புக் கொடுத்தது. புளியங்குள தளத்தினுள்ளே சாள்ஸ் அன்ரனி படையணியும் சிறுத்தைப் படையணியும் இம்ரான் - பாண்டியன் படையணியும் இணைந்து நின்றன.

பகைவன் எண்ணியது போல முன்னரங்கத்தை உடைத்தெறிந்து தளத்தினுள்ளே உட்புகமுடியாததால் தளத்தை முழுமையாக முற்றுகையிட்டு- துடைத்தெறிய விரும்பினான். இதற்காக நெடுங்கேணியிலிருந்து நகர்ந்தபடையும் புளியங்குள தள முற்றுகைக்கு உதவுவதற்காக நெருங்கி வந்தது. முற்றுகையை தடுப்பதற்காக புலிகள் புதிய வியூகமமைத்து தளத்தின் பாதுகாப்பை விரிவுபடுத்தினர். இந்த முற்றுகை எத்தணிப்புக்களாலும் முறியடிப்பு முயற்சிகளாலும் களம் மெதுமெதுவாக விரிவடைந்தது. விரிந்த களத்தின் காவலர்களாக ஜெயந்தன் படையணி பொறுப்பேற்றது. இவர்களுடன் சுகன்யா படையணியும் - அரசில்துறைப் படையணியும் இணைந்து கொண்டன.

புளியங்குள மறிப்புச்சண்டை தீவிரமாக நடந்துகொண்டிருக்கும்போது மீண்டுமொரு வலிந்து தாக்குதலை நடாத்த புலிகள் முடிவெடுத்தனர். ஜயசிக்குறுய் படையினரின் வழங்கல் மையமாக, குறித்த அந்த நேரத்தில் ஓமந்தை படைத்தளம் விளங்கியது. எனவே, இம்முறை ஓமந்தையே தாக்குதலின் குறியிலக்காகியது. ஆவணி 1ஆம் நாள் பாதையின் இருமுனைகளிலிருந்தும் ஓமந்தை - இறம்பைக்குளம் பகுதி தாக்கப்பட்டது. ஜயசிக்குறுய் படையினர் மீது நடாத்திய இந்த மூன்றாவது வலிந்த தாக்குதலில் 135 படையினர் கொல்லப்பட்டனர். படை நடவடிக்கை தொடங்கி மூன்றுமாத காலம் முடிவடைய முன்னர் நடைபெற்ற இந்த மூன்றுபெரும் வலிந்ததாக்குதல்கள் நடவடிக்கைப் படையினரை திகிலடையச் செய்தது. புலிகள் பலவீனமாக இருக்கின்றனர் என்ற கணிப்பையும் வேகநகர்வு பற்றிய சிங்களத்தின் கனவுகளையும் அவை சிதைத்தன.


இதேவேளை, ஆவணி 19ஆம் திகதி அதிகாலை, புளியங்குளத் தளப்பகுதியில் ஒரு சண்டை ஆரம்பமானது. நெடுங்கேணியில் இருந்து நகர்ந்து புளியங்குளத்தை அண்மித்த படை - மேலும் அருகே வர முயற்சிப்பதுபோல - எறிகணைகளை சரமாரியாக ஏவிச் சுட்டபடி நகர்ந்தது.

புளியங்குளத் தளத்தின் தென்கிழக்கு முனையில் இந்த மறிப்புச் சண்டை நடந்துகொண்டிருந்தபோது - தளத்தின் வடமேற்குப் பகுதியில் இருந்த பகைவனின் படைவீட்டிலிருந்து மின்னலெனப் புறப்பட்டு வந்த ஆறு ராங்க்குகள் அரணுடைத்து தளம் புக முயன்றன. இரண்டு ராங்க்குகளை முன்னரங்க வாசலிலேயே புலிகள் தகர்த்தனர். இன்னொன்று வெளியே நின்றவாறு தளத்தினுட் புக வசதியாக உதவிச் சூடுகளை வழங்கிக்கொண்டு நின்றது. இதேவேளை, இரண்டு ராங்க்குகளும் ஒரு துருப்புக்காவியும் வெற்றிகரமாக அரணுடைத்து - தளத்தினுள்ளே புகுந்துவிட்டன.

புலிகளும் - சிங்கங்களும் ஒரு தளத்தில் நின்றன. இந்த திடீர்ச் சூழலால் தளம் திகைத்தது. வீழ்ச்சியின் விளிம்பில் தளத்தின் நிலை இருந்தது. தளத்தின் அதிபதிகள் விரைவாகச் செயற்பட்டனர். மேலதிக ராங்க்குகளும் - துருப்புக்களும் தளத்தினுள்ளே புகமுடியாதவாறு உடைத்த உடைப்புக்களை அடைக்க முயன்றனர். முன்னரங்க வீரர்கள் அதைச் செய்துவிட்டு செய்தியை அறிவித்தனர்.

ஐந்து நிமிடங்களுக்கு முன்னர் இருந்த நிலை இப்போதில்லை. இப்போது, ராங்க்குகளும் துருப்புக்காவியும் புலிகளின் முற்றுகைக்குள் அகப்பட்டுவிட்டன. உள்ளிருந்து தாக்குவதா அல்லது வெளியேறித் தப்பியோடுவதா என்று குழம்பியபடி பகைவனின் கவசங்கள் பதட்டத்தில் உருண்டன.

தடத்தில் அகப்பட்ட குழுவன் மாடுபோல துருப்புக்காவி அங்கும் இங்கும் ஓடியது. ஆர். பி. ஜிகளால் புலிவீரர் தாக்கினர். அடியை வாங்கிக்கொண்டு விரைவாக ஓட



முடியாது - பெண்போராளிகளது அரணுக்கு முன்னால் நின்று தத்தளித்த போது பெண்புலிகள் நடாத்திய, இறுதித்தாக்கதலுடன் துருப்புக்காவி, புலிகள் வசமானது.

இதேவேளை, ரி55 ரக ராங்க், மூன்று அடிகளை வாங்கிக்கொண்டு - அரண்களை ஏறிக்கடந்து - தளப்பாதுகாப்பிற்காக சற்றே தள்ளிப்போடப்பட்டிருந்த மாலதி படையணியின் நிலைகளையும் கடந்து தப்பியோடியது. சகல முனைகளிலும் சண்டைகள் நடந்ததால் களம் இறுக்கமாக இருந்தது. இத்தகைய சூழலில் தான் புளியங்குள பிரதான தளத்தினுள் இருந்து வட-கிழக்குப் பகுதியூடாக ஒரு ராங்க் வெளியேறி - தமது நிலையை நோக்கி வந்தபோது மாலதி படையணியினர் தாக்கமுயற்சிக்கவில்லை. எமது தளத்தினுள் இருந்து,

எம்மை நோக்கி வருவது

எமது ராங்க்கா! எதிரி ராங்க்கா!

என்று அவர்கள் குழப்பமடைந்தனர். குழப்பத்தைத் தீர்க்க - பிரதான தளத்துடன் தொடர்பு கொண்டு- உறுதிப்படுத்தி - தாக்குதலைத் தொடுப்பதற்கிடையில் இருந்த ஒன்று இரண்டு நிமிடநேர இடைவெளிக்குள் அந்த அதிஸ்டக்கார ராங்க் எதிரிவலயத்திற்குள் நுழைந்து தன்னை தற்காத்துவிட்டது. மற்றைய ராங்க்குகளும் வந்த வேகத்திலேயே தளத்தின் மேற்கு முனைகளுக்கூடாக மின்னல் வேகத்தில் தப்பிச் சென்றுவிட்டன.

அந்த அதிஸ்டத்தை மூலதனமாக்கிக்கொண்டு அடுத்த நாள் விடியற்காலை (20.08.97) அதே மாலதி படையணி நிலைகொண்டிருந்த பகுதியை பகைவனின் ராங்க்குகள் மூர்க்கத்தனமாகத் தாக்கின. சண்டை கடுமையாக நடந்தது. ராங்க் ஒன்று அழிக்கப்பட்டது. வேகத்தடுப்பியாகச் செயற்பட்ட பாதுகாப்பு நிலைகளை விட்டு மாலதிபடையணி பின்வாங்கி பிரான தளத்துடன் இணைந்துகொண்டது. இதனால், குறித்த நிலைகள் பகைவன் வசமானது.

புளியங்குளத் தளத்திற்கு பாதுகாப்பாக, வேகத்தடை போன்று விளங்கிய பாதுகாப்பு ஏற்பாடுகள் விலக்கிக் கொள்ளப்பட்டதால் பகைவன் சற்று உற்சாகமடைந்திருந்தான். இன்னொரு ராங்க் நகர்வைச் செய்து தளத்தை உடைத்து- உள்நுழைய சிங்களத்தின் கவசப்படை திட்டமிட்டது. ஆறு நாட்களில் அதைச் செயற்படுத்தியது. ஆவணி 26ஆம் நாள் தென்புறமிருந்து புளியங்குளத்தை நோக்கி கவசப்படையணி பெருந்தாக்குதலைத் தொடுத்தது. குண்டுவீச்சுக்களும் எறிகணைத் தாக்கதல்களும் கவசப்படையின் நகர்விற்கு உதவின. எனினும், புலிகளின் அரண்களை அதனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அன்றைய சண்டையிலும் ஒரு ராங்க் அழிக்கப்பட்டது.

சுமார் ஐந்துமாத காலமாக புளியங்குள மறிப்புச் சண்டைகள் இடம்பெற்றன. பகைவன் தன்னாலான அத்துவகைத் தாக்குதல் முயற்சிகளையும் சகலவிதமான தந்திரோபாயங்களையும் பயன்படுத்திப் பார்த்தான். குண்டுச் சிதறல்களால் நிலைகள் சின்னாபின்னமாகினாலும் அதற்குள் உள உறுதியுடனும் ஓர்மத்துடனும் நின்று நிலைத்து பகைப்படையை உள்ளே நுழையவிடாது தடுத்து மறிப்புச் சண்டையின் அதி உயர் போர்த்திறனை புளியங்குளச் சண்டையில் புலிகள் வெளிப்படுத்தினர்.

புலிகளின் புளியங்குள தளத்தை உடைத்து உட்புகமுயல்வதென்பது கற்சுவரை வெறுந்தலையால் உடைத்து- உட்புகமுனையும் வேலை என்பதை சிங்களப்படை அனுபவத்தால் உணர்ந்துகொண்டது. புளியங்குள தளத்தை வட்டவடிவமாக சுற்றிவளைத்து நெருங்கி நின்று- முற்றுகை இடுவதென்பதும் இயலாத இராணுவ முயற்சி என்பதையும் கண்டுகொண்டது.

இந்த நிலையில் புளியங்குளத் தளத்திற்கான பிரதான வழங்கல் பாதையைக் கைப்பற்றி தளத்தைத் தனிமைப்படுத்தி- புளியங்குளத்தை புலிகளே கைவிடும்படி நிர்ப்பந்திக்கும் தந்திரோபாயத் திட்டத்தை படைத்தலைமை அமுல்படுத்த விரும்பியது.

புளியங்குளத்திற்கு வடக்கே 05 கி. மீ. தூரத்தில் இருந்த புதூர்ச் சந்தியை நோக்கி காடுகளுக்கூடாக ஒரு துணிகர நகர்வைச் செய்து அதைக் கைப்பற்றி- அங்கே நிலைகொண்டு புளியங்குளத்தின் இருப்பை சிக்கலாக்க படைத்தலைமை முயன்றது.

புரட்டாதி 10ஆம் நாள் இரவின் இருளில் பிரதான பாதையின் கிழக்குப் புறமாக நகர்ந்துசென்ற ஏயர்மொபைல் படையணி என்ற பெயருடைய பகைவனின் சிறப்புக் கொமாண்டோ அணி, புதூர்ச் சந்தியைக் கைப்பற்றி தன்வசப்படுத்தியது.

இதேசமயம் பிரதான பாதைக்கு மேற்காகவும் ஒரு படையணி புதூர்ச் சந்தியை நோக்கி இருட்டுக்குள்ளால் இரகசியமாக விரைந்து-நகர்ந்ததை புலிகளின் அணிகள் கண்டு அதனுடன் மோதின.

பகைத் தலைமையின் தந்திரோபாய நோக்கம் தெளிவாகத் தெரிந்தது. இப்போது புலிகளுக்கு ஒரேயொரு தேர்வு மட்டுமே இருந்தது. புளியங்குளத்தைக் கைவிடுவதா! அல்லது புதூர்ச் சந்தியை மீளக் கைப்பற்றி புளியங்குளத்தைப் பாதுகாப்பதா!

புளியங்குளத்தைப் பாதுகாப்பதில் புலிகள் உறுதியாக இருந்தனர். எனவே அன்று இரவே புதூர்ச் சந்திப் பகுதிமீது புலிகள் ஒரு முறியடிப்புத் தாக்குதலைத் தொடுத்தனர்.

சந்தியில் வந்து குந்திய கொமாண்டோப் படையினர் தங்களைத் தற்காத்துக்கொள்ளும் தயாரிப்புக்களைச் செய்ய முன்னரே தாக்கப்பட்டனர்.

கேணல் கிட்டு பீரங்கிப் படைப்பிரிவின் துல்லியமான எறிகணைத்தாக்குதல் கொமாண்டோப் படையை இருத்தி எழுப்பியது. ஜெயந்தன் படையணியும் கடற்புலிப்படையணியும் களமிறங்கி தாக்குதலைத் தொடுத்தன. சிக்கலான நிலைமைகளை சமாளிக்கவெனப் பயிற்றப்பட்ட எயர்மொபைல் படையணி, தான் பிடித்த நிலத்தை மட்டுமல்ல தங்களையே பாதுகாக்க முடியவில்லை. விடிய முன்னர் புதூர்ச் சந்தியை புலிகள் மீண்டும் கைப்பற்றினர். இந்த இரவுச் சண்டையில் சுமார் 200 படையினர் பலியாகியிருந்தனர். 500 பேரளவில் காயப்பட்டிருந்தனர். இந்த முறியடிப்புத் தாக்குதலின் விளைவாக எயர்மொபைல் படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் சீவலிவணிகசேகர பதவி நீக்கப்பட்டு இடம் மாற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

வெல்லப்பட முடியாத மறிப்புச் சண்டைக்களமாக புளியங்குளம் தொடர்ந்தும் இருந்தது. புதூர்ச் சந்திக்கு நகர்ந்ததுபோல புரட்டாதி 30ஆம் நாள் கனகராயன்குளச் சந்திப் பக்கமும் ஒரு நகர்விற்கு படைத்தரப்பு முயன்று- தோற்றது

===>

www.tamilarangam.net



# ஜயசுக்குறுய் நடவடிக்கையும்......

இவற்றுடன் புளியங்குளச் சண்டையை படையினர் தவிர்த்துக்கொண்டு – வேறுமுனையில் சண்டையை ஆரம்பிக்கத் திட்டமிட்டனர்.

தாண்டிக்குள வலிந்த தாக்குதலின்போதும் பெரியமடு வலிந்த தாக்குதலின்போதும் ஓமந்தை வலிந்த தாக்குதலின்போதும் ஜயசிக்குறுய் படையினர் கைப்பற்றிய பிரதான பாதைக்கு கிழக்காகவும் மேற்காகவும் இருந்த நிலப்பகுதியை உபயோகித்து புலிகளின் அணிகள் இருமுனைத் தாக்குதலைத் தொடுத்ததாலேயே தாக்குதலை எதிர்கொள்ள முடியாது ஜயசிக்குறுய் படையினர் திக்குமுக்காடினர் என்று படைத்தலைமை ஊகித்தது. இந்த நிலையில் பாதையின் கிழக்குப் பகுதியை புலிகள் பயன்படுத்துவதிலிருந்து தடுப்பதற்காக அந்தப் பகுதி முழுவதையும் இராணுவ கட்டுப்பாட்டு வலயமாக மாற்ற அது முடிவெடுத்தது. நெடுங்கேணிப்பகுதியில் தரித்து நின்ற படையினரை புளியங்குளம் நோக்கி நகரச் செய்து ஒரு நிலப்பூட்டையிட்டு பாதையின் கிழக்குப் பகுதியை இராணுவ வலயமாக்கியது.

நிலம் விழுங்கியபடியே வேறு திசையில் நகரும் நோக்கத்துடன் திறக்கப்பட்ட நெடுங்கேணி களமுனையை, பாதை பிடிப்பதற்கும் பிடித்ததை பாதுகாத்துக்கொள்ளவென்றும் திசை திருப்பவேண்டிய கட்டாயத்தை இந்த வலிந்த தாக்குதல்கள் செய்தன. இதனால், ஜயசிக்குறுய் மூலத்திட்டத்தில் பாரிய மாற்றம் நடந்தது.

நெடுங்கேணியைக் கைப்பற்றிய படைப்பிரிவு அங்கிருந்து நகர்ந்து ஒட்டுசுட்டான் வழியாக முல்லைத்தீவிற்கு அல்லது புதுக்குடியிருப்பிற்கு என்ற ஊகங்கள் அன்றைய நாட்களில் கொழும்பில் எழுப்பப்பட்டன. ஆனால், இந்த நிலம் விழுங்கும் திட்டத்தைக் கொண்ட களமுனை ஈற்றில், பாதைபிடிப்பதற்கான வேறொரு சண்டை முனையைத் திறப்பதற்கே பயன்பட்டது.

கரிப்பட்டமுறிப்பு என்ற புதிய சண்டைமுனையைத் திறக்க பகைவன் ஆயத்தங்கள் செய்தான்.

கரப்புக்குத்தி– விஞ்ஞானகுளத்தை வழங்கல் மையமாகக் கொண்டு புதிய சண்டை முனை ஒன்று திறக்கப்படப் போகின்றதென்பதை புலிகள் முன்னரே ஊகித்தறிந்து கொண்டனர். புதிய சண்டைமுனையை பகைவன் திறந்துவைக்க முன்னர் அவனது வழங்கல் மையத்தை தாக்கி கைப்பற்ற புலிகள் திட்டம் தீட்டினர். திகதியும் குறித்தனர். எனினும் படையினரும் அவசரப்பட்டனர்.

ஐப்பசி 04ஆம் நாள் துணிகரமானதொரு நெடுந்தூர இரவு நகர்வை கரிப்பட்டமுறிப்புச் சந்திவரை படையினர் செய்தனர். சுமார் 09 கி. மீ. தூரத்தை அவர்கள் இருளின் துணையுடன் நடந்து கடந்தனர். களங்களை விரிவாக்கினால் புலிகளின் எதிர்ப்பு சக்தி பரவலாக்கப்படும்.அவ்விதம் நடந்தால், அது புலிகளுக்கு பாதகமாக முடியும் என்று படைத் தலைமை கருதி கள விஸ்தரிப்புக்களைச் செய்தது. முள்ளை முள்ளால் எடுப்பதுபோல விரிவாக்கப்பட்ட களங்களிலெல்லாம், புலிகள் காட்டமான வலிந்த தாக்குதல்களை நடாத்தியும் திறக்கப்பட்ட புதிய சண்டைமுனைகளிலெல்லாம் படையினருக்கு மோசமான விளைவுகளைக் கொடுக்கும் முறியடிப்புத் தாக்குதல்களைத் தொடுத்தும் படையினருக்குப் பதிலடி கொடுத்தனர்.

ஐப்பசி 05ஆம் நாள் கரிப்பட்டமுறிப்பை படையினர் கைப்பற்றிய அன்றிரவே கரப்புக்குத்தி–விஞ்ஞானகுள வழங்கல் மையம் மீது பெரும் எடுப்பிலான ஒரு வலிந்ததாக்குதலை புலிகள் நடத்தினர்.

ஜயசிக்குறுய்ப் படையினர் மீது நடாத்தப்பட்ட வலிந்த தாக்குதல்களில் இது வித்தியாசமானது. பெருந்தொகையிலான வெடிப்பொருட்களையும் இராணுவ உபகரணங்களையும் மரபுவழிச் சண்டைக்குத் தேவையான வாகனங்கள் புல்டோசர்களையும் இங்கிருந்து புலிகள் தாராளமாகக் கைப்பற்றினர்.

வழங்கல் மையத்தின்மீது தாக்குதல் நடைபெறும்போது அதற்கு வெளியில் இருந்து உதவிகள் வரவிடாது தடுப்பதற்காக ஒரு திசை திருப்பல் தாக்குதலை கரிப்பட்ட முறிப்பு படையினர்மீது புலிவீரர்கள் நடாத்தினர். கரிப்பட்டமுறிப்பை புலிகள் தாக்குகின்றனரா! கரப்புக்குத்தி–விஞ்ஞானகுளத்தை தாக்குகின்றனரா! என்பதைக் கண்டறிய படையினரால் முடியவில்லை. கரிப்பட்ட முறிப்பே புலிகளின் இலக்கு என அவர்கள் தவறாகக் கணித்தனர். இதனால் நெடுங்கேணிப்படையினரின் ஆட்டிலறிவீச்சின் குறியிலக்காக கரிப்பட்டமுறிப்புப் பகுதியே இருந்தது. அன்றிரவு முழுவதும் நடந்த எறிகணை வெடிப்பால் கரிப்பட்டமுறிப்புப்பகுதி அதிர்ந்தது. இதனால், உண்மையான குறியிலக்கைத்தாக்கிய புலிவீரர்களின் மீதான எதிர்த்தாக்குதலின் கடுமை குறைந்திருந்தது. கைப்பற்றப்பட்ட இராணுவ உபகரணங்களை சுலபமாகவும் பாதுகாப்பாகவும் அப்புறப்படுத்த அது



உதவியது. இந்தத் தாக்குதலில் ஒரு ராங்க் அழிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

கரிப்பட்டமுறிப்பு மீது நடாத்தப்பட்ட திசை திருப்பல் தாக்குதலும் சிறிது காட்டமாகவே இருந்தது. கைப்பற்றிய அன்றிரவே பதில் தாக்குதல் நடாத்தப்பட்டதால் படையினர் சரியான காப்பு வசதிகளை செய்து முடித்திருக்கவில்லை. இதனால் கரிப்பட்டமுறிப்பு படையினரும் இழப்புக்களைச் சந்தித்தனர். கரிப்பட்டமுறிப்புக்கு நகர்ந்த படைக்கு வழங்கல் பணி செய்யவென காட்டுப்பாதையை படையினர் திருத்தி அமைத்து செப்பனிட்டனர். அதேவேளை கற்கிடங்கு மற்றும் விஞ்ஞானகுளம் பகுதியில் படையினரின் பிரசன்னமும் அதிகரித்தது.

அதாவது மாங்குளத்திற்கு அண்டிய பகுதிக்கு களம் எடுத்துச் செல்லப்பட்டது. படையினரின் கள விஸ்தரிப்பிற்கு பதிலளிப்பதுபோல பொராளிகளை நிறுத்த புலிப்படைக்கு ஆட்தொகை போதாது. எனவே சில இடங்களிலிருந்து தந்திரோபாயப் பின்வாங்கலைச் செய்து தேவையான இடங்களில் சண்டைக்குத் தயாராவதைத் தவிர புலிகளுக்கு வேறு வழிகள் இருக்கவில்லை. இந்தச் சூழ்நிலையிலேயே புளியங்குளத்திலிருந்து பின்வாங்கி கனகராயன் குளச்சந்திப் பகுதியைத் தளமாக்கி சண்டைக்குத் தயாராக தலைவர் பிரபாகரன் தீர்மானித்தார். புளியங்குளத்தை புலிகள் கைவிட்டபின்னரே படையினர் அதைக் கைப்பற்றினர்.

கரப்புக்குத்தி, விஞ்ஞானகுளம் மீதான தாக்குதலின் பின்னர் கழிந்த இரண்டு மாத அமைதி நிலையை அடுத்து மார்கழி 04ஆம் நாள் கனகராயன் குளச் சந்தியைக் கைப்பற்றப் படையினர் ஒரு மும்முனைத் தாக்குதலைத் தொடுத்தனர்.

பிரதான பாதை வழியே கனகராயன்குளச் சந்தியை நோக்கி ஒரு முனையாலும் மன்னகுளத்தை நோக்கி 'கிறீன்பரேட்டிடம் பயிற்சி பெற்ற கொமாண்டோ அணி இன்னொரு முனையாலும், கனகராயன்குளத்திற்கும் மான்னகுளத்திற்கும் இடையில் உள்ள முத்தர்குளம் வழியாக எஸ். எவ். அணி மூன்றாவது முனையைத் திறந்தும் கனகராயன் குளத்தைக் கைப்பற்றும் இலக்குடன் சிங்களப்படை நகர்ந்தது.

ஒவ்வொரு முனையிலும் சண்டை தொடங்கியது. பிரதான பாதை வழியே நகர்ந்த படையினரும் முத்தர்குளம் வழியே நகரமுயன்ற எஸ். எவ். படையணியும் தடுத்து நிறுத்தப்பட்டன.

ஆனால், மன்னகுளம் நோக்கி வந்த கொமாண்டோப் படையினரை எதிர்த்து அங்கே நிலைகொண்டிருந்த மாலதி படையணியும் புலனாய்வுத்துறைப் படையணியும் திருமலை படையணியும் கடுமையான மோதின. புலிகளின் சில அரண்களை உடைத்து உட்புகுந்த கொமாண்டோப் படையினரை குறிவைத்து ஜெயந்தன் படையணியினர் ஒரு முறியடிப்புத் தாக்குதலைத் தொடுத்தனர். சண்டை தீவிரமாக நடந்தது. புலிகள் புதூர்ச் சந்தியில் சாதித்ததை மன்னகுளத்தில் சாத்தியமற்றதாக்க கொமாண்டோப் படையினர் போராடினர். முதலில் பிடித்த நிலத்தை தக்கவைக்க சண்டையிட்டனர். பின்னர் பாதுகாப்பாக தப்பிப்போக சண்டையிட்டனர்.

ஆனால், புலிகள் நடாத்திய பகல் நேர முறியடிப்புத் தாக்குதல் வீரம் செறிந்ததாகவும் தந்திரோபாயங்கள் நிறைந்ததாகவும் இருந்தது. சிங்களத்தின் கொமாண்டோக்கள் திகைத்து பதறினர். இறுதிக் கட்டத்தில் ஜெயந்தன் படையணியும் களம் புகுந்து நிலத்தை மீட்டெடுக்கும் பணியில் இறங்கியது. அமெரிக்க சிறப்புப் படையான 'கிறீன்பரேட்டிடம் சண்டைப் பயிற்சி பெற்ற சிறப்புக் கொமாண்டோக்கள் ஏறக்குறைய அழிந்தே பொயினர். இந்த முறியடிப்புத் தாக்குதலில் 300 கொமாண்டோக்கள் கொல்லப்பட்டனர். அதேயளவு காயமடைந்திருந்தனர். 37 போராளிகள் களப்பலியாகியிருந்தனர்.

புளியங்குளத்திலிருந்து புலிகள் நடாத்திய தந்திரோபாயப் பின்வாங்கலின் விளைவை, மன்னகுளத்தில் படையினர் அனுபவித்தனர். மன்னகுளம் முறியடிப்புத் தாக்குதலின் விளைவுகளை ஜீரணித்து பழைய நிலைக்கு மீண்டுவர ஜயசிக்குறுய்ப் படைக்கு இரண்டு மாதங்களும் ஒரு வாரமும் பிடித்தது. இதேவேளை, புலிகள் மீண்டுமொருமுறை தந்திரோபாயப் பின்வாங்கலுக்கு முடிவெடுத்தனர். கனகராயன் குளத்தைக் கைவிட்டு மாங்குளம் முனையைப் பலப்படுத்தும் முடிவைச் செயற்படுத்தினர். இதன்பின்னர் கனகராயன்குளப் பகுதியை படையினர் சண்டைகளின்றின்றிக் கைப்பற்றினர்.

இப்போது மாங்குளத்தைக் கைப்பற்றுவதற்கான சண்டைகளில் ஈடுபட படைத்தலைமை தயாரிப்புக்களைச் செய்தது. புளியங்குளத்தை ஒரு தளப்பகுதியாக்கியுது போல மறிப்புத் தாக்குதலுக்குரிய பாரிய தளப்பகுதியாக மாங்குளம் மாற்றப்பட்டது. மாங்குளத்திற்கு கிழக்கே இருக்கின்ற ஒலுமடுவும் மேற்கே இருக்கின்ற மூன்று முறிப்புச் சந்தியும் மாங்குள தளத்தின் இரு முனைகளாகின. பிறந்துள்ள புதியவருடம் உயிரிழப்பின்றி கரும்புலிகள் நடாத்திய ஒரு உலங்குவானூர்தி அழிப்புடன் ஆரம்பமானது. தை 2ஆம் நாள் படையினருக்கு ஆச்சரியத்தை ஊட்டிய அந்த கொமாண்டோத் தாக்குதல் நிகழ்ந்தது. மழை பெய்து வினியோகப் பாதை சீரற்று இருந்த அந்த நேரத்தில், போக்குவரத்து உலங்குவானூர்தியான எம். ஐ. 17 வழங்கல் வேலையைச் செய்துகொண்டிருந்தது. கரும்புலிகளின் தாக்குதலில் அந்த வானூர்தி முழுமையாக அழிந்தது.

புதிய ஆண்டில் மாங்குளத்திற்கான சண்டைகள் ஆரம்பமாகின.

மாசி 14ஆம் நாள் மன்னகுளப்பகுதியில் இருந்து மூன்று முறிப்புச் சந்தியை நோக்கி ஒரு இரகசிய நகர்வைச் செய்து தேவையான இடத்தில் புலிகளின் அரணகளைத் தாக்கி அழித்து சந்திப்பகுதியை கைப்பற்ற படையினர் திட்டமிட்டனர். மாங்குளத்திற்கு மேற்கே– மாங்குளம் மல்லாவி பாதையில் 3 கி. மீ. தொலைவில் மூன்று முறிப்புச் சந்தியுள்ளது. இந்தச் சந்திப் பகுதியை கைப்பற்றினால் மாங்குளம் தளத்தின் மேற்குப் புற பாதுகாப்பை கைப்பற்றியதற்கு ஒப்பானதாகும் என்று படையினர் கணித்து படை நகர்த்தினர்.

கேணல் கிட்டு பீரங்கிப் படைப்பிரிவு ஒரு இராணுவ வேட்டைக்கு தயாராகியது. மோட்டார் குழாய் துடைத்து இலக்குகளை சரிபார்த்து தூரம் கணித்து எறிகணைகளையும் எண்ணிவைத்து உத்தரவிற்காக காத்து இருந்தது. முன்னரங்கொன்றில் முட்டுப்பட சண்டை தொடங்கியது. புலிகளின் மோட்டார்கள் இயங்கத் தொடங்கின. படையினரது பீரங்கிப் படையும் பதில் மழை பொழிந்தது. புலிகள் நிலைகளுக்குள்ளே காப்பெடுத்துச் சண்டையிட்டனர். வந்த படையினர் நிலைகளில்லாது தடுமாறினர். அடிவாங்கி பின்னேறினர். சண்டை முடிந்தபொது புலிகள் தரப்பில் 06 போராளிகள் வீரச்சாவடைந்திருந்தனர். பகைவன் தரப்பில் இழப்பு 60 ஆக இருந்தது. 200க்கும் மேல் காயமடைந்திருந்தனர்.

மாங்குளத்தின் மேற்கு முனை விழிப்பாகவும் பலமாகவும் உள்ளதால் அதன் கிழக்குமுனை தாக்க வாய்ப்பாக இருக்குமென்று படைத்தரப்பு கணிப்பிட்டது. பத்துநாள் இடைவெளியில் மாசி 24ஆம் திகதி கிழக்கு முனையான ஒலுமடு மீது – கரிப்பட்டமுறிப்புப் படையினர் பாய்ந்தனர். அரண்காத்த சிறுத்தைகள் ஆக்கிரோசமாகப் பதிலடிகொடுத்தனர். 50ற்கும் மேற்பட்ட படையினரை அழித்தனர். அவர்களது 20 உடல்களை சிறுத்தைகள் கைப்பற்றி செஞ்சிலுவையிடம் கொடுத்தனுப்பினர். புலிகள் தரப்பில் 06 போராளிகள் களப்பலியானார்கள்.

மேற்கும் கிழக்கும் பலமானதாக இருப்பதால் மத்தியபகுதி ஓட்டை ஒடிசலுடன் ஒட்டுப்போடப்பட்டுக் கிடக்கின்றதா? என படையினர் ஐயப்பட்டனர். பங்குனி 14ஆம் திகதி அதனையும் பரீட்சித்தனர். மாங்குளம் பிரதான பாதைப்பக்கம் சண்டை வெடித்தது. புலிகளின் போ-வண் (4:1) படையணி மையப்பகுதியை காவல் செய்தது. அனுபவத்தை ===>

www.tamilarangam.net



## ஜயசிக்குறுய் நடவடிக்கையும்....

மூலதனமாகக் கொண்ட போ-வண், சிங்களப்படையை அருகே வர அனுமதித்தது. அதன் பின் தாக்கியது. போ-வண் விரித்த தந்திரோபாய வலைக்குள் பரீட்சிக்க வந்த பகையணி சிக்கிக்கொண்டது. நன்றாக வாங்கிக் கட்டியது. சகபாடிகளின் உடல்களையும் ஆயுதங்களையும் விட்டுவிட்டு சிங்களப்படை ஓட்டமெடுத்தது. 15 துப்பாக்கிகளையும் பகைவனின் ஐந்து உடல்களையும் போ-வண் படையணி கைப்பற்றியது. ஏறக்குறைய 30 படையினர் இந்தச் சண்டையில் கொல்லப்பட்டனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயப்பட்டனர். புலிகளின் மத்தியபகுதிக் காப்பரண்கள் அலுங்காமல் குலுங்காமல் அப்படியெ நின்றன.

இதேசமயம், மாங்குளம் புலிகளின் தளம்மீது நடாத்தப்படுகின்ற தாக்குதல்களை வழிநடத்திக் கொண்டிருந்த 55ஆம் டிவிசனின் கட்டளைப்பீடம் இதேநாளில் புலிகளது எறிகணைத் தாக்குதலால் கலங்கிவிட்டது. புலிகளின் பீரங்கிப்படையணி ஏவிவிட்ட எறிகணைகள் பகைவனது கட்டளைப் பீடத்தைத்தாக்கி முதல்நிலைக் கட்டளை அதிகாரியான பிரிகேடியர் சரத்பொன்சேகரவையும் இரண்டாம் நிலைக் கட்டளை அதிகாரியான பிரிகேடியர் வோருண் என்பவரையும் உடற் சேதத்திற்குள்ளாக்கி களத்தைவிட்டு அப்புறப்படுதியது. இந்த எறிகணைத் தாக்குதலில் சிங்களப்படைகளின் ஆட்டிலறி கொமாண்டரான கேணல் நிலை அதிகாரி ஒருவரும் கொல்லப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

மாங்குளம் தளத்தின் உறுதி படைத் தலைமையை வாட்டியது. சிங்களத் தளபதிகள் கூடிக்கதைத்து அடுத்து என்ன செய்யலாம் என்று ஆலொசனை கலந்தனர். ஏதொ செய்து எப்படியாவது மாங்குளத்தின் முன்னரங்கை உடைக்க திட்டம் தீட்டினர். நேரடிச் சூடுபொல புலிகளின் பீரங்கிப் படையணி வழங்கும் நேரடியற்ற சூடுகளுக்குத் தற்காத்தபடி எப்படி முன்னேறுவது! உருக்குக் கவசம் உடுத்திய பனைமரம் போல உறுதியாக நிற்கும் புலிகளின் அரண்காவலர்களை எப்படித் தாக்கி வெற்றி கொள்வது! கள வரைபடத்தை விரித்து வைத்து சிங்களத் தளபதிகள் சிந்தித்தனர். புலிகளின் ஒலுமடு அரண்களுக்கு முன்னேயிருந்த நீண்ட வெளியையும் தங்களது கவசப்படையையும் ஒன்றிணைத்து திட்டம் வகுத்தனர். சிங்களத்தின் இராணுவ வரலாற்றில் முதல் தடவையாக அது ஒரு மாபெரும் ராங்க்குத் தாக்குதலுக்கு தயாரானது. தாக்குதல் திட்டத்தின் நேர்த்தி படைத்தளபதிகளை உற்சாகப்படுத்தியது. தாக்குதல் வெற்றி பெறும் என்று அது நம்பியது. அந்த வெற்றியை உடனடியாகப் பயன்படுத்தி மாங்குளம் சந்திவரை ஒரு வேக நகர்வைச் செய்யவும் சிங்களப்படை திட்டமிட்டது. இதற்காக மும்முனைத் தாக்குதல் திட்டத்தை முறைப்படி வரைந்தது. இதில் ஒரு முனையை திசை திருப்பல் தாக்குதலுக்காக ஒதுக்கியது.

ஒலுமடுவை ராங்க் படையணி தாக்கி நிர்மூலமாக்கிக் கைப்பற்றும்போதே பலமான இன்னொரு அணி கனகராயன் ஆறுவழியே நகர்ந்து மாங்குளம் ஒலுமடு வீதியில் உள்ள கனகராயன் ஆற்றுப் பாலத்தைக் கைப்பற்றி அங்கிருந்து மாங்குளம் சந்தியை நோக்கி நகர்வது திட்டம். இந்தத் திட்டத்திற்கு பலம் சேர்ப்பதற்காக மூன்று முறிப்பு முனையில் ஒரு திசை திருப்பல் தாக்குதலைத் தொடுக்கவும் திட்டமிட்டது. ஜயசிக்குறுய் ஒருவருடம் பூர்த்தியாகும் வேளையில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வெற்றியை இந்த மும்முனைத்தாக்குதல் பெற்றுத் தரும் என்று படைத்தலைமை நம்பியது.

சித்திரை 20ஆம் நாள் அதிகாலை சண்டைமுனையை எதிரியின் பீரங்கிப்படைகள் திறந்துவைத்தன. ஒலுமடு காவல் அரண்களுக்கு முன்னால் உள்ள வெளிப்பகுதியில் பகைவனின் ராங்க்குள் அணிவகுத்து நின்றன. சுமார் 20 கவசங்கள் அந்த கவசப்போர் அணியில் இடம்பெற்றிருந்தன. ரி 55 ரக தாக்குதல் ராங்க்குகளும் மற்றும் துருப்புக்காவிகளும் இதில் இருந்தன. புலிகளின் முன்னரங்கத்தை குண்டுகளால் துவம்சம் செய்து தள்ளிவிட்டு உருக்குலைந்த புலி அரணுக்குள் துருப்புக்காவிகள் மூலம் படையினரைக் கொண்டு சென்று இறக்கி அரண்களைக் கைப்பற்றுவது திட்டம். ஒரு துருப்புக்காவி 10 படைவீரர்களை ஒரு தடவையில் பொத்தி மூடிக் காவிச்செல்லும்.

துருப்புக்காவிகளில் சென்று இறங்கும் குறைந்த தொகையுடைய சிறப்பு அணியினர் சிதைந்த அரண்களை ஒரு சில நிமிட நேரங்களுக்கு பிடித்து வைத்திருக்க எதிரித்தளத்தில் தயாராக நிற்கும் காலாட்படையினர் விரைந்து வந்து `நிலம் பிடித்து ஒலுமடு தளத்தைக் கைப்பற்ற வேண்டும்.

அந்த வெட்டவெளிப்பகுதியல் ஒரு குறிப்பிட்டளவு தூரம் முன்னேறி வருவதும் பின்னர் நிலையெடுத்து ராங்க்குகளை வரிசைப்படுத்தி முன்னரங்கைத் தாக்குவதும் பின்னர் மேலும் முன்னேறி ஒரு குறித்தளவு தூரம் வந்து மீண்டும் நிலையெடுத்து வரிசைப்படுத்தி முன்னரங்கத்தைத் தாக்குவதுமாக ராங்க்குப் படையணியின் தாக்குதல் தந்திரோபாயம் இருந்தது.

பகைவனின் கவசப் போர் அணியை புலிகளும் தூரவைத்தே தாக்கத் தொடங்கினர். தாக்குதலைச் சமாளித்தபடி ராங்க்குகள் முன்னேறின. சண்டை இப்போது முன்னரங்கத்தின் துப்பாக்கி வீச்செல்லைத் தூரத்திற்குள் வந்துவிட்டது. முன்னரங்கை சோதியா படையணியும் சாள்ஸ் அன்ரனி படையணியும் சிறுத்தைப் படையணியும் காவல் காத்தன. இவற்றுடன் விக்டர் கவச எதிர்ப்புப் பிரிவும் கேணல் கிட்டு பீரங்கிப் படைப்பிரிவும் இணைந்து ராங்க்குப் படையணியின் நகர்வு மீது பதில் தாக்குதலை மேற்கொண்டன. ராங்க்குத் தாக்குதல் எறிகணை வீச்சுக்கள் உலங்கு வானூர்தித் தாக்குதல்கள் என்பவற்றால் முன்னரங்கம் புழுதி மண்டலமானது. கைக்கெட்டிய தூரத்தையே கண்களால் பார்க்க முடியாத அளவிற்கு தூசி மழை சமர் அரங்கை விழுங்கியது. தூசித்திரையை வாய்ப்பாகக் கொண்டு ராங்க்குப் படை ஒரு வேக நகர்வை, அரண்களை நோக்கி எடுத்தது. சில ராங்க்குகள் முன்னரங்கைத் தொட்டும் விட்டன. ராங்க்குத் தாக்குதல்களில் அரண்கள் சிதைந்தன. மரங்கள் தலைவிரிகோலமாகின. ஆயினும் அரண்களுக்குள் இருந்த புலிவீரர்கள் நிலைகளை விட்டு அகலவில்லை. உறுதி குலையாது எதிரியைத் தாக்கினர். முன்னரங்க வாசலிலே வைத்து ஒரு துருப்புக்காவியையும் ஒரு ராங்க்கையும் புலிகள் அழித்தனர். இன்னொரு ரி 55 ரக ராங்க் சற்றுத் தூரத்திலேயே அழிக்கப்பட்டது. மேலும் சில கவசங்கள் குண்டடிவாங்கிக் காயப்பட்டன. முயற்சியைத் தொடர படையினர்க்கு முடியாமல் போய்விட்டது. தாக்குதல்கள் முறியடிக்கப்பட்ட நிலையில் புறப்பட்ட நிலைக்கே ராங்க்குப் படையணி திரும்பிச் சென்றது. சிங்கள இராணுவத்தின் வரலாற்றில் முதற்தடவையாக நடாத்தப்பட்ட ராங்க் வியூகத் தாக்குதல், அதற்குத் தோல்வியில் முடிந்தது.

இதேவேளை, கனகராயன் ஆற்றுக்கரையால் நகர்ந்து பாலத்தைப் பிடித்து மாங்குளத்தின் கிழக்குவாசலை எட்டி மிதிக்க ஆசை கொண்ட படையணியினரை ஜெயந்தன் படையணி வழிமறித்துத் தாக்கியது. பழமை மிகுந்த அந்த பிரிட்டிஜ் கால உருக்குப் பாலத்திற்கு வரமுன்னரே பகைவனின் நகர்வு நிறுத்தப்பட்டு திருப்பியனுப்பப்பட்டது. ஒலுமடு, கனகராயன் ஆற்றுப் பாலம் ஆகியவற்றை கைப்பற்றும் நோக்கம் கொண்ட இரண்டு தாக்குதல்களும் தோல்வியில் முடிந்தன. மூன்றுமுறிப்புச் சந்தி முனை மீது மேற்கொள்ளப்பட்ட திசை திருப்பல் தாக்குதலை அன்பரசி படையணி சுலபமாக எதிர்கொண்டு விரட்டியடித்தது.

மாங்குளத்திற்காக நடந்த இந்த நர்ன்கு சண்டைகளுடன் ஜயசிக்குறுய் ஒருவருட பூர்த்தியை அடைந்தது. ஒருவருட பூர்த்தி நாளான மே 13, 1998 ஜயசிக்குறுய் களமுனை அமைதியாகவே கிடந்தது. ஆனால், வன்னி வாழ் மக்கள் வீதிகளில் குழுமி நின்று வெற்றிகரமாக நடந்த ஒருவருடச்சமரை எழுச்சியுடன் கொண்டாடிக் கொண்டிருந்தனர். ஜயசிக்குறுய் இரண்டாவது வருடத்துள் நுழைந்துள்ளது. ★

## ஜயசிக்குறுய் படையினருக்கு இந்த மண்ணின் மைந்தரிடமிருந்து ஒரு மடல் .....



இந்த வெசாக்கல்ல, எந்த வெசாக்கிலும் உங்கள் எண்ணம் ஈடேறுவது அவ்வளவு சுலபமானதல்ல என்பதை வன்னிக்களம் இதுவரையில் உங்களுக்கு நன்கு உணர்த்தியிருக்கும் என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை.

30,000 படைகள், வானூர்திகள், ஆட்லறிகள், கவசங்கள், கனரகங்கள்... ஆனாலும் மூன்றே மாதத்தில் முடிந்துவிடும் என்று கூறி முடுக்கிவிடப்பட்ட ஜயசிக்குறுய், 365 நாட்களைக் கடந்த நிலையிலும் முடங்கிப் போய்க்கிடக்கின்றது. ஆனால் விரைவாக உயர்ந்து கொண்டு போவதோ உங்களில் உயிரிழந்தோர், ஊனமானோர், காணாமல் போனோர் பட்டியல்தான்.

நீங்கள் கொல்லப்படுவது பற்றியோ, ஊனமாக்கப்படுவது பற்றியோ, காணாமல் போவது பற்றியோ உங்கள் இராணுவ, அரசியல் தலைமைகள் இதுவரை கவலைப்பட்டதுமில்லை. இனியும் கவலைப்படப் போவதுமில்லை. அவர்களின் தேவையெல்லாம் பதக்கங்களும் பதவிகளுமே.

மூன்றே மாதம் எனக்கூறி, பின் வெசாக் என மாற்றி, புத்தாண்டு என இடித்துரைத்து, இறுதியில் இப்பொழுது எப்போதாவது என்று கூறுகிறார் ரத்வத்த. சென்ற புத்தாண்டில், வெசாக்கில் உங்கள் அருகில் நின்ற எத்தனை தோழர்கள் இன்று உயிருடன் இல்லை. அடுத்த வெசாக்கிற்கு நீங்கள் இருப்பீர்களா? இங்கு தொடர்ந்திருந்தால் நிச்சயம் இருக்கமாட்டீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். சிறீலங்காப் பாராளுமன்றத்தில் சொகுசு நாற்காலிகளில் அமர்ந்துகொண்டு, கூக்குரலிட்டுக் கொண்டிருக்கும் அரசியல்வாதிகளின் பிள்ளைகள் யாராவது உங்கள் பக்கத்துக் காப்பரணில் நிற்கிறார்களா? ஒருவர்கூட இல்லை. கடல் கடந்த நாடுகளில் அவர்கள் கல்வி கற்றுக்கொண்டிருப்பார்கள். இங்கு உங்கள் நிலையை சற்று எண்ணிப்பாருங்கள். ஒழுங்கான உணவின்றி, நீரின்றி, தலையில் குண்டேந்தி எறிகணையால் உடல்சிதறி கண்ணிகளால் கால் இழந்து போய்நிற்கிறீர்கள்.

துப்பாக்கி வேட்டொலியே கேட்காத தொலைவில் குளிரூட்டப்பட்ட வாகனங்களில் இருந்துகொண்டு, கட்டளையிடும் உங்கள் அதிகாரிகளின் பெயர்கள், பதவி உயர்வுக்காகவும் பதக்கங்களுக்காகவும் சிபார்சு செய்யப்பட, உங்கள் பெயர்களோ காணாமல் போனோர் பட்டியலில் பதியப்பட்டுக்கொண்டு போகிறது.

எத்தனை முறை உங்கள் இராணுவத் தலைமைகளையும் தந்திரோபாயங்களையும் மாற்றிப் பார்த்தாகிவிட்டது. ஆனாலும் உங்கள் மரணங்களே மலிவாகக் கிடைக்கின்றன. அசோக ஜெயவர்த்தனா அட்டகாசமாகத்தான் வந்தார். அழிந்துபோகிறது இராணுவம் என்றார்கள். அவர் அனுப்பப்பட்டார். சிறிலால் வீரசூரிய வந்தார். சிறந்த தளபதி என்றார்கள். சிதைந்துபோனது மன்னகுள மண்ணில் உங்கள் சிறப்புப் படைகள்.

நீங்கள் எதற்காக படைகளில் சேர்ந்தீர்கள் என்பதைச் சற்று எண்ணிப் பாருங்கள். உங்கள் ஏழைக் குடும்பங்களை வாழவைக்க, உங்கள் நோயாளித் தாயைக் காப்பாற்ற, உங்கள் சகோதரிகளை மணம் முடித்து வைக்க, இவை உங்கள் கடிதங்கள் கூறும் கண்ணீர்க் கதைகள்தான். ஆனால், இங்கு நடப்பது என்ன? உங்களை நேசிப்பவர்கள் உங்களைக் காணாமல் உருகிக் கொண்டிருக்க எங்கோ ஒரு மூலையில் உங்கள் சிதைந்த உடல்கள் உருக்குலைந்து கொண்டிருக்கும்.

உயிரிழந்தோர், ஊனமுற்றோர், காயமடைந்தோர், கடமைக்குத் திரும்பாதோர் என உங்கள் படையணிகள் சுருங்கிக் கொண்டுவர, இங்கு என்றுமே இல்லாதவாறு மீழ இணைவோர், புதிதாய்ச் சேர்வோர் என்பனவற்றால், எமது படையணிகள் பலம் பெறுகின்றன. அள்ளி எடுத்தவை, அழித்தொழித்தவை மூலம் உங்கள் ஆயுத பலம் கேள்விக் குறியாக நிற்க, அள்ளப்பட்ட ஆயுதங்கள் இறக்கப்பட்ட போர்க்கலங்கள் என எமது ஆயுதபலம் ஒரு உன்னத நிலையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. கடல்கடந்து எம்மை நோக்கி நீளும் நேசக்கரங்களும், எல்லாவற்றிற்கும் மேலாக எமது மக்களின் இணையில்லாப் பேராதரவும் எம்முள் ஒரு புதிய சக்தியை ஊட்டி நிற்கின்றன.

தாண்டிக்குளம் தகர்க்கப்பட்டபோதும், கரப்புக்குத்தி விஞ்ஞான குளம் அள்ளப்பட்டபோதும், மன்னகுளத்தில் நீங்கள் மண்ணோடு மண்ணாக்கப்பட்ட போதும், மூன்றுமுறிப்பில், மாங்குளத்தில் என நீங்கள் மாறி மாறி வாங்கிக் கட்டிக் கொண்டபோதும் ஒலுமடுவில் நீங்கள் ஓட ஓட விரட்டப்பட்ட போதும், இறுதியாய் மும்முனைச் சமரில் உங்கள் ராங்குப் படைகள் தவிடுபொடியாக்கப்பட்ட போதும், ஆகாய விமானங்களுக்கோ ஆட்லறிகளுக்கோ உங்கள் அவலக் குரல் கேட்கவில்லை. அனுரத்தவோ, தஞுவத்தவோ உதவிக்கு ஓடிவரவில்லையே. இன்னும் எதை நம்பி நிற்கிறீர்கள்?

நீங்கள் யாருக்காகப் போராடுகிறீர்கள்? உங்கள் பெற்றோர்களுக்காகவா அல்லது பிள்ளைகளுக்காகவா? மனைவிக்காகவா? காதலிக்காகவா? நீங்கள் அனுப்பும் ஒரு சில ஆயிரம் ரூபாக்களைவிட அவர்கள் உங்களையே அதிகம் நேசிப்பார்கள். நியாயமற்ற ஒரு யுத்தத்தில் அநியாயமாக பலியாவதைவிட, உங்கள் இனிய உறவுகளுடன் மகிழ்ச்சியாக வாழ முடிவு செய்யுங்கள்.

நாம் காலியிலோ அல்லது மாத்தறையிலோ அல்லது குருநாகலிலோ இருக்கும் உங்கள் வீட்டு முற்றத்திற்காகப் போராடவில்லை. எமது மூதாதையர் மண்ணில் இனவாத ஆக்கிரமிப்பை எதிர்த்தே போராடுகிறோம். இந்த மண் எமது சொந்த மண். எமது பெற்றோர், அவர்களின் பெற்றோர் என வழி வழியாய் பிறந்து தவழ்ந்து வளர்ந்து வாழ்ந்த மண். இன்று நாமும் எமது பிள்ளைகளும் வாழப்போகும் மண். இறுதியாக உங்களுக்கு ஒன்றைச் சொல்லி வைக்க விரும்புகிறோம்.

இது எமது வாழ்விற்கான போராட்டம். இது எமது வரலாற்றுக் கடமை. இங்கு நாம் சந்திக்கும் சாவு ஒரு சரித்திரம். இந்த மண் எமது உணர்வுடன், உயிருடன் ஒன்றிப் போனது. இந்த மண்ணின் ஒவ்வொரு அங்குல நிலத்திற்காகவும் மிக மூர்க்கமாகப் போராடுவோம். எந்த ஆக்கிரமிப்பாளர்களையும் எம்மண்ணில் நிலைத்திருக்க விடமாட்டோம். அனைவரையும் கொன்றொழிப்போம்.

**'வெற்றி நிச்சயம் உங்களுக்கல்ல எங்களுக்கு'**

www.tamilarangam.net



# சிறுகதை

'அக்கா'

திடுக்கிட்டு விழித்தான். சின்னவளின் குரல் நெஞ்சு வலித்து பரிதவித்தது. எல்லாம் வெறும் பிரமை என்று தெரிந்ததும் வெறுமை சூழ்ந்தது.

எட்டிப் பார்த்தான். இரண்டும் சுவாலை விட்டெரிந்தது. அந்தத் தீயுக்குள் தானும் எரிந்து கலந்துவிட வேண்டும்போல் உணர்வு எழுந்து நெஞ்சை வருத்தியது.

கடவுளே என்ன மனித வாழ்க்கை இது. இந்தக் காட்டுக்குள்ள கண்ணுக்கு முன்னுக்கு உசிராயிருந்த ரெண்டு பிள்ளையளும் கருகிறதைப் பாத்தபடி ஒரு மனுசன் எப்படி வாழுறது, முடியாது என தலை அசைந்தது. முகம் வெறுப்பில் பற்றி எரிந்தது! திரும்பவும் கண்களை மூடிக்கொண்டான். இருட்டும் நிசப்தமும் அவனைச் சுற்றி சூழ்ந்து அழுத்தியது.

இன்றைக்கு காலையில்கூட உணவு ஊட்டிவிட்டதை நினைக்க கை நடுங்கியது. சின்னவளின் கதைகளை கண்ணசைவுகளை அவன் பழகி எல்லாவற்றையும் போல் இடையில் நின்றுபோன ரத்தின் அபிநயங்களைப் பார்த்து பிரவசித்தபடி ஒவ்வொரு வாயாக ...... இதுக்காகத்தான் முன்பொரு தடவை வீடடில சண்டையே நடந்தது. அவள் அழுதது, அவளோடு வீடே துடித்தது எல்லாமே.

'விஜிதா, டாான்சில காட்டுற இன்ரெஸ்டில கொஞ்சமாவது படிப்பிலயும் காட்ட வேணும். இல்லாட்டி பிறகு கவலைப்பட வேண்டி வரும்' வகுப்பாசிரியைதான் சொன்னாள். கேட்ட நேரம் தொடக்கம் அவனுக்கு உடல் பதறத் தொடங்கியது.

'செல்லம் அளவுக்கு அதிகமாயிட்டுது. முதலில் அதைக் குறைக்க வேணும்' என தனக்குள் சொல்லிக் கொண்டான். வீட்டுக்கு வந்து சின்னவளைக் கண்டதும் எரிந்து விழுந்தான்.

'ஆட்டத்தை விட்டுட்டு ஒழுங்கா படி. இனி ஆட்டம் பாட்டமெண்டு திரிமிறதை கண்டா....'

தந்தையின் புதிய கோலம் கண்டு அவள் முகம் வாடிப் போனது. கண்கள் கலங்கி விம்மினாள். அவன் மனம் சோர்ந்து போனது. இரவு சின்னவளுக்கு மேல் அனலாய் காய்ந்தது. இடைக்கிடை திடுக்கிட்டு விம்மினாள். பின் தூங்கினாள்.

தாய் ஒரு மூலையில் விழித்திருந்தழுதாள். அவனும் இடிந்து போயிருந்தான். அக்கா மட்டும் தலைமாட்டில் இருந்தாள். அடிக்கடி தொட்டுப் பார்த்தாள். பின்பு விம்மி அழுதாள். விடியும்வரை ஒருவருக்கும் தூக்கமில்லை.

வீடு சோகமாய் இருப்பது சின்னவளுக்குப் பிடிப்பதில்லை. அன்றும் பிடிக்கவில்லை. அப்பாவிடம் வந்து சாய்ந்திருந்தாள். உணவு ஊட்டச் சொல்லி கெஞ்சினாள். வீடு முழுவதும் ஆட்டமும் பாட்டமுமாகத் திரிந்தாள். தன் அக்காவை அடிக்கடி சீண்டினாள்.

சின்னவளுக்கு அக்கா என்றால் உயிர். இரண்டும் ஒன்றில் ஒன்று சீவனை விடும். தாய்கூட சில நேரங்களில் சினப்பாள். 'என்னடி, நீங்கள் ரெண்டு பேரும் சகோதரியளோ, மச்சாள்மாரோ' தாயின் குரல் கேட்டு வழமைபொல பெரியவள் மட்டும் சாதுவாக சிரிப்பாள். அவளுக்கும்தான் என்ன வயது. இந்த வருடம்தான் பதினைந்து முடிந்து பதினாறு தொடங்குகிறது. அவளுக்கு இரண்டு வயது சிறியவள் சின்னவள்.

இரண்டு பெரும் தங்கள் தங்கள் சைக்கிள்களில் முற்றத்தில் வட்டமிட்டு 'அம்மா போட்டுவாறம்' என்றபடி வெண்சிட்டுக்களாய் பள்ளிக்கு சிறகசைக்கையில் தாயின் உள்ளம் குளிரும்.

மறையும் வரை வீதியில் நின்று பார்ப்பாள். ஆற்றையும் கண்படப் போகுது என மனம் பயப்படும். சாமிபடத்துக்கு முன்போய் கை குவித்து விபூதியை அள்ளி நெற்றியில் அப்புவாள். இந்த இழப்பை என்னன்று அவள் தாங்கி வாழப்போகிறாள். அவளுடைய உலக வாழ்க்கை எல்லாமாய் இருந்த இரண்டையும் ஒன்றாகக் கொடுத்து விட்டு....

மனைவியைத் திரும்பிப் பார்த்தான். அவள் தூக்கத்திலும் அனுங்கிக் கொண்டிருந்தாள். நெற்றியில் தொட்டுப் பார்க்க வேண்டும் போலிருந்தது. அது அவளுக்கு ஆறுதலாகக் கூட இருக்கும். ஆனால் பயமாக இருந்தது. விழித்தால் அழுவாள். என்ன செய்வது இனி விழித்திருக்கும் போதெல்லாம் அழத்தான் போகிறாள்.

வெறும் தரைதான் படுக்கை. பகல் வெய்யிலை வாங்கிக் கொதித்துப் போயிருந்த நிலம் சூடாறத் தொடங்கிய பின்னிரவு. காற்றுக் குளிர்ந்தது. தேகம் நடுங்கிக் குடங்கியது.

'சே ஒரு போர்வைகூட இல்லை. ஏன் மாத்தியுடுக்க உடுப்புக் கூட இல்லை. அந்த நேரத்தில இதையெல்லாத்தையும் ஆரால நினைக்க முடியும். கடவுளே! ஊரில எவ்வளவு நிம்மதியாக வாழ்ந்த நாங்கள்' அவன் நினைவுகளில் மூழ்கிப் போனான்.

கண்களை மூடித் திறப்பதற்கிடையில் லட்சக்கணக்கான சனம் தம் வாழிடத்தை விட்டு எப்படிப் பிரிந்தார்கள். வாழ்வின் இருப்பை அதன் அர்த்தத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் ஆவேசம் ஓட்டம் அவனைப் பொறுத்தவரை வாழ்வு அற்புதமானது அதை இழந்துவிட அவன் ஒருபோதும் விரும்பான்.

மீசாலையில் தெரிந்தொருவரின் வளவில் சிறு கொட்டில். நாலு பேருமாக ஓரளவு வீட்டுப் பொருட்களை கொண்டு வந்திருந்தனர். பிறகும் இரண்டு தரம் அவன் தனியாகப் பொய் வந்ததில் கொட்டிலின் முக்கால பகுதி நிறைந்திருந்தது.

ஊரோடு ஒத்த கஸ்டமும் துன்பமும் அவதியும் அந்தரமும் அவர்களுக்கும் பொதுவானதுதான். ஆனால் அதுவும் ஒரு அனுபவமாதலால் அவனுக்குள் ஒரு திருப்தியும் இருந்தது. 'என்ர பிள்ளையள் இனி எந்தத் துன்பம் வந்தாலும் தாங்கிக் கொள்ளுங்கள்' என்ற எண்ணம் நெஞ்சத்தில் நிறைந்திருந்தது.

அந்த வாழ்க்கையிலும் திடீரென ஒரு நாள் இடி விழுந்தது.

'ஊருக்கை பூந்திட்டாங்களாம்.... ஓடுங்கோ ஓடுங்கோ' இதே குரல் பலபக்கங்களிலும்.

கையில் கிடைத்தவற்றை எடுத்தபடி மனைவி பிள்ளைகளை இழுத்துக் கொண்டு கடற்கரைக்கு வந்து சேர்ந்தபோது மதியமாகியிருந்தது.

அனல் பறக்கும் வெயில். முண்டியடித்துக் கொண்டு மனித வெள்ளம். அவலம், ஒரு மனிதன் தன் வாழ்நாளில் சந்திக்கக் கூடாத அவலம்.

அவனைப் போல் ஆயிரம் ஆயிரம் பேர் துரத்திவரும் பேய்களின் கைகளில் சிக்காமல் தப்பிவிட வேண்டுமென ஓடிவந்த அவர்களைத் தடுத்தது கடல்.

பசி, தொண்டை காய்ந்துபோன தாகம், நெஞ்சத்தை அதிர வைக்கும் எறிகணைகளின் வெடிப்பதிர்வு. பேரொலிகளுடன் வானத்தைக் கிழித்து குண்டுகளை வீசும் விமானங்கள். எங்கும் ஓலம், இரத்தம், கண்ணீர்.

கடவுளே! ஒரேதரம். . . ஒரே ஒரு தரம் மட்டும் இந்தக் கடல் பிரிந்து வழி விடாதா என்ற ஏக்கம் தப்பிப் போய்விட வேண்டும் என்ற தவிப்பு. முடியாதோ என்ற நினைப்பில் எழுந்த அந்தரம்.

மணலில் பரவியிருந்த இரத்தத்தில் புதைந்து சிதறிய உடல்களை கடந்து மனைவி, பிள்ளைகளையும் இழுத்துவந்து படகில் ஏறிய பின்பு அவன் அழத் தொடங்கினான். பெரிதாக கேவிக் கேவி இரக்கப்படும்படி அழுதான்.

மனிதர்களின் சுமையுடன் அவர்களின் மனங்களின் சுமைகளையும் சுமந்தபடி படகுகள் தள்ளாடித் தள்ளாடி நகர்ந்தன. அந்தச் சிறு கடல் இந்த மக்களின் வாழ்வில்தான் எத்தனை அவலங்களை விளைவித்துவிட்டது.

திரவையாற்றுத் தொங்கலில் ஒரு சிறு கொட்டில். இரு பைகளில் கொண்டு வந்த உடுப்புக்கள் மட்டும்தான் சொத்து. அன்றாடத் தேவைகளுக்காக கழுத்து, கைகளில் இருந்தவை ஒவ்வொன்றாகக் கழன்றன.

உயர்ந்து வளர்ந்த கறுத்துப் பெருத்த அரக்கன் ஒருவன் அகன்ற மீசை.




மீசையை துருத்திக் கொண்டு நீண்டு வளர்ந்த கோரப் பற்கள். அந்த உருவம் அவனை நெருங்கி ஆக்கிரமிக்கும்.

அவன் கெஞ்சுவான் தன்னை விட்டுவிடும்படி, மன்றாடுவான். ஆனாலும் அது அவனை விழுத்தி செஞ்சில் கால்களை வைத்து செத்துப் போகக் கூடியவாறு அழுத்தும். அந்த நேரமெல்லாம் சின்னவள்தான் ஓடி வந்து எட்டி உதைப்பாள். அரக்கனை வீழ்த்தி தோள் கொடுத்துத் தூக்குவாள். துன்பங்களையும் துயரங்களையும் அலட்சியமாக காலால் எட்டி உதைக்கும் துணிவை அவளுக்குத் தந்தது யார்? அவனுக்குப் பதில் பிடிபடுவதில்லை.

கடவுளே, இப்படி நடக்கும் என்று தெரிந்திருந்தால் அங்கிருந்து அவன் விலகியே இருக்கமாட்டான். எறிகணைகள் விழுந்து வெடித்து காதைச் செவிடுபடுத்திக் கொண்டிருந்தபோதும் எழும்புவதாக அவன் எண்ணவில்லை. பக்கத்து காணிக்காரன்தான் குழப்பினான்.

'அண்ணை அக்கம்பக்கத்துச் சனமெல்லாம் ஓடிட்டுது. நீ தனிய நின்று என்ன செய்யப்போறாய்? உதுகளைப் பலி கொடுக்கப் போறியோ. செத்தாலும் புதைக்கிறதுக்கும் ஆளில்ல'

அதற்குப் பிறகு அங்கிருக்க மனமில்லை. முறிகண்டியில் மரநிழல் ஒன்றின் கீழ் வாழ்க்கையின் தொடர்ச்சி. அது பரவாயில்லை. சனம் முழுக்கக் காடுகளில் பற்றைக் கூடல்களைக் குடைந்து குடியிருந்தனர். குளிப்பில்லை. முகம் கழுவக்கூட தண்ணீரில்லை. இந்தச் சனத்திற்கு மட்டும் வாழ்வின் பக்கங்களில் துயரம் மட்டும்தான் என்பது எழுத்தாகப் போய்விட்டது.

இப்போதும் அந்த அரக்கன் முன்பைவிட இன்னும் மூர்க்கமாக வருவான். இப்போதெல்லாம் அவன் கூட ஓரளவு துணிவோடு இருந்தான். இல்லாவிட்டாலும் என்ன, பிள்ளைகளும் இருக்கிறார்கள். அடித்து விரட்டிவிடலாம். என்ன சொன்னாலும் சின்னவள் வீரிதான்.

சின்னவள் இருக்கும் வரைக்கும் என்னை எந்த அரக்கனாலையும் ஒன்றும் செய்ய முடியாது என்ற திமிருடன் அவன் நெஞ்சு நிமிர்ந்தான்.

கடவுளே! இந்த வாழ்க்கையில் ஏன் மண்ணை அள்ளிப் போட்டாய்? குருவிக் கூட்டை குரங்கு பிச்செறிகிற மாதிரி.

அந்த நினைவுதான் மீண்டும் மீண்டும் நெஞ்சில் மோதியது. வருத்தி வருத்தி துடிக்க வைத்தது.

'அப்பா இஞ்சதான் சுத்துறான் ஓடியாங்கோ'

'அம்மா கிணற்றடியில் பிள்ளை. ஓடிப் போய்க் கூட்டியாறன். நேற்றும் கிணற்றடிக்குத் தான் அடித்தவன். அவள் ஓடினாள்.

'குத்திப் போட்டான் படுங்கோ படுங்கோ'

இதயத்தை அதிர வைத்த வெடியோசை. குப்பென எழுந்து படர்ந்த புகை மண்டலம். அந்த மரம்தான் – கத்திக் கதறிக் கொண்டு ஓடிப்போய்ப் பார்த்தான். முறிந்த மரங்கள். இலைகள் சிதறல்களுக்கு நடுவே அவனது குஞ்சுகள் இரண்டும் ...

எரிந்துகொண்டிருந்த விறகு படபடத்தது. தீப்பற்றி எரிந்தது. சுவாலை பெரிதாக எழுந்து வான் தொட எட்டி ஆடியது. சின்னவள் ஆடுகிற மாதிரி.

மனம் கொதித்தது. கண்களை மூட முயன்று தோற்றான். அயர்ந்த போது அந்த அரக்கன் வந்தான். வான் முட்ட எழுந்து விஸ்வரூபம் எடுத்து அகன்ற கைகள் அவன் கழுத்தைப் பிடித்து நெரித்துத் தள்ளியது. திகைத்து விழுந்தவன் நெஞ்சில் கால்களை வைத்து அவ் அரக்கன் அழுத்தினான். எதிர்க்க அவனுக்கு வலுவில்லை. கைகள் சோர்ந்து விழுந்தன.

மூச்சுத் திணறியது. தொண்டை வரை வந்த குரல் வெளிவரவில்லை. இந்தப் பிறவியின் முடிவு இதுதான் என்றபோது அலட்சியமானதொரு வெறுப்புணர்வு எழுந்து நெஞ்சை அடைத்தது. சரி இறுதியாக அரக்கன் வென்று விட்டான்.

'ஐயா எழும்புங்கோ, இந்தாங்கோ சாப்பாடு. சாப்பிடுங்கோ'

திடுக்கிட்டு விழித்து நிமிர்ந்து பார்த்தான்.

சின்னவள். இல்லையில்லை. சின்னவள்கள். களைத்த முகங்கள். கலைந்த கேசம். சீருடைக்குள் அவர்கள் கைகளில் துப்பாக்கிகள்.

அரக்கன் இந்த முறையும் வெல்லவில்லை.

அந்த அரக்கன் சிறுத்து ஒரு புழுவைப் போல மாறி, அவன் கால் பெருவிரலுக்குள் நெரிபட்டுக் கிடந்தான்.

www.tamilarangam.net



## (ஒப்பரேசன் தீர்வுத்திட்டம்)

கெடுவை அவர் யுத்தத்துடன் இணைத்தே வைத்துள்ளார். ஆதலால், யுத்தத்தின் வெற்றி தோல்வி இதில் நேரடியாகத் தாக்கம் புரியக் கூடியதாகவுள்ளது.

*50%* விகிதாசாரப் பிரதிநித்துவத்தையும் *50%* தொகுதிவாரிப் பிரதிநித்துவத்தையும் கொண்டுவர அரசியல் யாப்பு மாற்றத்தை உண்மையில் சந்திரிகா விரும்புகின்றார். இது சுதந்திரக் கட்சியினர் மத்தியில் பெரிதும் வரவேற்பைப் பெற்ற ஒன்றாகும். இதனை நிறைவேற்றாவிட்டால் சுதந்திரக் கட்சியினர் தமது தலைவி சந்திரிகாமீது அதிருப்தி அடையலாம். இதில் ஜனாதிபதிமுறை ஒழிப்பு போன்ற யாப்பு மாற்றங்களைச் செய்யாமல் பிரதிநிதித்துவ முறையில் மட்டும் மாற்றங்களைச் செய்வது மிகவும் கடினம். அத்துடன் இதுவும் தீர்வுத்திட்டத்துடன் இணைக்கப் பட்டுள்ளது. எனவே, தீர்வுத்திட்டம், ஜனாதிபதி முறை ஒழிப்பு மற்றும் யாப்பு மாற்றங்கள் என்பன ஒன்றுடன் ஒன்று பின்னப்பட்டு இடறுபடுவதால் இவை அரசாங்கத்தை மொத்தத்தில் நெருக்கடிக்குள் ளாக்குகின்றன.

ஆதலால், யுத்தத்தில் வெற்றிபெற்றால் யாப்புச் சீர்திருத்தம் பற்றிய எல்லா விவகாரங்களையும் தனக்குச் சாதகமாகக் கையாளவோ அல்லது பிரச்சனைக் குரிய விடயங்களை ஓரங்கட்டி வைக்கவோ சந்திரிகாவால் பெருமளவு முடியும். டிசம்பருக்குள் என்று இல்லாவிட்டாலும் மேலும் ஒருசில மாதங்கள் நீடித்தேனும் அரசாங்கம் யுத்தத்தில் வெற்றிபெற முடியாமல் போனால் அரசாங்கம் எல்லா வழிகளிலும் பெரும் நெருக்கடிக்குள்ளாகும். அதேவேளை யுத்தத்தில் அரசாங்கம் துலாம்பரமாகத் தோல்வியடைந்தால் இதுவரைகாலமும் ஆட்சிக்கு வந்த எந்தவொரு அரசாங்கத்தையும்விட மிகப்பெரிய நெருக்கடிக்கு அது உள்ளாகும். எனவே தற்போதைய நிலையில் இது யுத்தத்தின் வெற்றி தோல்வியிலேயே முற்றிலும் தங்கியுள்ளது.

ஏற்கனவே தீர்வுத் திட்டத்தில் அரசாங்கம் இறுகிப்போய்விட்டது. இனி யுத்தத்தில் தோல்வியடைந்தால் நாணயத்தின் மறுபக்கம் போல் யாப்புச் சீர்திருத்தம் பெரும் நெருக்கடிக்குள்ளாகும். இந்நிலையில் மேற்படி மூன்று முக்கிய விவகாரங்களிலும் முறையே இறுகிப்போன நிலை, தோல்வி, பெரு நெருக்கடி என ஒன்றுடனொன்றாய் மூன்றும் இணையுமிடத்து அடுத்த ஆண்டின் முற்பகுதியைச் சேர்ந்த சில மாதங்களைத் தொடர்ந்துவரும் காலத்தில் அரசாங்கம் பெரிதும் செயலற்ற நிலைக்குத் தள்ளப்படலாம். ஆதலால், இதை வெட்டியாட அரசாங்கம் யுத்தத்தில்தான் தனது கவனத்தைப் பெரிதும் திருப்பும்.

அரசாங்கம் உள்நாட்டு வெளிநாட்டு ரீதியிலான அனைத்து அரசியல் இராஜதந்திர இராணுவ நடவடிக்கைகளையும் வளங்களையும் யுத்தத்தை நோக்கி ஒருங்கிணைத்தும் ஒன்றுதிரட்டியும் வருகின்றது. அதேவேளை விடுதலைப் புலிகள் "ரிவிரச" காலத்தில் காணப்படுகின்றார்கள். குறிப்பாகப் பீரங்கித் தாக்குதலில் புலிகளின் பலம் பெரிதும் அதிகரித்திருக்கின்றது. அத்துடன் புலிகள் எதிர் பாராத நேரத்தில் எதிர்பாராத இடத்தில் உயிர் நிலையை அல்லது கேந்திர தாக்குதல்களை செய்வதில் அதிக கவனம் எடுப்பவர்களும் அதில் தேர்ச்சி பெற்றவருமாவார். அதனால், "ஜெயசிக்குறு" இராணுவத்தை நோக்கி அதிகளவு யுத்த நடவடிக்கையாக இல்லாவிட்டாலும் சுமாராக் முல்லைத்திவு இராணுவமுகாம் தாக்குதலுக்குச் சமமான அளவில் அல்லது இராணுவ உயிர்நிலையம் ஒன்றில் ஓரிரு கேந்திர இராணுவத் தாக்குதல்களைப் புலிகள் அரங்கேற்றுமிடத்து அது இராணுவத்தின் முழுத்திட்டத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தி முழு இராணுவ உடலையும் சுருண்டு செயலிழக்கச் செய்யக்கூடியதான ஓர் அரசியல் சூழல்தான் தெற்கில் உண்டு. இராணுவத்தின் உயிர்நிலையம் அல்லது கேந்திர நிலையம் பாதிக்கப்படுமிடத்து அரசியல் அரங்கில் உள்நாட்டு ரீதியாகவும், வெளிநாட்டு ரீதியாகவும் தெற்கில் பெரும் கண்டன விமர்சனங்கள் எழும் உண்மையை மறைத்து முற்றிலும் வெற்றிமாலையைச் சோடித்துப் பிரச்சாரப்படுத்திய நிலையில் ஒரு சாதாரண தோல்விகூட பெரும் இராட்சதத் தோல்வியாகத் தெரியும். இந்நிலையில் எதிர்க்கட்சியினரும் அரசாங்கத்தின் உட்கட்சிப் பூசல்களும், பத்திரிகையாளர்களும், வெளிநாட்டு அரசியல் இராஜதந்திர விமர்சகர்களும் அத்தோல்வியை விமர்சிக்கும்போது இராணுவம் நன்கு குழம்பும். அதாவது அரசாங்கம் நாற்புறமும் குழம்பிப்போயுள்ள நிலையில் இப்போது இது இராணுவ உயிர்நிலையத்திலே மட்டும் தொங்கிக் கொண்டிருக்கின்றது. அதாவது ஓரிரு உயிர் நிலையத் தாக்குதல்களினால் அரசாங்கத்தின் உயிர் போய்விடக் கூடிய நிலை உள்ளது.

குடாநாட்டுக்குத் தரைப்பாதை திறக்க வேண்டியதே தனது இராணுவ வெற்றிக்குரிய இலக்கு என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. எனவே, இன்றைய நிலையில் யுத்தத்தின் வெற்றி தோல்வி என்பதற்குரிய மையம் பாதைதிறப்பு உயிர்நிலையத்தின் மீதான தாக்குதல் என்ற சுலோகத்திற்குள் அடங்கிக் கிடக்கின்றது. இந்த யுத்தத்தின் பெறுபேற்றில்தான் சந்திரிகா அரசாங்கத்தின் முழுத் தலைவிதியும் அடங்கியிருக்கின்றது.

வரப்போகும் சில மாதங்கள் எல்லா வழிகளிலும் சோதனைமிக்க காலங்கள்.

## முடிவுரை

ஒரு கத்தரிக்கோலின் இரு அலகுகள் எனத் தீர்வுத்திட்டத்தையும் இராணுவ நடவடிக்கையையும் சந்திரிகா முன்வைத்தார். ஆனால், இந்த இருகூர் முனைகளும் தமிழரைக் கத்தரிக்கின்ற ஒரு தொழிலையே புரிகின்றன.

தமிழ் மக்களுடைய பிரச்சனைக்கு நியாயபூர்வமான தீர்வைக் காணவேண்டும் என்பதில் எந்தவொரு சிங்கள ஆட்சியாளருக்கும் ஒருபோதும் அக்கறையில்லை. பிரச்சனைகள் பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்து அதிக நிர்ப்பந்தங்களை அவை ஏற்படுத்தும்போது மட்டும்தான் இதன் நிமித்தம் தமிழ் மக்களின் உரிமைகள் பற்றியும் சிங்கள ஆட்சியாளர் சிலாகித்துப் பாசாங்கு பண்ணிப் பேசுவர்.

நெருக்கடிகளிலிருந்து தப்பிப் பிழைப்பதற்கான ஒரு மார்க்கமாக மட்டுமன்றி தமிழரை மேலும் ஒடுக்கக்கூடிய ஒரு மார்க்கமாகவும் தீர்வைப் பற்றி அவர்கள் கதைப்பர். அரசியல் தீர்வு காண்பதில்லை அல்லது அப்படித் தீர்வைக் காணமுடியாதென்பதில் அவர்கள் (சிங்களத் தலைவர்கள்) உறுதியாகவும் தெளிவாகவும் உள்ளனர்.

தமிழரின் உரிய உரிமைகளைத் தான் வழங்க மிகவும் விரும்புவதாகவும், சந்திரிகா காட்டிக்கொள்வதுடன் அதற்காகத் தான் மிகவும் போராடுவதாகவும் காட்டிக்கொள்கின்றார். இறுதியில் அவர் பின்வருமாறு சொல்வார். தீர்வைக் காணத்தான் விரும்பினேன். மிகவும் நன்றாக விரும்பினேன். அதற்காகப் போராடினேன், மிகவும் நன்றாகப் போராடினேன். ஆனால், பிரச்சனை என்னை மேவி எனது கைகடந்து சென்றுவிட்டது. நான் என்ன செய்வது?!..?!!... ?!!! இருதரப்பிலும் உள்ள தீய சக்திகள் இதனைக் குழப்பிவிட்டனர். எதிர்க்கட்சியினரும் சில வகுப்புவாதிகளும் இதனை எதிர்த்துக் கெடுத்துவிட்டனர் எனக்கூறி சந்திரிகா சுலபமாகவே கைநழுவிவிடுவார். இது சிங்கள இனவாதத்தின் சிறப்பியல்புகளில் ஒன்று.

முன்னைய சிங்கள ஆட்சியாளர்களைவிட சந்திரிகா ஒருபடி முன்னே நிற்கின்றார். அரசியற் சம்பிரதாய நிர்வாக அமைப்பை அவர் மிக அதிகமாகப் பயன்படுத்துகின்றார் என்பதே அது. தீர்வுத்திட்டத்திற்கான ஆலோசனை வரைபு, சமர்ப்பிப்பு, தெரிவுக்குழு, திட்டவரைபு (உத்தியோகபூர்வமற்ற சிங்கள ஆணைக்குழு), பிரேரணை அல்லது வெள்ளை அறிக்கை, பின்பு சட்டமூலம் பொதுசன வாக்கெடுப்பு என இப்படி மிகப் பல சம்பிரதாயங்கள். இவருக்குமுன் இப்படி மிகப் பெரிய சம்பிரதாயங்களைப் பின்பற்றிய சிங்களத் தலைவர் எவரும் இல்லை. இவ்வாறாக அரசியல் நிர்வாகச் சம்பிரதாய அமைப்பின் அனைத்துப் படிமுறைகளுக்குள்ளாலும் தீர்வுத்திட்டத்தை இழுத்து வருவதன் மூலம் இனப்பிரச்சனையை ஒருபுறம் காலங்கடத்துவதும், மறுபுறம் அதன் ஒவ்வொரு படிக்கட்டிலும் வைத்து வெட்டிச் சுருக்குவதும் இப்படி நீண்ட இருமுனைகளுக்கூடாக எதிர்ச்சக்திகளைப் பெரிதும் வளர இடம்விட்டுவிட்டு இறுதியில் தீர்வைக் குழப்பிவிடுவதும் அவரின் திட்டமாகவுள்ளது. இவ்வாறு பல சம்பிரதாயங்களையும் கடைப்பிடிப்பதன் மூலம் தனியொரு முன்னுதாரணம்மிக்க ஜனநாயகவாதியாகப் பாசாங்கு செய்துகொண்டு அதனையே பிரச்சனையைக் குழப்புவதற்கான ஒரு வழியாகவும் கையாண்டுள்ளார். அதாவது ஒருபுறம் ஜனநாயகவாதியான தோற்றம், மறுபுறம் அதுவே பிரச்சனையைக் குழப்புவதற்குமான வழியுமாக இரண்டையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக இணைத்துள்ளார்.

ஜனநாயகம் என்பது ஒரு இனத்தின் பெரும்பான்மை பலத்தை இன்னொரு இனத்தின் மீது திணிப்பதல்ல; அளவாற் பெரிய இனத்தின் எண்ணிக்கை அல்ல; ஓர் இனத்தின் தலைவிதியை இன்னோர் இனம் தீர்மானிப்பதல்ல; ஓர் இனம் தனது தலைவிதியைத் தானே தீர்மானித்துக் கொள்ளக்கூடியதாய் அமைவதுதான் ஜனநாயகம். ஓர் இனத்தின் தலைவிதியை பல இனங்களைக் கொண்டுள்ள ஒரு நாட்டில் நாடு தழுவிய பொதுசன வாக்கெடுப்பால் (Referendum) தீர்மானிக்க முடியாது. அது குறித்த இனத்தின் மத்தியில் நடாத்தப்படுகின்ற ஒப்பம்கோடல் (Plebiseite) முறையால் தீர்மானிக்கப்பட்டால்தான் ஜனநாயகம் என்று கொள்ளப்படும். அதேவேளை ஓர் இனத்தின் ஒரு பகுதியில் மட்டும் வாக்கெடுப்பை நடாத்தி அந்த இனத்தைத் துண்டாடும் செயலும், தீய உள்நோக்கம் கொண்டவையும் ஜனநாயக நடத்தைக்கு முற்றிலும் பிழையானதுமாகும். எனவே, இலங்கையின் சிங்கள ஆட்சியாளர்களால் முன்வைக்கப்படும் ஜனநாயகம் என்பது ஓர் இனத்தை ஒடுக்குவதற்கு முற்றிலும் வசதியா, அளவாற் பெரிய இனத்தின் முன்வைக் கப்பட்டுள்ளதெனலாம்.

தமிழ் மக்களுக்கு ஏதாவது கொடுத்து அவர்களின் பிரச்சனையைத் தீர்த்து வைப்பது ...ன்ற ஓரளவு மனமாற்றம் சிங்கள மக்கள் மத்தியில் கடந்த இரு தசாப்த யுத்த சூழலில் ஏற்பட்டுள்ளதாயிலும், சிங்கள இனமேலாதிக்கவாதிகள், ஆட்சியாளர் என்போர் இதற்கு உண்மையில் எதிராகவுள்ளனர். தமது அரசியற் தேவைகளுக்காக இனப் பிரச்சனையை அவர்கள் பேணவிரும்புகிறார்கள். உண்மையில் சிங்கள அரசியலில் இனமேலாதிக்கம் பெரிதும் ஸ்தாபிதம் பெற்றுவிட்டது. அவ்வாறான ஸ்தாபிதத்தைப் பேணுவதன் மூலம் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படக்கூடிய எந்தவொரு அரசியல் பொருளாதார சமூகப் பிரச்சனைகளையும் நெருக்கடிகளையும் தேவையேற்படும்போது எந்தவொரு முக்கிய சிங்களக் கட்சியாலும் அந்த நெருக்கடியை இனவாதத்தை நோக்கி இழுத்துச் செல்லவும், அதிற் தரித்து நிற்கவும், அதனால் தனது பிரச்சனைகளை உருமறைப்புச் செய்யவும் முடியும்.

ஜனாதிபதிமுறை ஒழிப்பு, ஏனைய யாப்புச் சீர்திருத்தங்கள் மற்றும் பொருளாதாரப் பிரச்சனைகள் என்பனவெல்லாம் தற்போது "சமாதானத்திற்கான யுத்தத்தில்" மையம் கொண்டும் உருமறைப்புப் பெற்றுமுள்ளன. இவ்வாறு சிங்கள அரசியற் பிரச்சனைகள் இனவாதத்தில் புகலிடம் தேடும் ஒவ்வொரு கட்டத்திலும் தமிழர் அதிற் பலிகொள்ளப்படுவது இலங்கை வரலாற்றில் மிகவும் துயரம் தோய்ந்த ஒரு அரசியற் போக்காகும்.

யுத்தத்தால் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள இழப்புகளும், துயரங்களும், யுத்தபீதியும் தமிழருக்கு ஏதாவது கொடுத்துச் சமாதானம் செய்ய வேண்டும் என்ற மனமாற்றத்தை அவர்களிடம் ஏற்படுத்தியுள்ளதைக் காணலாம். ஆனால், தமிழரை முற்றிலும் தோற்கடித்துவிட்டால் அவர்களுக்கு எதுவும் கொடுக்கத் தேவையில்லை என்ற மேலாதிக்க எண்ணம் சிங்கள மக்களிடம் வேரூன்றியுள்ளது. இதில் இரட்டைப் பந்தாட்ட வீராங்கனையாக சந்திரிகா மக்கள் மனங்களைப் பந்தாடி இறுதியில் இனவாதத்தை முற்றிலும் இலட்சியத்துடன் செயற்படுத்துகின்றார்.

அரசாங்கம் தனது நெருக்கடிகளையெல்லாம் யுத்தத்தில் திசைதிருப்பி மையங் கொள்ள வைத்துள்ளது. அத்துடன் அது யுத்தத்தின் பெயரால் வெளிநாடுகளிடம் சரணடையவும் முடியும். தமிழருக்கெதிரான யுத்தத்தின் பெயரால் அந்நியரிடம் சரணடைவதைச் சிங்கள மக்கள் எதிர்க்கமாட்டார்கள். எனவே, பிரச்சனை இறுக இறுக யுத்தம் வளர வளர அந்நியரிடமான சரணாகதியும் வளரும். வெளிநாடுகளைப் பொறுத்தவரையில் அவர்கள் நீதி நியாயம் பற்றிப் பேசினாலும் தமது நலன்களே அவர்களுக்கு முக்கியம். சாட்டுப் போக்கிற்கு நியாயம் கதைக்கக்கூடிய ஓர் ஏது இருந்தால் போதும் அந்தச் சாட்டுத்தான் தீர்வுத்திட்டம். இந்தவகையிலும் தீர்வுத்திட்டம் கொடுமையானது.

இலங்கையில் பிரச்சனையிருப்பது வெளிநாடுகளுக்கு நன்மையாகும். இதனால், வெளிநாடுகள் அதிகம் பேரம்பேசும். பேரம்பேசி இலங்கையின் ஜன்னல்கள் கதவுகள் என்பனவற்றைத் திறப்பது மட்டுமல்ல சுவர்களையே தகர்க்கவும் ஏதுவாகும். அதனால், பிரச்சனை வெறும் யுத்தப் பரிமாணம் கொண்டு தெற்கிற்கும் தலைநகருக்கும் விரிவடைவதால் முதலீட்டையும், வர்த்தகத்தையும் சர்வதேச வர்த்தகவலயப் பின்னலையும் பாதிக்கவியலும். எனவே, யுத்தம் எல்லைக்குமேல் விரிவதனை மேற்கு தற்காலிகமாக விரும்பவில்லை. யுத்தம் வர்த்தகத்தையும் அதற்கான நம்பிக்கையையும் பாதித்தாலும் அந்நியரின் மூலவளக் கொள்வனவை அதிகளவு பாதிக்கமாட்டாது. ஆதலால், சந்திரிகா அந்நியரிடம் மூலவளத்தை இழக்கின்ற சரணாகதிக்கு சிங்கள அரசு மேலும் தீவிரமாகப் போகும் அந்நியர், மேற்குலகத்தவர் அதற்கான கைமாறுகளைச் சிங்கள அரசிற்குச் செய்வர்.

தீர்வுத்திட்டம் உள்நாட்டு வெளிநாட்டு ரீதியில் தமிழருக்கெதிராக வைக்கப்பட்ட ஒரு ஆப்பாகவும், அது எல்லாவழிகளிலும் இராணுவப் பரிமாணமும், இராணுவ உள்ளடக்கமும் கொண்ட ஒரு விடயமாகவும், அது தமிழர் மீதான ஒடுக்குமுறைக்கும் அரசாங்கத்தின் அனைத்து அரசியற் பொருளாதாரத் தேவைக்குமான தந்திரோபாயம் மிக்க ஒரு கருவியாகவும் உள்ளது. ஆதலால், தீர்வுத்திட்டம் முற்றிலும் இனவாதத் தத்துவமும், ஒடுக்குமுறைத் தத்துவமும், அரச இயந்திரத்தை இயங்க வைப்பதற்கான தத்துவமுமாகும். தற்போது தீர்வுத்திட்டத்தின் அடிப்படையிலான யுத்தத்தில் அரசாங்கத்தின் அனைத்து நெருக்கடிகளும் புகலிடம் தேடியுள்ள சூழலில் யுத்தத்தில் அரசாங்கம் தோல்வியுற்றால் அல்லது வெற்றியீட்ட முடியாது போனால் தன் அனைத்து நெருக்கடிகளும் விசுவரூபம் எடுத்தாற்போல் கப்பும் வளையும் ஒன்றய்ப் பொறுக்கும் நிலையேற்படும்.

58 நெருக்கடி பண்டாரநாயக்காவை வீழ்த்தியது.

87 நெருக்கடி ஜே. ஆரை வீழ்த்தியது.

98 நெருக்கடி......?

★★

www.tamilarangam.net



## இரு வாரத்துக்கொருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

அன்புச் சகோதரமே!

நவாலியில் அகதிகளை சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் தஞ்சமடையுமாறு கோரிய சிறீலங்கா அரசு, பின்னர் அத்தேவாலயத்திற்கு மேல் குண்டு போட்டு சிறு குழந்தைகள் பெண்கள் வயோதிபர்கள் உட்பட 200க்கும் அதிகமான அப்பாவி மக்களைக் கொன்றும் நூற்றுக்கும் அதிகமான அகதிகளைக் காயமடைய வைத்தும் வெறித்தனம் நடாத்திய மூன்றாவது ஆண்டு நினைவு 09. 07. 98ல் யாழ்குடா நாட்டில் நினைவுகூரப்பட்டது.

ஆனால் - இன்றும் சிறீலங்கா - அதே இன அழிப்புக் கொலை வெறியுடன் தமிழ் மக்கள் மீது தனது இனவெறித் தாக்குதல்களைத் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. கடந்த களத்தில் பத்திரிகை வெளிவந்தது முதல் 11. 07. 98க்கு இடைப்பட்ட காலத்தில், எங்கள் மக்கள் மீது சிறீலங்கா இராணுவம் நடாத்திய கைதுகள்- கொலைகளில் எமக்கு கிட்டிய சிலவற்றை செல்வி கலாநிதி கந்தசாமி கொலை நீங்கலாக இங்கு தொகுத்து தருகிறேன். படித்துப் பாருங்கள் எங்கள் உடன் பிறப்புக்கள் படும் பாட்டை.

வடமராட்சி - குடத்தனையில் ஆனி 27 ம் திகதி 18 வயதான ராஜேந்திரம் குமுதா என்ற தமிழ்ப் பெண் சிங்களப் படையினரால் கைதாக்கப்பட்டுள்ளார். இதே தினத்தில்- கோணாவில் பகுதியில் சிங்களப் படையினர் நடாத்திய தாக்குதலின் விளைவாக 3 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

மாங்காட்டைச் சேர்ந்த 35 வயதான செல்லத்துரை யோகராசா, வல்லிபுரம் - விஸ்ணு கோவிலுக்கு அருகே வைத்துச் சிங்களப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இதற்கு இரு தினங்களுக்கு முன்பாக- தும்பளையில், 30 வயதான மனோ மயில்வாகனம் கைதாக்கப்பட்டார். மனோ மயில்வாகனத்தின் சகோதரியும் ஏற்கனவே சிங்களப் படைகளால் கைதாக்கப்பட்டு அடைத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதே தினத்தில், எழுதுமட்டுவாளில் 23 வயதான வைகுந்தம் தனுஷ்கரன், செபஸ்ரியாம்பிள்ளை ஆகிய இரு இளைஞர்கள் சிங்களப் படைகளின் கைதுக்குள்ளாகினர்.

வவுனியாவில் - சாஸ்திரிகூளாங்குளத்தில் 16 வயது மாணவனான யோகராசா அற்புதநாதனை சிறீலங்காப் படையினர் கைது செய்துள்ளனர். இவரை விடுவிக்க சர்வதேச தொண்டர் அமைப்பு ஒன்று கடுமையாக முயன்றபோதும் சிறீலங்கா இராணுவத்தினர் அதற்கு இணங்கவில்லை.

மட்டக்களப்பு - மகிழடித்தீவில் சிறீலங்காப் படையினர் நடாத்திய எறிகணை வீச்சில் 18 வயது இளையதம்பி யசோதினி, அவரது தங்கையான 14 வயது ஜீவராணி ஆகிய இருவரும் துடிதுடித்து இறந்தனர். அவர்களின் தந்தை இருகால்களையும் இழந்துள்ளார். இந்த எறிகணைத்தாக்குதலில் கணபதிப்பிள்ளை என்ற மற்றொருவரும் இறந்துள்ளார்.

வாழைச்சேனை இராணுவமுகாமில் இருந்து சிங்கள இராணுவத்தினர் சுட்டதில் புதுக்குடியிருப்பு, வாணி வித்தியாலயத்தில் படிக்கும் பள்ளி மாணவிகளான 13 வயது ஞானராஜா ராணி, 14வயதான வனிதா யோகராசா ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

இதேவேளை, மட்டக்களப்பு மாநகரசபை பொறியியலாளர் ரீ.கே. வில்சன், ஓட்டமாவடி பிரதேசசபையின் நிர்வாக சபையில் பணிபுரியும் எஸ். சிவகுருநாதன், மட்டக்களப்பு பல்கலைகழக விரிவுரையாளரான எஸ். வர்ணகுலசிங்கம் ஆகியோரை விடுதலைப் புலிகளுடன் இரகசியத் தொடர்பு வைத்திருந்தார்கள் என சிறீலங்கா இராணுவம் கைதாக்கிச் சென்றுள்ளது.

இதற்கிடையே, சிங்களப் படையினர் தமிழ் மக்களைக் கட்டாய வேலைக்கு உட்படுத்தியும் கொடுமைகள் புரிந்தும் வருகின்றனர். கடும் வேலை- வேலை செய்யும் பொழுது அடித்துச் சித்திரைவதை செய்தல் - உணவு தண்ணீர் கொடுக்காது துன்புறுத்தல் போன்ற கொடுமைகளால் சிறீலங்கா ஆக்கிரமிப்பு பகுதிகளில் தமிழ் மக்கள் தாங்கொணாத் துன்பம் அனுபவிக்கின்றனர். பளைப் பகுதியில் 42 வயதான முத்துத்தம்பி தங்கவேலு இக்கொடுமை தாங்க மாட்டாது சுருக்கிட்டுத் தற்கொலை செய்துள்ளார்.

இவைகள் எல்லாம் அங்கே நடைபெறும் இராணுவக் கொடுமைகளில் சில மட்டுமே. இந்நிலையில் புலம்பெயர் தமிழர்களாகிய நாம் எமது தாயகத்தில் எதுவுமே நடக்காதது போல் அமைதியாக இருக்க முடியாது. அங்கு நடப்பவற்றை உலகுக்கு அறிவிக்கும் செய்தியாளர்கள் நாம் மட்டுமேதான் என்பதை மறந்துவிட முடியாது. அங்கு உள்ளவர்களுக்கு உதவுபவர்களாகவும் நாம் மட்டுமே இருக்கின்றோம் என்பதையும் மறக்க முடியாது. தற்போது தமிழீழ விடுதலையை விரைவு படுத்துவதற்கான பந்து நம் கைகளிலேயே உள்ளது என்பது உண்மை. எத்தனையோ தியாகங்களினால் தமிழீழ விடுதலைப் புலிகளும் தமிழீழ மக்களும் தமிழீழத் தாயக மீட்புப் பணியின் இறுதிக் கட்டத்தை அடைந்து நிற்கின்றனர். இவ்வேளையில், நாம் கைகொடுத்துத் தூக்கி விடாவிட்டால் வரலாறு எம்மை மன்னிக்காது. இந்த இராணுவக் கொடுமைகள் எல்லாம் சிறீலங்கா படைகள் எமது தாயக மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் வரை ஏதாவது ஒரு வடிவத்தில் தொடர்ந்து கொண்டே இருக்கத்தான் போகிறது. இவை நீங்கி எம் மக்கள் அமைதிபெற ஒரே வழி படைகளை விரட்டியடிப்பது ஒன்றேயாகும். இது விரைவு பெற இயலுமான எல்லாவற்றையும் செய்வது ஒன்றே நாம் நம் மக்களுக்குச் செய்யக் கூடிய உதவியாகும்.

அன்பின் ஆசிரியர்.




இதுவே சந்தர்ப்பம் எழுந்திரு தமிழா
இன்னுமா உறக்கம், ஏன் இன்னும் தயக்கம்?
அலைபோல் எதிரி திரண்டு வந்தாலும்
அக்கினித் தலைவன் எம்முடன் இருக்கையில்
மலைபோல் நிமிர்ந்து மண் மீட்கும் மறவரின்
கரங்களைத் தூக்கி நிமிர்த்திட நீவிர்
நிதியினை வாரி வழங்கிட
இதுவே சந்தர்ப்பம் எழுந்திரு தமிழா!

-செ. தமிழினியன், யேர்மனி.

புலம்பெயர் தமிழினமே
பலம் பல பெற்றவன் நீயாமே
ஈழத்திலோ குருதி ஆறுகள்–
களத்திலோ எம் தமிழ் வேங்கைகள்
ஆதவனாம் எம் தலைவர் வழியில்
சாதனை செய்! கயவர் அழிவில்–
நாளை என நாட்கள் நகர்த்தாமல்
தோளை கொடுக்க இதுவே சந்தர்ப்பம்!

-திருமதி வி. கதிர், பிரான்ஸ்.

புத்ததுறவியும் புத்திஜீவியும் போர்வெறி கொண்டு
தமிழினத்தை அழிக்க துணிந்த பின்பும்
இன்னுமென்ன தயக்கம் தமிழா, பொருதிட எழு!
விடுதலையின் விளிம்பில் தமிழினம்–
விலங்குடைக்க இதுவே சந்தர்ப்பம்
தரணியிலே யாருக்கும் கிடைத்திடா
தலைவன் பாதையிலே இன்றே களந்தனில் நட!
இல்லையேல் புலிவீரனின் கரத்தை பலப்படுத்து!

-செ. ஈழமணி, பிரான்ஸ்.

## இதுவே சந்தர்ப்பம்...

தமிழா! வரலாற்றில் – சிகரத்தில் இருந்து
வழுக்கி விழுந்து, இனவாதிகளின் காலில்
மிதிபட்டுக் கிடந்தவன் நீ.
எங்கள் வானில் பேரொளியோடு ஒரு
ஆதவன் தோன்றினான்–எங்கள் பொற்காலம்
என்று மகிழ்ந்திரு. சாதனை புரிந்திடும்
காவிய நாயகன் கரங்கள் ஓங்கிட
உன்னைக் கொடுத்திரு. இதுவே சந்தர்ப்பம்.

-பரதன், இலண்டன்.

கூனிந்த விழுதுகளே பரந்த விருட்சத்தை
நிமிர்ந்து பார்ப்பீர்.
நீருக்கும் வேருக்குமான உறவை
தறித்து வீழ்த்திய தருக்கர்களை பார்
இன்றும் உன்வேர் அவளுக்குள் ஆழமாகத்தான்
பதிந்திருக்கிறது. தயங்காமல் எழுவீர்
எல்லையை பிரித்து எமை சரித்தவனை
ஒழிக்க இதுவே சந்தர்ப்பம் எழுவீர்!

- கரவை கலா, யேர்மனி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இன்னும் எத்தனை யூலைகள்?

எத்தனை ஆண்டுகளாய்
எங்கள் யூலைகளில்
வசந்தங்கள் வீசவில்லை!
வந்தவைகள் எல்லாம்
கோர வாய்களுக்கு
உயிர்த் தீனிகளை
வாரி இறைத்தவைதான்.
கொலைகளும் ஓலமும்
கொண்டு சேர்த்தவைதான்.

அந்த யூலையில்—
சென்ற் பீற்றரின் வாசலில்
அக்கினி ஏந்திய
அந்நியன் பறவைகள்
குந்தி, எழும்பி, கோரத்தாண்டவம்
ஆடிய வேகத்தில்,
எத்தனை வித்துக்கள்—
எத்தனை கொழுந்துகள்—
எரிந்து, பொசுங்கிப் போயின.
சூழ இருந்து சுற்றமே
பார்க்கையில்
ஆழ்ந்து உறங்கிய அரும்புகள்
உதிர்ந்தன.
நிறைந்த கொத்தாய்
மலர்ந்த கனவுகள்
விழித்த நிலையிலே
கலைந்து போயின.
பிறவிக் கடலுக்குள்
மறைந்து கிடந்த
முத்துக்கள் எதுவுமே
குளித்து எடுக்காமல்
பூகம்பம் வந்து எங்கள்
கடலே கரைந்தது.
சொத்துக்கள் எதுவும் வேண்டாம்
அற்ப சுகங்கள் எதுவும்
வேண்டாம்
சித்தம் இனிக்க, சிறு
நிம்மதி வேண்டும் என்று
அத்தனையும் துறந்து,
அமைதி வேண்டும் என்று. . .
மக்கள் கூட்டமது

அந்த யூலையில்—
சென்ற் பீற்றரின் வாசலிலே. . .
எத்தனை உடலங்கள்
எதிரிதன் வேட்டைப்
பற்களுக்கு இரையாகிப்
போயின!

குருதியும் நிணமுமாய்—
குளித்து, தாயகம்
சகதியாய் இருப்பதை
ரசிக்கும் குரூரியாய்
எதிரி எம்மண்ணில்
ஆடிடும் சன்னதம். . .
இன்னும் எத்தனை ஆண்டுகள்
வசந்தங்கள் எல்லாம்
கறுப்பாய் கழியும்?

பலிக்காடாய் எமது மண்ணும்
பலிக்கடாவாய் எமது உயிரும்
செத்துத் தொலைந்தே
போயிடினும். . .

நவாலியும் குடத்தனையும்
கொக்கட்டிச் சோலையும்
சத்துருக்கொண்டானும்
இன்னும் இன்னும்
எத்தனை வரினும். . .!

கிருசாந்தி, ரஜனி,
கோணேஸ்வரி, கலாநிதி. . .
இப்படி இப்படி
எத்தனை உதிரினும். . . !

வந்த நாடுகளில்
வசந்தங்களை ரசித்து
பலசோடி கண்களுக்கு



வக்கிரங்கள் காட்டி. . .
கறுப்பு மேனிகளுக்கு
கதிர்க் குளிப்பாட்டி. . .
வல்லரசுக் குடைக்கீழ்
வால்சுருட்டி அமர்ந்துகொண்டு
நெஞ்சு நிமிர்த்தி,
மார்பு தவழப் பொன்னும் நகையும்
பூணும் நாள் மாறி
எங்கள் சொந்த மண்ணில்
வயல்வெளியில்—குளக்கரையில்—
நெடிதுயர்ந்த சோலையோரம்—
சுதந்திரத் தென்றல் வீச
நெஞ்சு முட்ட உள்வாங்கி
குஞ்சுகளும் கிழங்களும்
ஒன்றாய் சேர்ந்து நின்று
இனிய வசந்தம் கொண்டாடும்
நாள் வரட்டும்.
இனஎதிரி என்றபதம்
இல்லாது போயொழிந்து
கார்த்திகை மைந்தனவன்
காட்டும் வழிநடந்து
நெஞ்சினிக்க வசந்தம்
நாம் ரசிக்கின்ற நாள் வரட்டும்.

-வதனிலா